

# செங்காந்தள் - வைணவம்

முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் ஜெ.கவிதா



புத்தகக்குறிப்பு

9 789391 115487



# செங்காந்தள் - வைணவம்

# Title Verso

**TITLE OF THE BOOK**: **Chenkaantal - Vainavam**

**புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - வைணவம்**

**EDITORS** : **Dr D. Maheswari & Dr J. Kavitha**

**தொகுப்பாசிரியர் : முனைவர் த.மகேஸ்வரி & முனைவர் ஜெ.கவிதா**

**FIRST EDITION** : 2021

**முதல் பதிப்பு** : 2021

**PAGES/பக்கங்கள்**: 137

**PRICE/விலை** : 150

**ISBN NUMBER** : 978-93-91115-48-7

**CONTACT NUMBER**: 8526769556

**PUBLISHER** : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**PRINTER** : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**பதிப்புரிமை/Copyright © 2021 – முனைவர் த.மகேஸ்வரி /Dr D.MAHESWARI**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தின் எப்பகுதியும் ஆசிரியர்களின் அனுமதியின்றி அச்சிடப்படக் கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# மதிப்புரை

**முனைவர் ஜெ. கவிதா** அவர்கள் ***நம்மாழ்வாரின் இறையனுபவம்*** என்ற தலைப்பில் நம்மாழ்வாரின் இறைச்சிந்தனையை நல்ல உவமைகளுடனும், தமிழ்மொழி வளமையுடனும், ஆசிரியர் மாணவர்களுக்கான இலக்கணத்துடனும், இசை குறித்தச் செய்தியுடனும், வேதக் கருத்தையும் கூறி அனைத்து உயிர்களிடத்தில் அன்பு செலுத்தி இறைவனிடம் சராணாகதி அடையச் செய்தலையும் மற்றும் சமூகபுரட்சி மூலம் சமுதாய மாற்றத்திற்கு வித்திட்டவர் நம்மாழ்வார் போன்ற பல இறைப்பொருண்மைகளில் செய்திகளை ஆராய்ந்து இப்புத்தகப் பகுதியாக வடிவமைத்துள்ளார். நம்மாழ்வார் நாராயணன் அடியார்களில் முதன்மையானவர். தம் பாசுரங்களில் நான்கு வகை யாப்புகளையும் பயன்படுத்திப்பாடி இருக்கிறார். உலகப் பொருளில் எல்லாம் இறைவனைக் காண வேண்டும் என்றும் இறைவனிடம் அனைவரும் அன்பு செலுத்தி அவனை சரணாகதி அடைய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இசையால் பாசுரங்களைப்பாடி மக்களிடையே இறைநம்பிக்கையை வளர்த்து, வேதக்கருத்தை தமிழ்மொழியில் பாசுரங்களாகப் படைத்து தமிழ்மொழியையும் வளர்த்துள்ளார். அதனால்தான் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று நம்மாழ்வார்

போற்றப்பட்டார். இவ்வாய்வுக்கட்டுரைப் புத்தகப்பகுதியானது நம்மாழ்வாரின் இறையனுபவம் என்ற ஆய்வுக்கு உட்பட்டு சரியான தலைப்பைப் பெற்றுள்ளது. ஆய்வுத்தலைப்புக்கு ஒட்டிய கருத்துக்கள், குறிப்புகள், மேற்கோள்கள், அனைத்தும் தெளிவாக உள்ளன. கட்டுரையின் முடிவு தெளிவாகவும், ஏற்புடையதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையானது பல்வேறு ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐய்யமில்லை.

**முனைவர் ந. பிரதீபா** அவர்கள் **வைணவத்திலகம் இராமாநுஜர் - ஓர் பார்வை** என்ற தலைப்பில் இராமானுஜரின் பிறப்பு தொடங்கி இளமைப்பருவம், குரு-சிஷ்ய உறவு முறை, அவருடைய சமூக சீர்திருத்தச் சிந்தனைகள், சமயப்புரட்சி, இயற்றிய நூல்கள், தத்துவார்த்தக் கொள்கைகள் என பல பொருண்மைகளில் ஆய்வினை மேற்கொண்டு தெளிவாக விளக்கியுள்ளார். நாதமுனிகள் முதல் வந்த பூர்வாசாரியர்கள் வரை யார் வந்தாலும் அவர்கள் உபதேசம் பெறுவதற்குத் தகுதியானவரா என்று சோதித்த பின்பே உபதேசிக்கும் முறை இருந்துள்ளது. இதனால் ஶ்ரீவைஷ்ணவ நெறி குறுகிவிடும் என்று எண்ணிய இராமாநுஜர், இப்படி ஒரு வரம்பு இருக்கக்கூடாது, யார் வந்தாலும் அவர்களுக்கெல்லாம் ஶ்ரீவைஷ்ணவ தத்துவ உண்மைகளைக் கூறுங்கள் என்று அருளிச் செய்து வரம்பை அறுத்தவர். ஆய்வுக்கட்டுரையில் ஆய்வுத்தலைப்பு குறித்தக் கருத்துக்கள், குறிப்புகள்,

மேற்கோள்கள் அனைத்தும் தெளிவாக உள்ளன. வைணவம் சார்ந்த குறிப்புச்சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளது.

**திருமதி சே. பிரேமா** அவர்கள் **வைணவம் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் வழிபாட்டு முறைகளும்** என்ற தலைப்பில் இறைசக்தியின் ஆக்கத்தன்மை, வைணவ தெய்வத்தின் சிறப்புகள், வழிபாட்டு முறைகள் தீபஆராதனை விளக்கங்களும் அவற்றின் பயன்களும், காலபூசைகள் மற்றும் அவற்றின் பயன்கள் மற்றும் விசேடகாலங்களில் பாடப்படும் திவ்ய பிரபந்தங்கள் முதலான பாடுபொருள்கள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். இவ்வாய்வானது ஆய்விற்கு உட்பட்ட வடிவில் அமைந்துள்ளது. ஆய்வுத்தலைப்பிற்குரிய மேற்கோள்கள் மற்றும் கருத்துக்களை விளக்கவுரையுடனும், ஒப்பாய்வு முறையிலும் பதிவு செய்துள்ளார். இத்தகு தெய்வவழிபாட்டினால் மானுட உள்ளத்தில் வேறுபட்ட சிந்தனைகள் விலக்கப்பெற்று ஆழ்ந்த பக்தியின் ஈடுபாட்டினைப் பெறமுடியும் என்பதனை இந்நூலில் இப்பகுதியின்வழி அறிய இயலும். இறைவனைப் போற்றிப்பாடுதல், வழிபாடு செய்தல் குறித்த இவ்வாய்வானது ஆய்வாளர்களுக்கு ஏற்ற சான்றுகளை வழங்கக்கூடியதாக அமையும்.

**முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி** அவர்கள் **மதுரகவி ஆழ்வாரின் பக்தி ஆளுமை** என்ற ஆய்வுக்கட்டுரையில் மதுரகவியாழ்வார் “நம்மாழ்வாரை” தன்னுடைய இறைவனாக

நினைத்து நம்மாழ்வாரைப் போற்றி ‘கண்ணி நுண் சிறுத்தாம்பு’ என்ற வைணவ சமய நூலினைப் படைத்து பலநிலைகளில் தாம்கொண்ட பக்தியினை வெளிப்படுத்தியத் திறத்தினை அழகாக எடுத்துரைத்துள்ளார். மதமானது மனித ஆன்மாவை செழுமைப்படுத்தி துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தி அடைய செய்கிறது. ஆழ்வார்கள் தங்கள் மனதில் ஏற்பட்ட தெய்வீக அனுபவத்தை தங்கள் பாசுரங்களில் பதிவு செய்து, வேதத்தின் சாரத்தைத் தமிழில் மொழிபெயர்த்து பக்தி நெறியைப் பரப்பினார்கள்.

மதுரகவி ஆழ்வாரின் பக்தி ஆளுமை ஆய்வுக்கட்டுரையில் இறைப்பக்தியின் மேன்மையை அடைவதற்கு வேண்டிய அனைத்து செய்திகளும் மையக்கருத்தாகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட குறிப்புகள் தலைப்புக்கு தொடர்பாக அமைந்துள்ளன. இவ்வாய்வுக்கட்டுரை புத்தகப் பகுதியானது பல்வேறு ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உறுதுணையாக அமையும்.

**முனைவர் த. மகேஸ்வரி**

**முனைவர் ஜெ. கவிதா**

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | நம்மாழ்வாரின் இறை அனுபவம்<br>முனைவர் ஜெ. கவிதா | 1-32 |
| 2. | வைணவத்திலகம் இராமாநுஜர் - ஓர் பார்வை<br>முனைவர் ந. பிரதீபா | 33-68 |
| 3. | வைணவம் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் வழிபாட்டு முறைகளும்<br>திருமதி. சே.பிரேமா | 69-109 |
| 4. | மதுரகவி ஆழ்வாரின் பக்தி ஆளுமை<br>முனைவர் ஸ்ரீ . ஸ்ரீஜெயந்தி | 110-137 |

# The Divine Experience of Nammazhvar

**Dr J. Kavitha,** Assistant Professor, Department of Tamil,
PSGR Krishnammal College for Women, Coimbatore-04,
Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985**
**DOI: 10.5281/zenodo.5712086**

## Abstract

*Nammalvar is one of the best Adiyars of the Narayana Adiyars. He is the first among the twelve Adiyars. He had used the four types of 'Yappu' in his psalms. He has sung the hymns as the consolidation of the Four Vedhas. His songs are termed as 'andhadi' and remain the epitome of his poetic talent. All hymns enter the hearts of the readers like the forceful cascade and create ecstasy. Four books are very important. This book contains 1102 psalms. Divinity is the experience of God. He emphasizes all to see God in all matters and to love and surrender to HIM. He has sung the hymns with the accompaniment of music and evinced the Vedic concepts in the Tamil language. Therefore, he was entitled as 'Vedham Tamil seidha Maran' in Tamil. Thus, Nammalvar has made a social reformation and created a suitable social setting of life through evolution. The research chapter is dedicated to Nammalvar.*


Isbn Number: 978-93-91115-48-7

**Keywords:** Nammazhvar, Narayanan, Devotional thought, Thiruvaimozhi, Thirupaarkadal.

**References**

[1] Dr. Kamalakkannan. *Four Thousand Divyaprabandham.* Vardhaman Publishing House, Chennai, 1985.
[2] Sadagopa Ramanujadasan. *Thiruvaimozhi's Text.* Research Publication Center, Chennai, 1990.
[3] Satkrantha Prakasana Sabha. *Nammazhvar Thirumozhi*. Prema Publishing House, Chennai, 1949.
[4] Dr. M. Varatharasanar. *Thirukkural Clarification*. Saivasittantha Nurupathippakalam, Chennai1920.
[5] Adolescent Text. *Tolkappiyam – Economics.* Sharda Publishing, Chennai, 2005.
[6] Nammazhvar Research Coalition. Arulmigu Aranganathaswamy Temple, Srirangam,2011-12.


Isbn Number: 978-93-91115-48-7

# நம்மாழ்வாரின் இறை அனுபவம்

**முனைவர் ஜெ. கவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் - 641004,

தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-3938-1985**
**DOI: 10.5281/zenodo.5712086**

## ஆய்வுச்சுருக்கம்

நம்மாழ்வார் நாராயணன் அடியார்களில் தலைசிறந்தவர். பன்னிரு ஆழ்வார்களில் முதன்மையானவர், தம்பாசுரங்களில் நான்கு வகை யாப்புகளையும் பயன்படுத்தி இருப்பவர். நான்கு வேதங்களின் சாரமாகவும் நான்கு பிரபந்தங்களையும் பாடி இருக்கிறார். இந்நான்கும் அந்தாதியாக அமைந்தவை என்பது அவர் தம் கவித்திறமைக்கு முதற்சான்றாகும். அனைத்து பாசுரங்களும் பள்ளத்தில் விழும் வெள்ளமாக படிப்பவர் உள்ளத்தில் பதிந்து பக்திப்பரவசத்தை ஏற்படுத்துகின்றன. இந்நான்கு நூல்களும் சிறப்புமிக்கது. திருவாய்மொழியாக இந்நூல் 1102 பாசுரங்களைக் கொண்டது. அருளே இறையனுபவமாகும். உலகப் பொருளில் எல்லாம் இறைவனைக் காண வேண்டும் என்றும் உலக


Isbn Number: 978-93-91115-48-7





உயிர்களைப் படைத்த இறைவனிடம் நாம் அனைவரும் அன்பு செலுத்தி அவனை சரணாகதி அடைய வேண்டும் என்றுக் கூறியுள்ளார். இசையால் பாசுரங்களைப்பாடி இறைநம்பிக்கை மக்களிடையே வளர்த்து வேதக் கருத்தை தமிழ்மொழியில் பாசுரங்களாக அமுது படைத்து தமிழ்மொழியை வளர்த்தார். அதனால்தான் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்ற அடைமொழிக்கு உரியவராகிறார். இவ்வாறு நம்மாழ்வார் தான் இயற்றிய பாசுரங்களின் வழியாக மக்களை நல்வழிப்படுத்தி சமுதாய மாற்றத்திற்காக சமுதாயபுரட்சி செய்து நல் ஆரோக்கிய மிக்க சமூகச்சூழலை உருவாக்கினார் என்றால் அது மிகையாகாது. நம்மாழ்வாரை வணங்கி ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளேன்.

**கலைச்சொற்கள்:** நம்மாழ்வார், நாராயணன், இறைச்சிந்தனை, திருவாய்மொழி, திருப்பாற்கடல்.

**முன்னுரை**

**கவி கமகன் வாதியே வாக்கி யெனக்காசில்**
**புவியின்மேல் நால்வர் பலவர். கவிகள் தாம்**
**ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் எனப்**
**பேசுவார் நால்வர்க்கும் பேர் (வெண்பாபாட்டியல்)**

கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வர் ஆவர். கவி என்போர் ஆசு, மதுரம், சித்திரம் வித்தாரம் என

நால்வகைப் பாடல்களை இயற்றுபவர். அரும்பொருளைச் செம்பொருள் நடையாகக் காட்டி விளக்குவோன் கமகன், காரணமும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறன்கோள் மறுத்து தன்கோள் நிறுவுபவன் வாதி, அறம்பொருள் இன்பம் வீடுகளைக் கேட்க கேட்க விரித்துரைப்போன் வாக்கியாவான். இத்தகையோருள் கவியாகவும் கமகனாகவும் வாதியாகவும் விளங்குபவர் நம்மாழ்வார். இப்படிப்பட்ட நம்மாழ்வார் நாராயணன் அடியார்களில் தலைசிறந்தவர். பன்னிரு ஆழ்வார்களில் முதன்மையானவர், தம்பாசுரங்களில் நான்கு வகை யாப்புகளையும் பயன்படுத்தி இருப்பவர். நான்கு வேதங்களின் சாரமாகவும் நான்கு பிரபந்தங்களையும் பாடி இருக்கிறார். இந்நான்கும் அந்தாதியாக அமைந்தவை என்பது அவர் தம் கவித்திறமைக்கு முதற்சான்றாகும். அனைத்து பாசுரங்களும் பள்ளத்தில் விழும் வெள்ளமாக படிப்பவர் உள்ளத்தில் பதிந்து பக்திப்பரவசத்தை ஏற்படுத்துகின்றன. இந்நான்கு நூல்களும் சிறப்புமிக்கது. திருவாய்மொழியாக இந்நூல் 1102 பாசுரங்களைக் கொண்டது.

ஊரின் பெயரால் உலகத்தோர் அழைக்கப்படுவது பெருவழக்கு. ஆனால் தாம் பிறந்த திருக்குருகூர் என்னும் பெயரை தம் பெருமையால் ஆழ்வார் திருநகரி என மாற்றிய அருளானர் இவர் சடகோபர் அந்தாதி பாடிய


Isbn Number: 978-93-91115-48-7

கம்பரால் இவரது திருவாய்மொழி 'ஆராவமுதக் கவி ஆயிரம்' என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும். வைணவ சமயக் கருத்துக்களை மிக மிக எளிமையாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் கூறும் இவரது பாசுரங்கள் அனைத்தும் இலக்கியச்சுவையும் அணிநயமும் வாய்ந்தவை, இருந்தும் தேனாய் பாலாய் அமுதமுமாய்த் தித்திப்பவை, உணர்வுகளை விவரித்துச் சொல்லுவதிலும் கருத்து நலத்திற்கு ஏற்ப வினா விளிகளை பல்வேறு விதமாகப் பயன்படுத்துவதிலும் சொற்பின் வரநிலையணி அமையபடிப்பவர் நெஞ்சில் பதியும் விதமாக அமைப்பதிலும் எச்சங்களை அடுக்கிப் பாடுவதிலும் முத்திரை பதிக்கின்றன. அப்படிப்பட்ட இவர் பாடிய பாசுரங்களில் 'நம்மாழ்வார் இறை அனுபவம்' என்ற தலைப்பு வைத்து ஆய்வுக் கட்டுரையாகத் தொகுத்துள்ளேன்.

**நம்மாழ்வாரின் இறை சிந்தனை**

உலகப் பற்றினையுடைய வாழ்வினைக் கடந்து ஆன்மீக வாழ்வில் முதன்மை பெறுவது இறைச்சிந்தனையால் விளையும் அருளேயாகும். அதே வேளையில் இவ்வுலக வாழ்வினை மேற்கொள்வதற்குப் பொருள் முதன்மைத் தேவையாய் அமைகிறது. ஆதலால் தான் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்று


Isbn Number: 978-93-91115-48-7

கூறினார் வள்ளுவர். இருப்பினும் அருளா? பொருளா? என்கிற போது அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை என்று அருளினையே முதலில் வைத்துக் கூறினார். இவ்வுலக இயக்கங்களுக்கெல்லாம் அடிப்படையாய் விளங்குகின்ற இறைவனை அன்போடு நினைத்திருப்பதால் உடலெங்கும் இன்பம் பரவுவதாக இறையடியவர்கள் உணருகின்றனர்.

**உலகு படைத்தது உண்ட எந்தை அறைகழல்**
**சுடர்ப் பூந்தாமரை சூடுதற்கு அவாவு**
**ஆர் உயிர் உருகி உக்க நேரிய**
**காதல் அன்பில் இன்பு ஈன்தேறல்**
**அமுத வெள்ளத்தானன் (நா.தி.பி. 2579)**

என்ற பாடலில் நம்மாழ்வார் இறைவனாகிய திருமாலை பக்திப் பெருக்கால் எண்ண, எண்ண தேன் போன்ற அமுத வெள்ளத்தில் மூழ்கி இன்பம் அடைவதாகக் குறிப்பிடுகிறார். தேனின் சுவைதான் எத்துணை இனிமை... இதன் சுவையை விரும்பியதாகும் உண்டோ? அத்துணை இனிமையான தேனினைச் சிறிதல்ல இங்கு வெள்ளமாக மிகுந்திருப்பதாகவும் அதில் மூழ்கித் திளைப்பதும் போன்றதே இறைவனாகிய திருமாலை நினைப்பதனால் விளையும் இன்பம் என்கிறார் நம்மாழ்வார். இதன் வழி அவர்தம் இறை அனுபவத்தை நன்கு அறியலாம்.


Isbn Number: 978-93-91115-48-7

## இறைவழிப்பாட்டின் மூலம் அகலும் தீவினைகள்

காக்கும் கடவுளாகிய திருமால் இவ்வுலகின் அனைத்துப் பொருளிலும் உறைந்து காட்சியளிப்பதாக நம்மாழ்வாரின் எண்ணங்கள் அமைகின்றன.

**நானே தனித் தோன்றல் தன்அளப்பு ஒன்று**
**இல்லாதான்**
**தானே பிறர்கட்கும் தத் தோன்றல் (நா.தி.பி.2608)**

என்பதன் வழியாக இறைவனாகிய திருமால் எல்லாமுமாக இருப்பதாக நம்மாழ்வார் உணர்கிறார். இத்துணைச் சிறப்புடைய திருமாலை எண்ணும் போது, அவருடைய திருநாமங்களை உச்சரிக்கும் போது பாவங்கள் அகலுகின்றன என்பது நம்மாழ்வாரின் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை பிறக்க சில உணர்வுகள் தோன்றியிருக்க வேண்டும். இந்த உணர்வு நிலையே நம்மாழ்வாரின் இறை அனுபவமாகும்.

**காலே பொதத் திருந்து கத்துவராம் இனநாள்**
**மாலார்குடி புகுந்தார் என்மனத்தே (நா.தி.பி.2606)**

என்ற பாடல் வழியாக பாவங்கள் அகன்றன எனும் தம் அனுபவத்தை நம்மாழ்வார் பதிவு செய்துள்ளார். நாம் செய்யக்கூடிய வினைகளுக்கேற்ப பிறவியானது மீண்டும் அமைந்து உயிர்களை வாட்டும் என்பது, இதனைத் தடுப்பதற்குரிய ஒரேவழி இறைவனை அடைவதேயாகும்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் (குறள் - 10)**

 Isbn Number: 978-93-91115-48-7

என்று வள்ளவரும் இக்கருத்தினையே கொண்டுள்ளனர் இவ்வாறான நிலையில் தன்னுடைய துன்பங்களை, பாவங்களைப் போக்குவதற்குரிய வழி இறைவழியில் செல்வதேயாகும் என்றும், திருமாலைக் குறித்த சிந்தனைகளால், செயல்களால் தீவினைகள் தன்னைவிட்டு அகன்றதாக நம்மாழ்வார் கூறுகிறார். இங்கு தன் இறை அனுபவத்தின் மூலமாகக் கிடைக்கப்பெற்ற உயரிய நெறிமுறையை நம்மாழ்வார் பதிவுசெய்துள்ளார்.

**கண்ணன் கழல் போற்றும் நம்மாழ்வார்**

நம்மாழ்வார் தன் உள்ளத்தில் குடிகொண்டுள்ள கண்ணனைத் தான் பார்க்கும் பொருளாக அனைத்திலும் காண்கின்றார்.

**உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம்**

**கண்ணன் எம்பெருமான் என்று என்றே. கண்கள் நீர் மல்கி (திருவாய் 6.7.1)**

அதாவது உயிர்வாழ்வதற்கு, உண்ணத்தக்க சோறும், உயிர் பாதுகாத்தற்குப் பருகத்தக்க தண்ணீரும் இன்பத்திற்காக மகிழ்ந்து தின்னத்தக்க வெற்றிலையும் ஆகிய இப்பொருள்கள் அனைத்தும் எனக்குக் கண்ணபிரானே எனப் போற்றுகிறார்.

**கல்லும் கனைகடலும் வைகுந்த வான்நாடும்**

**புல் என்று ஒழிந்தன கொல்? ஏபாவம் வெல்ல**


Isbn Number: 978-93-91115-48-7

**நெடியான் நிறம் கரியான், உள் புகுந்து நீங்கான்,**

**அடியேனது உள்ளத்து அகம். (பெரியதிருவந்தாதி – 68)**

என்ற பாடல்வரியானது நிறத்தால் கரியவறுமான கண்ணன் என் நெஞ்சில் புகுந்து நிலைக் கொண்டான். அடியேனது உள்ளத்தை விட்டுட அவன் நீங்குவதில்லை. அதனால் திரு வேங்கடமலையும், ஆர்ப்பரிக்கின்ற திருப்பாற் கடலும், வைகுந்தம் என்கிற பரமபதமும் புல் முளைத்துப் போயின என்கிறார்.

**புகழும் நல் ஒருவன் என்கோ?**
**பொரு இல் சீர்ப் பூமி என்கோ?**
**திகழும் தண் பரவை என்கோ?**
**நீ என்கோ? வாயு என்கோ?**
**நிகழும் அகாசம் என்கோ?**
**நீள் சுடர் இர்ணடும் என்கோ?**
**இகழ்வு இல் இவ்வனைத்தும் என்கோ?**
**கண்ணனைக் கூவுமாறே (திருவாய் - 34.1)**

என்ற வரிகளானது கண்ணனை பெருமைப்படுத்தி, புகழ்ந்து, பாடுகிறார். ஒப்பில்லாத சிறப்புடைய பூமி என்பேனோ? விளங்குகிற குளிர்ந்த கடல் என்பேனோ? நீர் என்பேனோ? காற்று என்பேனோ? மற்ற பூதங்களைக் காட்டிலும் அதிககாலம் இருக்கிற ஆகாசம் என்பேனோ? மிக்க ஒளியையுடைய இரண்டு சூரிய சுந்திரர்கள் என்பேனோ? இவற்றுள் ஏற்றையும் விடாமல் எல்லாப் பொருளாகவும் இருக்கிறான் என்று சொல்லுவேனோ?

 Isbn Number: 978-93-91115-48-7

யாது என்று கூறுவேன். எனப் புலம்பி, கண்ணன் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற ஒப்பற்ற பரம்பொருள் என்பதை நம்மாழ்வார் இப்பாடல் வரியின் மூலம் விளக்குகிறார்.

**நம்மாழ்வாரின் அவையடக்கம்**

> **உருவெழுதி அயனறியா ஓதவண்ணர் அடிஅடைந்த**
> **மருவெழுதண் உறையூரன் வளர்புகழின்**
>
> **(திருவாய்மொழி பா.1)**

ஓவியர்களாலே உருவம் இத்தகையது என்று எழுத முடியாததாயும், நான்முகனாலே அறிய முடியாததாயும் உள்ள கடல் போன்ற நிறத்தை உடைய திருமாலின் திருவடியை அடைந்த, உறையூரில் அவதறித்த திருப்பாணாழ்வாரது புகழின் தன்மையைக் கூறி, ஆசாரியன் எழுதி அடியேனுக்கு உபதேசித்த பொருள் நிறைந்த தமிழ்ச் சொல்லாலே திருவழுதி வளநாட்டைச் சார்ந்தவரான நம்மாழ்வாரது பெருமையை அறிந்த வகையில் சொல்லுகின்றேன்.

> **படிமுதலேழ் உலகுண்ட பரம்பரனைப் பத்தியினால்**
> **மடியிடித்து நின்னில்யான் பெரியனென வழக்காடி**
>
> **(திருவாய். பா.2)**

மண்ணுலகம் முதலிய ஏழுலகங்களையும் உண்ட நித்யவஸ்துவை மடிபிடித்து, 'உன்னைக் காட்டிலும் நான் பெரியவன்' என்று வழக்காடி எம்பெருமான் திருவடியை அடைந்த நம்மாழ்வாரது அனுபவத்தை


Isbn Number: 978-93-91115-48-7

எடுத்துரைப்பதற்கு கொடியவனாகிய நானும் இறங்கியுள்ளேன். இதைக் காட்டிலும் பெரிய தவறு வேறு உண்டோ?

**சீர்கொண்ட திருவழுதி வளநாட்டில் சென்மித்தோர்**
**பேர்கொண்டோர் ஆவணத்தென் பேரெழுதப்**
**பெற்றுமிலேன் (திருவாய்மொழி பா.3)**

பெருமை பொருந்திய திருவழுதி வளநாட்டில் பிறந்தவர்கள். பெயர்கள் கொண்ட ஆவண ஒலையிலே (இனன ரிஜிஸ்டரில்) என் பெயர் எழுதப் பெறவில்லை. நேர்மையாளரைக் கொண்ட திருக்குருகூர் எல்லையிலே ஒரு நாயாய்ப் பிறந்து அவ்வூரைச் சுற்றித் திரியும் பேறு பெறாத நானோ இதற்கு முற்படுவேன்.

**குரவர்பால் வஞ்சம் செய்து குரைகடல் நடுவண் சோதி**
**அரவணைக் கிடந்த மாயன் அடியவர் அபசா ரத்தில்**
**இரவுநன் பகலும் வைகும் இருவினை யேனோமாலைப்**
**பரவிவாழ் குருகைக் கோனைப் பாடவென்**
**றொருப்பட்டேனே. (திருவாய்மொழி பா.4)**

தாய், தந்தை, குரு இவர்களை வஞ்சீத்து, திருப்பாற்கடலிலே பாம்பணையிலே சயனித்துள்ள திருமாலின் அடியவர்களது அபசாரத்திலேயே இராப்பகலாக உழலக்கூடிய பாவியேனோ கண்ணனையே துதித்து வாழும் சட கோபனைப் பாடுவதற்கு சம்மதித்தேனே.

**ஆசார ஈனன் ஆகி அரிவையர் கற்புக்(கு) அற்பம்**


Isbn Number: 978-93-91115-48-7

**கூசாது சென்று தீண்டிக் கொடுவிடம் துய்ப்ப யாரும்**
**நீசாபோ என்று நீக்கும் நீசனேன் தானோ மாறன்**
**தேசாரும் புகழைக் கூறச் சிந்தனை செய்தேன் அந்**
**(திருவாய்மொழி பா.5)**

துளியும் ஆசாரமில்லாதவனாய், பெண்களது கற்பைத் துனியும் மதியாது வெட்கமின்றி அவர்களைச் சென்று தீண்டி, கொடி விஷம் போன்ற சிற்றின்பத்தை அனுபவித்து நிற்க, எல்லாரும், 'நீசாபோ' என்ற துரத்தக் கூடிய நீசனாகிய அடியேனன்றோ மாறனது உலகம் நிறைந்த புகழைக் கூற எண்ணினேன். அந்தோ!

**ஆங்கவையே சார்வார் அவனை நினைந்தவன்தன்**
**பூங்கழலை ஏத்தப் புலையேன் ஒருப்பட்டேன்**
**ஓங்கு புகழ்க்கவிகள் ஓரார் இதன்பிழைமண்**
**தாங்குமணல் சோறு கருங்கல்ஆர் ஆராய்வார்.**
**(திருவாய்மொழி பா.8)**

அவ்வாழ்வார் திருவாக்கையே பற்றுக் கோடாகக் கொண்டு ஆழ்வாரையே நினைத்து அவரது திருவடிகளைப் புகழ அற்பனாகிய அடியேனும் இறங்கினேன். புகழ்மிக்க கவிகள் இதிலுள்ள தவறை ஆராய மாட்டார்கள். ஏனெனில் பூமியிலுள்ள மணல் சோற்றிலே உள்ள கல்லை யாரேனும் ஆராய்வார்களா?

**திருவாய்மொழியில் புலனாகும் பக்தியியம்**

அனைத்துப் பொருள்களிலுமுள்ள இறைத் தன்மையை உணர்ந்து அதனிடம் சரணாகதி அடைவதே


Isbn Number: 978-93-91115-48-7

வீடு பேறு அடைவதற்கான வழி இதுவே நம்மாழ்வார் கண்ட 'பக்தியியம்' ஆகும். திருவாய்மொழி நான்காம் பத்தில். 22 பொருட்களை மையப்படுத்தி அவைகளில் இறைத்தன்மையைக் காண்கிறார். நம்மாழ்வார் நாயகன் நாயகி உத்தி முறையில் அமைந்துள்ளன இப்பாசுரங்கள் பெரிதும் எண்ணத்தக்கன.

1. மண்ணை இருந்து துழாவி
   வாமனன் மண் இது என்றும்
2. விண்ணைத் தொழுது அவன் மேவு
   வைகுந்தம் என்றுகை காட்டும்

**(திருவாய்மொழி – நான்காம்பத்து : 366)**

3. பெய்வளைக் கைகளைக் கூப்பி
   பிரான்கிடக்கும் கடல் என்னும்
4. செய்தது ஓர் ஞாயிற்றைக்காட்டி
   சிரீதரன் மூர்த்திஈது என்னும்,
5. நையும் கண்ணீர்மல்க நின்று
   நாரணன் என்னும்

**(திருவாய்மொழி – 367)**

6. அறியும் செந்தீயைத் தழுவி
   அச்சுதன் என்றும்
7. எறியும்தண் காற்றைத் தழுவி
   என்னுடைக் கோவிந்தன் என்னும்

**(திருவாய்மொழி – 368)**


Isbn Number: 978-93-91115-48-7

8. ஒன்றிய திங்களைக் காட்டி
ஒளிமணி வண்ணனே என்னும்

9. நின்ற குன்றத்தினை நோக்கி
நெடுமாலே வா என்று கூவும்

10. நன்று பெய்யும்மழை காணில்
நாரணன் வந்தான் என்று சூலும்

**(திருவாய்மொழி – 369)**

11. கோமள வான்கன்றைப் புல்கி
கோவிந்தன் மேய்த்தன என்றும்

12. போம் இள நாகத்தின் பின்போய்
அவர் கிடைக்கை ஈது என்றும்

**(திருவாய்மொழி – 370)**

13. கூத்தர் குடம் எடுத்து ஆடில்
கோவிந்தனாம் எனா ஓடும்

14. வாய்த்த குழல் ஓசை கேட்கில்
மாயவன் என்றுமை யாக்கும்

15. ஆய்ச்சியர் வெண்ணெய் காணில்
அவன் உண்ட வெண்ணைய் ஈது என்னும்

**(திருவாய்மொழி – 371)**

16. ஏறிய பித்தினோடு எல்லா
உலகும் கண்ணன் படைப்பு என்னும்

17. நீறு செவ்வே இடக்காணில்
நெடுமால் அடியார் என்றோடும்


Isbn Number: 978-93-91115-48-7

18. நாறு துழாய்மலர் காணில்
நாரணன் கண்ணிஈது என்னும்

**(திருவாய்மொழி – 372)**

19. திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே காணில்

20. உருவுடை வண்ணங்கள் காணில்
உலகு அளந்தான் என்ற துள்ளும்

21. கருவுடைத் தேவில்கள் எல்லாம்
கடல் வண்ணன் கோயிலே என்னும்

**(திருவாய்மொழி – 373)**

22. விரும்பிப் பகவரைக் காணில்
வியலிட் உண்டேனே என்னும்

23. கரும்பெரு மேகங்கள் காணில்
கண்ணன் என்று ஏறப் பறக்கும்

24. பெரும்புலம் ஆநிரை காணில்
பிரான் உளன் என்றுபின் செல்லும்

**(திருவாய்மொழி – 374)**

என மண், விண், கண்ணீர், வளையல் அணிந்த கைகள், சிவந்த சூரியன், சிவந்த நெருப்பு, காற்று, துழாய் மலர், நிலா, மலை, முகில், கன்றுக்குட்டி, பாம்பு, கூத்தாடுபவர்கள், புல்லாங்குழல், வெண்ணெய், திருநாமம், திருவுடை மன்னர், உருவுடைய வண்ணங்கள், திருக்கோயில்கள், துறவிகள், பசுக்கூட்டம் என 22


Isbn Number: 978-93-91115-48-7

பொருட்களிலும் நம்மாழ்வார், தலைவியின் மனோநிலையில் இருந்து கொண்டு திருமாலையே காண்கிறார். இதுவே இவரின் பக்தியியமாகும்.

**திருவாய்மொழியில் ஆசிரியர் மாணவர் இலக்கணம்**

திருமாலின் திருவடியில் எப்போதும் விளங்குபவர் நம்மாழ்வார் என்பது வைணவ சமயக் கோட்பாடு, எனவே திருமால் திருக்கோயில்களில் சாதிக்கப்படும் திருவடியை சடாரி என்றும் சடகோபன் என்று குறிப்பிடுதல் வழக்கம். சடாரி என்பது நம்மாழ்வாரின் மற்றொரு பெயராகும். இவர் இயற்றிய திருவாய்மொழியை 'ஆராவமுதக் கவியாயிரம்' என்று கம்பர் குறிப்பிடுகிறார். இலக்கண நூலாசிரியர்கள் பலரும் நல்லாசிரியனுக்கும், நல்மாணவனுக்கும் உரிய இலக்கணத்தை விரிவாகக் குறிப்பிட்டுள்ளனர். அவ்வகையில் நம்மாழ்வார் பாசுரங்களில் ஆச்சார்யனுக்கும் சீடனுக்கும் உரிய பண்புகள் விளக்கப்படவுள்ளன.

ஆசிரியர் என்பவர் ஞானத்தின் வடிவமாக விளங்க வேண்டும். தாயின் முழு உருவம் தன் அருகில் இருந்தாலும் குழந்தை, அவர் மார்பில் வாய் வைத்து பால் அருந்துவதில் கவனமாய் இருக்கும். அதுபோன்று திருமாலிடம் காதல் கொண்ட தலைவி, நாரை என்னும் பறவையை விளிக்கும்போது அதன் உறுப்புகள்


Isbn Number: 978-93-91115-48-7

பலவிருப்பினும் சிறகுகளை முன்னிலைப்படுத்தி, 'அஞ்சிறைய மடநாராய்' என்று விளிக்கின்றாள். இங்கு நாரையின் இருசிறகுகளும் ஞானம் மற்றும் ஒழுக்கத்தின் (அனுஷ்டானம்) வடிவங்களாகக் கொள்ளப்படும் ஆச்சார்யனிடத்தில் மாணவன் கவனிக்க வேண்டியது, அவனது ஞானம் மற்றும் ஒழுக்கம் மட்டுமே. எனவே எச்சூழலிலும் தன் மாணவனுக்கு ஞானத்தை போதிப்பவனாக ஆச்சார்யன் விளங்க வேண்டும்.

**இனிமையாக உரையாடல்**

ஆசிரியர் என்பவர் கேட்டார்ப் பணிக்கும் தகையவராய், கேளாரும் வேட்பமொழியும் வார்த்தை கொண்டவனாய் இருத்தல் அவசியம். இப்பண்பை உள்ளுறையாக வைத்து 'இனக்குயில்காள்' என விளிக்கின்றாள் தலைவி. குயிலின் இனிமையான குரல் போன்று இனிமையாகப் பேசும் திறனுடையவராய் ஆசிரியர் விளங்குதல் வேண்டும்.

**பகுத்திறியும் ஆற்றல்**

கல்வி என்பது நன்மை தீமைகளைப் பகுத்தறியும் திறனை வழங்கக்கூடியது. கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியன் நடுவுநிலைமையுடன் நன்மை தீமைகளை ஆராய்ந்து நன்றின்பால் உய்க்கும் கற்பிப்பவனாவான். திருவாய்மொழித் தலைவி அன்னங்களை முன்னிறுத்தி 'விதியினால் பெடை மணக்கும் மென்னடைய


Isbn Number: 978-93-91115-48-7

அன்னங்காள்!' என்று விளிக்கிறாள், பாலையும், நீரையும் கலந்து வைத்தால் அவற்றைப் பிரித்தெடுக்கும் அன்னங்களைப்போல, ஆசிரியர் பகுத்தறியும் திறம் பெற்றவனாய் விளங்கல் வேண்டும்.

**வள்ளல் தன்மை**

ஆசிரியன் என்பவன் தான் கற்ற கல்வியை முழுமையாக மாணவர்க்கு வாரி வழங்கலில் வள்ளலைப் போன்றவன். திருவாய்மொழித் தலைவி, 'இரை தேர்வண் குருகே' என்று விளிக்கின்றாள். குருகு தன் மேடையின் வாய்க்குள் அடங்கக்கூடிய உணவை மட்டுமே தேர்ந்தெடுத்துக் கொண்டு வரும் இயல்புடையதாம். இத்தகைய பண்பு ஆசிரியனுக்கும் வேண்டியதாயிற்று தன் மாணவனுக்குப் பொருந்தக் கூடியது. அவனால் உள் வாங்கிக் கொள்ளக்கூடிய அறிவைப் புகட்டுவது ஆசிரியரின் பணியாக அமைதல் வேண்டும்.

**பெருமித உணர்வு**

குற்றங்களைக் களைபவன் ஆசிரியன் எனப்படுவான். எத்துறையில் விளங்குவோரும் தமக்கு எழுத்தறிவித்த இறைவனை மறப்பதில்லை. சிறிதும் பொறாமையின்றித் தான் உயராவிடினும், தன் சீடர் உயர்நிலை அடைவதைத்தான் உற்றப் பேறாகக் கருதும் தகைச்சான்ற பண்புடையோர் ஆசிரியராவார். எனவே ஆசிரியர் ஒவ்வொருவரும் தாம் ஆற்றும் தூய பணியில்


Isbn Number: 978-93-91115-48-7

பெருமிதம் கொள்வர். இதன் பொருள்பட, திருவாய்மொழித்தலைவி ஆழிவரிவண்டே! என்று விளிக்கிறாள். ஆழியைப் போன்று சுழன்று சுழன்று பறக்கும் தன்மையும், வடிவில் சிறியதாய் இருப்பினும் கம்பீரத்தால் பெற்றிருக்கின்ற நிலையும் வண்டின் உயர்குணங்களாகும். இத்தகைய நற்குணங்கள் ஆசிரியர்க்குத் தேவையானவை.

**மாணவனுக்குரிய இலக்கணம்**

மாணவன், ஆசிரியனை முதற்கடவுளாயய் கொள்ளுதல் வேண்டும் தன் ஆசான் கற்றுக்கொடுத்தவை சரியான நேரத்தில் உதவுவதால், ஆசான் ஆற்றிய உதவியை நினைத்து ஆசானை விரும்புதல் வேண்டும். ஆசானுடன் தொடர்ந்து செல்வது மாணவனுக்கு ஆத்மப் பயணமாய் அமையும். எனவே மாணவன் ஆசிரியனை விட்டு அகலாமல் நிழல்போல் விளங்குதல் வேண்டும். இங்ஙனம் நல்லாசிரியன் நல்மாணவன் ஆகிய இருவருக்குமான இலக்கணத்தைத் திருவாய்மொழி விரித்துரைக்கிறது.

**நம்மாழ்வார் போற்றும் அன்பின் அமுதமொழி**

காதலால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா தன்னைப் பெண்ணாக பாவித்து இறைவனின் மீது அன்பு செலுத்துக்கின்றது. இதனையே வைணவ தத்துவம் என்று கூறப்படுகிறது. இம்மரபினையொட்டி

 Isbn Number: 978-93-91115-48-7

நம்மாழ்வாரும் தம்மை தலைவியாகவும் திருமாலை தலைவனாகவும் நினைத்து திருவாய்மொழியில் பாடியுள்ளார்.

**திருவரங்கத்தின் வளம்**

காவிரியும் கொள்ளிடமும் பாய்ந்து வளம் செய்கின்ற பூலோக வைகுந்தமான திருவரங்கம் நீர்வளமும் நிலவளமும் பெற்று விளங்குறது. அந்நீர் வளத்தில் கயல்மீன்கள் துள்ளி விளையாடும் என்பதை,

**செங்கயல் பாய் நீர் திருவரங்கத்தாய்**
**இவள் திறந்து என் செய்கின்றாயே**

**(திருவாய்மொழி – 3455)**

என்ற பாடல் மூலம் நம்மாழ்வார் திருவரங்கத்தின் நீர்வளத்தினை வெளிப்படுத்துகின்றார்.

**உலகங்களையும் படைத்துக் காட்டியவன்**

திருவரங்கத்தில் பள்ளிக்கொண்டிருக்கும் தாமரைக்கண்ணழகன் உலகங்களையெல்லாம் படைத்து காத்து கொண்டிருப்பவர். அவனின் அருஞ்செயலை

**முன்செய்து இவ்வுலகம் உண்டு உழிந்து அளந்தாய்**
**என்கொலோ முடிகின்றது இவட்கே?**

**(திருவாய்மொழி – 3456)**

என்ற பாசுர அடிகளின் மூலம் உலக உயிர்களுக்கெல்லாம் அருளை வழங்கிக் காத்துத் திகழ்பவன். திருமாலைத் தன் கணவனாகவே எண்ணி வாழத் தொடங்கிய தலைவியின் காதலால் கசிந்துருகி


Isbn Number: 978-93-91115-48-7

உன்னைக் காண நீ தான் அருள் செய்ய வேண்டும் என்று கதறி இராமவதாரம் கிருஷ்ண அவதாரங்களைக் குறிப்பிட்டு புலம்புகிறார் என்பதை,

**கட்கில் உன்னைக் காணுமாறு அருளாய்**
**காகுத்தா கண்ணனே என்றும்**
**திட்கொடி மதில் சூழ் திருவரங்கத்தாய்**
**இவள்திறந்து என்செய்திடாயே (திருவாய்மொழி -3457)**

என்று குறிப்பிடுகிறார் நம்மாழ்வார்.

**திருமாற்கடல் கடந்தவன்**

இறைவன் மீது தீராத காதல் கொண்ட பராங்குசநாயகி தன் இரு கைகளையும் கூப்பி தொழுது திருவரங்கா! என்றழைத்து அந்தி வேளையில்; இரணியனின் உடலை பிளந்து வதைத்தவனே! திருப்பாற்கடலை கடைந்தவனே! என்று கூறி தன் உள்ள உறுதியை இப்பாடல் மூலம் விளக்குகிறார்.

**சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்**
**திருவரங்கத்துள்ளாய் என்னும்**
**அந்திப்போது அவுணன் உடல் கிடந்தானே**
**அயலகடல் கடைந்த ஆறு அமுதே.**
**(திருவாய்மொழி – 3459)**

மேலும்,

**கொழுந்து வானவாகட்கு என்னும் குன்று ரந்தி**
**கோ-நிரை காத்தவன் என்னும்**
**(திருவாய்மொழி – 3462)**


Isbn Number: 978-93-91115-48-7

என்ற பாடலில் கோவர்த்தன மலையைத் தூக்கி பசுக் கூட்டங்களைக் காத்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

**நப்பின்னை மணம்**

திருமால் கண்ணன் அவதாரத்தில் ஆயர்குலப் பெண்ணான நப்பின்னையை மணப்பதற்கு ஆயர்களின் வாழ்க்கை முறைப்படி ஏழு காளைகளை அடக்கியவன் என்று நப்பின்னையை மணந்து ஆயர்குலத்திற்குப் பெருமையும் சேர்ந்தவன் இதனை,

**அன்று உரு ஏழும் தழுவி நீ கொண்ட**
**ஆய் மகள் அன்பனே! என்னும்**
**தென் திருவரங்கம் கோயில் கொண்டானே!**
**(திருவாய்மொழி – 3463)**

என்று குறிப்பிடுகின்றார்.

**அயன் அரி அரண்**

திருமாலே நீ மூன்று உலகங்களுக்கும் உரியவன் நீயே, கொன்றைமாலை அணிந்த சிவன் மற்றும் நீதான் நான்முகன், திருவரங்கனும் நீயே என்று என் மனமானது உன் திருவடிகளைப் பற்றிக்கொண்டு அழுகின்றது என்பதை,

**கடி கமழ் கொன்றைச் சடையனே என்னும்**
**நான் முகக் கடவுளே என்னும்**
**வடிவு உடை வானோர் தலைவனே என்றும்**
**வண் திருவரங்கனே என்னும்**
**(திருவாய்மொழி – 3464)**


**Isbn Number: 978-93-91115-48-7**

என்ற பாடல்கள் மூலம் திருவரங்கத்தில் வீற்றிருக்கும் திருமாலின் பெருமையை அமுதமொழியான திருவாய்மொழியின் மூலம் எடுத்தியம்புகின்றார் நம்மாழ்வார்.

**நம்மாழ்வார் பாசுரங்களில் இசை**

இயல், இசை, கூத்து என தமிழ் மூவகைப்படும். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவரும் அருளிச் செய்தது நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகும். அவர்களுள் உயிர் என்று போற்றப்பெறும் நம்மாழ்வார் அருளியவை

1. **திருவிருத்தம்**
2. **திருவாசிரியம்**
3. **பெரிய திருவந்தாதி**
4. **திருவாய் மொழி**

என்னும் நான்கு திவ்வியப்பிரபந்தங்களாகும். அருளிச் செயல்களைத் தொகுத்த நாதமுனிகள், இசைப்பா (3) இயற்பா (1) என இரு பிரிவுகளாகப் பிரித்தார். திருவாய்மொழியை இசைப்பா பிரிவாலும், ஏனைய மூன்றினையும் இயற்பா பிரிவிலும் அடைவுப் படுத்தினார். இம்மூன்றினுள் பின்வந்தோர், மிகப் பிற்பட்ட காலப் பண்ணில் திருவாசிரியம் - தேசியராகம் - ஆதிதாளம் எனவும், பெரியதிருவந்தாதி - செந்சுருட்டி இராகம் - ரூபகதாளம் எனவும் வகுத்து அச்சிட்டுள்ளார்.


Isbn Number: 978-93-91115-48-7

திருவாய்மொழி சிறந்த பழம் பண்களாகும். தாளத்தோடு பாடும் முறையில் அச்சிட்டுள்ளனர். அதுப்பற்றி

இசை 7. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன அன்று சிறப்புற்றிருந்த தமிழ் இசை, பக்தி இயக்கக் காலத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது தேவாரம், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவற்றில் இவ்வளர்ச்சியை நாம் காண இயலும்.

**இந்தளம்**

மருதப் பெரும் பண்ணின் இரண்டாம் திறமான உருவில் அகநிலைப் பண்ணாக அமைந்து பெருமிதம், மருட்கை வெகுளிச்சுவைகளை உடைது இப்பாடல்

**திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன**
**திருமால் வந்து என்நெஞ்சு நிறையப்புகுத்தான்**
**திருமாளியைந்து புனல் பொன்னித்தென்பால்**
**திருமால்சென்று சேர்விடம் தென்திருப்பேரே**
**(திருவாய்மொழி – 10 – 8 – 1)**

ஆக இப்பதிகம் உவகைச்சுவை பொருந்தியுள்ளது என்பதை இப்பாடல் வழி அறியலாம்.

**முதிர்ந்த குறிஞ்சி**

குறிஞ்சியாழ் என்னும் பெரும் பண்ணைச் சார்ந்தது இப்பாடல் சுவை, உவகை, மருட்கை, பெருமிதம், என நள்ளிரவில் பாடப்படும்.


**Isbn Number: 978-93-91115-48-7**

இப்பண்ணானது ஆத்ம உபதேசம் உலகிற்கு உபதேசம், ஆராதனைக்கு எளியவன் வேண்டிப் பெறுதல், ஈதெனல், நானியரைப் பாடாது மாதவனை ஏத்தும் மருட்கை என விளித்துப் பாடியுள்ளார்.

**திட விசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை**
**படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்**
**உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்**
**சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே**

**(திருவாய்மொழி 1 : 1-7)**

மேற்கொண்ட இப்பாசுரமே உடையவருக்கு வசிட்டாத்வைதக் கொள்கையை வகுப்பதற்குத் துணையாக நின்றது என்பர்.

**பழந்தக்கராகம்**

குறிஞ்சிப் பெரும் பண்ணின் 5ஆம் திறமான மருளின் புறநிலைப்பண். இப்பண்ணானது சுவை அவலம், மருட்கை, இரவுப்பண் கீழ்கண்டப்பாடலில் ஆழ்வார் இறைவனைச் சிக்கெனப் பிடித்தல், திருவேங்கடத்தானுக்கு அடிமை செய்ய வேண்டும் என விளக்கமளிக்கிறது.

**ஒழிவில காலமெல்லாம் உடனாய் மன்னி**
**வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்**
**தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து**
**எழில் கொள்சொதி எந்தை தந்தை தந்தைக்கே**

**(திருவாய்மொழி 3 : 3 : 1)**


Isbn Number: 978-93-91115-48-7

எனப் இப்பாடலானது திருவேங்கடத்தானின் பெருமையை கூறுகிறது. இவ்வாறு இசையால் பாசுரங்களைப்பாடி இறை நம்பிக்கையை மக்களிடம் வளர்த்தனர்.

**நம்மாழ்வார் அருளிச் செய்த மடல்**

மடல் பிரபந்தம் என்பது வைணவச் சிற்றிலக்கிய வகைகளில் செல்வாக்கு பெற்ற பிரபந்தமாகத் திகழ்கிறது. நம்மாழ்வார் தம்மைப் பராங்குச நாயகியாகக் கற்பனை செய்து கொண்டு தலைவனாகிய நம்பெருமான் என்னுடைய கோரிக்கைச் செவி சாய்க்கவில்லை என்றால் அவன்மேல் எனக்குள்ள காதலை மடல் ஏறி ஊராக்குத் தெரிவிப்பேன் என்று சபதம் செய்து கொள்கிறார் (திருவாய்மொழி 5 : 3) மடலேறுவது என்பது தமிழ் அக இலக்கிய மரபுப்படிப் பெருந்திணையில் அடங்கும். அஃதாவது தான் காதல் கொண்ட தலைவியைப் பெற முடியாத சூழலில் தலைவன் பனங்கருக்கிளால் ஆன குதிரையின் மீது ஏறி, எருக்கமாலை சூடி, காதலியின் ஓவியத்தை தன் கைகளில் தாங்கி, ஊர் அறியத் தெருவில் வலம் வரும் செயலே 'மடலேறுதல்' எனப்படும். இது உணர்வு மீறிய செயலாதலின் தலைவன் மடலேறுவதாக அச்சுறுத்தலாமே தவிர, மடலேறுதல் நிகழ்ந்து விடக்கூடாது என்பது அக இலக்கிய மரபு,


Isbn Number: 978-93-91115-48-7

மடலேறுவேன் என அவன் அச்சுறுத்தும் வரை, அது ஐந்திணையிற்பாற்படும். அதாவது மீறிய திணை, எனவே சங்க அக இலக்கியத்தில் காணப்படும் மடற்பாடல்கள் அச்சுறுத்தும் நிலையிலேயே அமைந்துள்ளன.

இதனையே தொல்காப்பியம்,

**எத்துணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மை யானை**

**(தொல்.அகத்திணை - 38)**

என்று பெண்களின் பெருமைக்கு மடல் ஏறாத தகைமையைக் காரணம் காட்டுகிறது.

நம்மாழ்வார் தலைவனாகிய எம்பெருமான் மீது கொண்ட காதல், பக்குவம் செய்யப்பட்ட ஈரநெல் போல் என் நெஞ்சமாகிய நிலத்தில் விளைந்தது என்று நம்மாழ்வார் பாடுகிறார். 'இதற்குமேல் அன்னை சொன்னால் என்ன? ஊரார் சொன்னால் என்ன? எப்படியோ அவன் வலையில் அகப்பட்டு விட்டேன். செய்வதையெல்லாம் செய்துவிட்டு, தான் ஏதும் செய்யாதவன் போல காட்சி தருகின்ற அவன் செயலை – நாரணனே இதற்குக் காரணம் என்ற உண்மையை இந்த ஊரார்க்கு உரைக்க வேண்டும் அப்பொழுதாவது உண்மை வெளிப்பட, என்னை ஆட்கொள்வான் என்று உறுதியெடுத்துக் கொண்டு கூறுகிறார். இதனையே,

**நாணும் நிறையுமம் கவர்ந்தென் நன்னெஞ்சம்**

 Isbn Number: 978-93-91115-48-7

**கூரிக்கொண்டு**

**பேணுயர் வாளத் திருக்கும் தேவரொன தன்னை**
**ஆணையென் தோழீ! உலகுதோறலர் தூற்றி ஆம்**
**சோனைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே**

**(திருவாய்மொழி 5 :3-9)**

என்று பராங்குச நாயகி மடலூர எத்தனிக்கிறாள் இவ்வாறு மடலூர்ந்தால்; அதன் விளைவு என்ன? மணம்தான்? இதனைப் பின்வரும் பாடலில் தெளிவுப்படுத்துக்கிறார். பராங்குசநாயகியாகத் தம்மைக் கருதிப்பாடும் நம்மாழ்வார்.

**யாமட லூர்ந்தும் யெம்;மாழி யங்கைப் பிரானுடை**
**கூமல் தன்னைத் துழாய்மலர் கொண்டு சூடுவோம்**
**யாமட பின்றித் தெருவு தோறயல் தையலார்**
**நாமபங் காப்பழி தூற்றி நாடும் இரைக்கவே**

**(திருவாய்மொழி 5:3: 10)**

என்று 'நாணத்தை விட்டாவது, பழிதூற்றுவாரது நாவடங்குமாறு தலைவனைக் கூடுவேன் என உறுதி கொள்கிறாள். இவ்வாறு அகத்திணை மரபில் புதுமை காட்டும் வண்ணம் நம்மாழ்வார் தம் பாசுரத்தில் தலைவி மடலேறத் துணிவதைப் படைத்துக் காட்டினார்.

**முடிவுரை**

'மானிடரை வாழவிக்கும் மாறன் சொல் வேராகவே விளையும் வீடு' என்று ஸ்ரீ மணவாள மாமுனிகள் உரைத்ததை நாம் பின்பற்றி நம்மாழ்வாரின்


Isbn Number: 978-93-91115-48-7

பாசுரங்களை ஆராய்ந்தோமானால் அவற்றில் உவமை பெரிதாகப் பேசப்படுகின்றன. இறைவனின் உருவ அமைப்பை பல்வேறு இயற்கைப் பொருட்களுடன் உவமையிட்டு கூறியுள்ளார். மேலும் அவர் தம் பாசுரங்களில் தன்னை தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் பாவித்து தன் அன்பார்ந்த கருத்துக்களை பறவைகள் மூலம் தூதுவிட்டு அனுப்புகிறார். மேலும் ஆசிரியர் மாணவர்களுக்கான இலக்கணத்தையும் வகுத்துள்ளார்.

மடல் ஏறுதல் என்பது சங்க இலக்கிய மரபுபடி பெருந்திணையில் அடங்கும். ஆனால் நம்மாழ்வார் அருளிச் செய்த மடலானது சற்று இலக்கியத்திற்கு மாறானது. அதாவது தலைவி மடலேறுவதாக கூறுகிறார். இயற்றிய பாடல்களில் மக்களனைவரையும் இறைவனைப்பற்றிக் கொண்டு சரணடைய வேண்டும் என்று கூறுகிறார். மேலும் ஒவ்வொரு மனிதனும் மனிதநேயமிக்க நற்பண்புகளை வளர்த்து பொறுமை, எளிமை, ஞானம், கல்வி, பக்தி, உதவிசெய்யும் நல்மனப்பான்மை இவைப் பெற்று வாழ வேண்டும் எனக்கூறுகிறார்.

அருளே இறையனுபவமாகும். உலகப் பொருளில் எல்லாம் இறைவனைக் காண வேண்டும் என்றும் உலக உயிர்களைப் படைத்த இறைவனிடம் நாம் அனைவரும்


Isbn Number: 978-93-91115-48-7

அன்பு செலுத்தி அவனை சரணாகதி அடைய வேண்டும் என்றுக் கூறியுள்ளார். இசையால் பாசுரங்களைப்பாடி இறைநம்பிக்கை மக்களிடையே வளர்த்து வேதக் கருத்தை தமிழ்மொழியில் பாசுரங்களாக அமுது படைத்து தமிழ்மொழியை வளர்த்தார். அதனால்தான் 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்ற அடைமொழிக்கு உரியவராகிறார். இவ்வாறு நம்மாழ்வார் தான் இயற்றிய பாசுரங்களின் வழியாக மக்களை நல்வழிப்படுத்தி சமுதாய மாற்றத்திற்காக சமுதாயபுரட்சி செய்து நல் ஆரோக்கிய மிக்க சமூகச்சூழலை உருவாக்கினார் என்றால் அது மிகையாகாது.

**அடியார்கள் வாழ! அரங்க நகர் வாழ!**
**சடகோபன் தன் தமிழ் நூல் வாழ!**

என நம்மாழ்வாரை வணங்கி ஆய்வுக் கட்டுரையை நிறைவுப்பெறச் செய்தேன்.

**துணைநூற்பட்டியல்**

[1] முனைவர் கமலக்கண்ணன். *நாலாயிர திவ்வியப்பிரபந்தம்.* வர்த்தமான் பதிப்பகம், சென்னை, 1985.

[2] சடகோப ராமாநுஜதாஸன். *திருவாய்மொழியின் உரை.* ஆராவமுது பிரசுர நிலையம், சென்னை, 1990.

 **Isbn Number: 978-93-91115-48-7**

[3] ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா. *நம்மாழ்வார் திருமொழி.* பிரேமா பதிப்பகம், சென்னை, 1949.

[4] டாக்டர் மு.வரதராசனார். *திருக்குறள் தெளிவுரை.* சைவசித்தாந்த நூற்பதிப்பக்கழகம், சென்னை, 1920.

[5] இளம்பூரணனார் உரை. *தொல்காப்பியம் – பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

6. *நம்மாழ்வார் ஆய்வுக் கோவை. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்.* வெளியீடு ஸ்ரீரங்கம், 2011-12.

# Great Vaishnava Ramanujar - A View

**Dr N. Pradeepa**, Assistant Professor, Department of Tamil,
PSGR Krishnammal College for Women, Coimbatore-641004,
Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-5447-9879**
**DOI: 10.5281/zenodo.5712092**

## Abstract

*Ramanujar came next in the lineage of the first acharya Nathamuni Alavanthar. In the Vaishnava cult, the Alwars has touched the heart of the readers with their enchanting hymns. Ramanujar is the first of the line. By the grace of God and his vocal talent, he has attracted thousands to the Vaishnava cult. From Nathamuni to Poorvacharyar, they tested to give Upadesam (wisdom) to the individuals. They had never given it collectively. Ramanujar found the barrier that curtails the spread of the Vaisnavic Cult. Therefore, he suggested rendering the Vaisnavic truths to all. This chapter elicits his early life, gurukula education, belief, style, and religious harmony.*

**Keywords:** Vaishnavam, Alavanthar, Thirukachinambi, Yathava Prakash, Kasi Yathara, Thirukottioor Nambi, Samaya Purachi, Vishishtadvaitam

## References


[1] Arunachalam. P. Dr. *Vainava Samayam*. Mullai Nilaiyam, Chennai - 17.

[2] Ganesan.A, Dr. *Vainava Tilakam*. New Century Book House (P.Ltd), Chennai - 98.

[3] Lakshmanan.K. *India Thathuva Gnam*. palaniyaappa brothers, Chennai - 14.

[4] Raviramanathan. *Sri Nalayiram Divya Prabatham.* Prema Publications, Chennai - 600024.

[5] Sree.P. *Sree Ramanujar*. Paari Nilayam, Chennai-08.

[6] Swamy Ramakrishnaanthar. *Sree Ramanujar Valakai Varalaru*. Sree Ramakrishna Mud, Chennai.



Isbn Number: 978-93-91115-48-7

# வைணவத்திலகம் இராமாநுஜர் - ஓர் பார்வை

**முனைவர் ந. பிரதீபா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் - 641004,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-5447-9879**
**DOI: 10.5281/zenodo.5712092**

## ஆய்வுச்சுருக்கம்

ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த நாதமுனிகள் என்ற முதல் ஆச்சாரியர் அடங்கிய குரு பரம்பரையில் ஆளவந்தாருக்கு அடுத்து வந்தவர் இராமாநுஜர். ஸ்ரீ வைணவப் பண்பாட்டில் ஆழ்வார்கள் பன்னிருவரும் மக்களின் இதயத்தைத் தொட்டு மனதை மாற்றியவர்கள். வைணவ ஆச்சாரியர்களுள் முதன்மையானவர் இராமாநுஜர். தன் சொல் வன்மையாலும், இறைவனின் கருணையாலும் ஆயிரக்கணக்கானோரை வைணவ சம்பிரதாயத்தின் பால் ஈர்த்தவர். நாதமுனிகள் முதல் வந்த பூர்வாசார்யர்கள் வரை யார் வந்தாலும் உபதேசம் பெறுவதற்கு தகுதியானவரா என்று சோதித்த பின்பே உபதேசித்து வந்தனர். அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களை ஒரு திரளாகக் கூடி உபதேசித்தது இல்லை. இதில் குறை


Isbn Number: 978-93-91115-48-7

கண்ட இராமாநுஜர் இப்படி ஒரு வரம்பு இருக்கக்கூடாது. இதனால் ஸ்ரீவைஷ்ணவ நெறி குறுகி வருகிறது. இந்த வரம்பை அறுத்தாக வேண்டும் என்று கருதியவர். யார் வந்தாலும் அவர்களுக்கெல்லாம் ஸ்ரீவைஷ்ணவ தத்துவ உண்மைகளைக் கூறுங்கள் என்று அருளிச் செய்து வரம்பை அறுத்தவர். இவரது இளமைக்காலம், குருவழிக்கல்வி, கொள்கைநெறி, சமய நல்லிணக்கத்தை ஆராயுமுகமாக இவ்வாய்வு விரிகிறது.

**கலைச்சொற்கள்:** வைஷ்ணவம், ஆளவந்தார், திருக்கச்சிநம்பி, யாதவப்பிரகர், காசியாத்திரை, திருக்கோட்டியூர்நம்பி, சமயப்புரட்சி, விசிஷ்டாத்வைதம்.

**முன்னுரை**

ஒன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த நாதமுனிகள் என்ற முதல் ஆச்சாரியர் அடங்கிய குரு பரம்பரையில் ஆளவந்தாருக்கு அடுத்து வந்தவர் இராமாநுஜர். ஸ்ரீ வைணவப் பண்பாட்டில் ஆழ்வார்கள் பன்னிருவரும் மக்களின் இதயத்தைத் தொட்டு மனதை மாற்றியவர்கள். வைணவ ஆச்சாரியர்களுள் முதன்மையானவர் இராமாநுஜர். தன் சொல் வன்மையாலும், இறைவனின் கருணையாலும் ஆயிரக்கணக்கானோரை வைணவ


**Isbn Number: 978-93-91115-48-7**

சம்பிரதாயத்தின் பால் ஈர்த்தவர். ஜாதி, பேதமற்ற சமுதாயத்தைப் படைக்க வழிகாட்டியவர்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த திருக்கச்சி நம்பியை தனது குருவாக ஏற்றுக் கொண்டவர். தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவரை தனது சீடராக ஏற்றுக் கொண்டவர். கோயில்களில் பின்பற்றப்படும் திருவாராதனத்தை ஒழுங்குபடுத்தும் நித்யம் என்ற கிரந்தத்தையும் வகுத்தவர். இவர் வாழ்நாளிலேயே அடியார்களும் பக்தர்களும் 'தெய்வம்' என்றே கொண்டாடினார்கள் ஒரு மாபெரும் நாட்டையே பரிபாலிப்பதுபோல் திருவரங்கனின் சம்ராஜ்யத்தைப் பரிபாலித்தவர். அரங்கன் ஆலயத்துக்கு கோயிலொழுகு ஏற்படுத்தி, ஓர் மன்னர் போல விளங்கி "யதிராஜர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.இவரது வரலாற்றை அறியும்முகமாக இவ்வாய்வு அமையப் பெறுகிறது.

## இராமானுஜர் பிறப்பு

ஸ்ரீ பெரும்புத்தூர் சென்னை நகருக்குத் தென்மேற்கு சுமார் முப்பது மைல் தூரத்தில் காஞ்சிபுரத்துக்குச் செல்லும் வழியில் இருக்கிறது. இங்கே ஓர் அழகான பெரிய கோயில். பெருமாள் கோயில் ஆதிகேசவப் பெருமாள். இக்கோயிலுக்கு அருகில் வேறொரு கோயில் கூப்பிய கைகளுடன் காணப்படும் இராமானுஜர் கோயில். இத்தலத்தில் ஆயிரம்


Isbn Number: 978-93-91115-48-7

ஆண்டுகளுக்கு முன் கேசவ சோமயாஜியாரின் குடும்பம் வசித்து வந்தது, ஆளவந்தாரின் காலட்சேபம் திருவரங்கத்தில் வேறு கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது.ஆளவந்தாரின் முக்கியச் சீடராக விளங்கியவர். வயதில் பெரியவரான பெரியதிருமலை நம்பி (ஸ்ரீ சைல பூர்ணர்),

> **ஆளவந்தாருடன் வாழ்ந்தவர் பெரிய நம்பி, பெரிய திருமலை நம்பியும் ஆளவந்தாரின் சீடரே என்றாலும் திருமலையில் இருந்து திருவேங்கடமுடையானுக்குக் கைங்கரியம் செய்து வந்தார். திருமலையப்பன் இவரை 'அப்பா' என்று கூப்பிட்டு அன்பு கொண்டான் இவர் இராமாநுஜருக்கு ராமாயணத்தின் நுண் பொருள்களை உபதேசித்தவர்.**

**(ஸ்ரீ ராமாநுஜர் வாழ்க்கை வரலாறு - ப.87)**

வாழ்வின் இறுதியில் இவர் இல்லறத்தைத் துறந்து தம் ஆசாரியரிடம் துறவேற்று அவருடனே வாழ்ந்து வந்தார். இவருக்கு இரண்டு தங்கைகள். மூத்தவள் பெயர் காந்திமதி, இளையவர் தீப்திமதி ஸ்ரீ பெரும்புதூரில் வாழ்ந்த ஆசூரி கேசவாசாரியர் காந்திமதியை மணந்தார். அருகிலுள்ள அகரம் என்ற கிராமத்தில் வாழ்ந்த கமலநயனபட்டர் என்பவருக்குத் தீப்திமதி வாழ்க்கைப்பட்டாள்.

ஆசூரி கேசவாசாரியர் வேள்விகளை இயற்றுவதில் மிக்க ஊக்கம் கொண்டிருந்தார். ஆதலால்


**Isbn Number: 978-93-91115-48-7**

அந்தத் காலத்துப் பண்டிதர்கள் அவருக்கு ‘ஸர்வக்ரது’ (அனைத்து வேள்விகளையும் புரிபவர்) என்ற பட்டம் அளித்தனர். எனவே, இவரது முழுப் பெயர் ஸ்ரீமத் ஆசூரி ஸர்வக்ரது கேசவ தீட்சிதர் என்றானது.

> **வேள்வி இயற்றுவதே மேலான தர்மம், அது இறைவனைக் களிப்பிக்கிறது; விரும்பிய அனைத்தையும் கொடுக்கிறது. எனவே வேள்வியே உயர்ந்த கதியாகும்.**
>
> **(ஸ்ரீ ராமாநுஜர் வாழ்க்கை வரலாறு - ப.88)**

திருமணமாகி பல ஆண்டுகளாகியும் தமக்கு மகப்பேறு இல்லாமலிருக்கவே கேசவாசாரியக் கவலையுறத் தொடங்கினார். ஆண்டவனது அருளினால் மகவைப் பெற வேண்டும் என்ற கருத்துடன் அவர் ஓர் வேள்வி இயற்ற விரும்பினார்.

வேள்வி இயற்றி இறைவனைப் போற்றும் நோக்கத்துடன் கடற்கரையில் விருந்தாரணியும் என்ற புண்ணியத் தலத்தில் உறையும் பார்த்தசாரதி எம்பெருமானை அடையத் தீர்மானித்தார். இங்கு தன் மனைவியுடன் மகப் பேற்றுக்காக வேள்விகளை இயற்றினர். இப்பொழுது விருந்தாரணியம் அந்தப் பொய்கையில் பெயராலேயே திருவல்லிக்கேணி என்று வழங்குகிறது. வேள்விகள் நிறைவேறிய பின்பு, கேசவாசாரியர் தமது கனவில் பார்த்தசாரதிப்


Isbn Number: 978-93-91115-48-7

பெருமானைக் கண்டார், பெருமான் அவரிடம் இவ்வாறு அருளினர்.

**ஓ ஸர்வக்ரதுவே! உமது நல்லொழுக்கத்தையும் உறுதியான பக்தியையும் கண்டு களிக்கிறேன். கவலை வேண்டாம் நானே வந்து உமக்கு மகனாகப் பிறப்பேன்.**

**(ஸ்ரீ ராமாநுஜர் வாழ்க்கை வரலாறு - ப.88)**

இந்த மங்கலமான கனவைக் கண்டு கேசவாசாரியார் பெரிதும் மகிழ்ந்தார். இந்தச் செய்தி அனைத்தையும் மனைவியிடம் சொன்னார், மறுநாளே அவர்கள் தங்கள் ஊருக்கு புறப்பட்டனர்.

சுமார் ஓர் ஆண்டுக்குப் பின்னர், பாக்கியவதியான காந்திமதி. எல்லாச் சுப லட்சணங்களும் பொருந்திய பெருமகனைப் பெற்றாள். இவரே இராமாநுஜர். இவர் சக ஆண்டு 939-இல் (கலி ஆண்டு 4118; கி.பி.1017). வியாழக்கிழமை, சித்திரை 12 ஆம் தேதி சுக்லபட்சப் பஞ்சமியில் பிங்கள ஆண்டில் அவதரித்தார். இவரது ஜன்ம நட்சத்திரம் திருவாதிரை இவர் யஜீர்வேதம். ஹாரீத கோத்திரத்தைச் சார்ந்தவர். இப்படி அவதரித்த இவர் எல்லார் முன்பும் அஞ்ஞான இருளை நீக்கும் இளங்கதிரவனாக ஒளிர்ந்தார்.

## இளமைப் பருவம்

இராமாநுஜருக்கு இயற்பெயர் இளையாழ்வார் லட்சுமணன் இளையபெருமான் ஆகையால், இந்த பெயர்


Isbn Number: 978-93-91115-48-7





ஏற்பட்டது. **இராமாநுஜர் பிறந்த மாதமும் ராசியும் லட்சுமனுடையவை போலவே உள்ளன. (ஸ்ரீ ராமாநுஜர் வாழ்க்கை வரலாறு - ப.91)** காந்திமதியின் தங்கையான தீப்திமதியும் ஒரு மகனுக்குத் தாயானாள். பிரசவமாகிச் சில நாள் கழித்து அவர் தன் கைக்குழந்தையுடன் தமக்கையான காந்திமதியின் பிள்ளையைப் பார்க்க ஸ்ரீ பெரும்புதூருக்கு வந்தாள். இதற்குள், வயதானவரான பெரிய திருமலை நம்பி, குழந்தைகள் பிறந்த செய்தி கேட்டு அவர்களைப் பார்க்க ஸ்ரீரங்கத்திலிருந்து வந்தார். எல்லா சுபலட்சணங்களும் பொருந்திய அவ்விரு குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். பல தெய்வீக அடையாளங்கள் பொருந்திய காந்திமதியை மைந்தனைக் கண்டதுமே, பெரிய திருமலைநம்பி,

**திரியும் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து**
**பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக**
**கரிய முகில்வண்ணன் எம்மான் கடல்வண்ணன்**
**புதங்கள் மண்மேல்**
**இரியப்புகுந்து இசைபாடி எங்கும்இடம்**
**கொண்டனே (ஸ்ரீநாலாயிர. நம். பா.3130)**

நம்மாழ்வார் திருவாய்மொழியில் குறிப்பிட்ட வருங்கால வைணவ வளம் பற்றிய காட்சி அவர் கண்ணுக்குப் புலப்பட்டது.

சிறுவயதிலிருந்தே இராமாநுஜர் தமது அறிவார்ந்த தன்மையை நிரூபித்தார். பாடத்தை ஒரு


Isbn Number: 978-93-91115-48-7

தடைவ கேட்ட மாத்திரத்தில், அது எவ்வளவு கடினமாக இருந்தாலும். அதன் பொருளை மனதில் வாங்கிக் கொள்வார். இதனால் அவருடைய ஆசிரியர்கள் அவரிடம் மிக்க அன்பு கொண்டனர். வடதிசையையும் தென் திசையையும் காட்டும் திசையறி கருவியின் முள் போல, நான்கு வகையான புருஷார்த்தங்களில் முதலாவதான அறத்தையும் இரண்டவதான பொருளையும் மட்டும் அவருடைய அறிவுத் திறன் நாடி நிற்கவில்லை. அறநெறியை வளர்த்துக் கொள்வதும் மகான்களுடன் பழகுவதும் அவருக்கு மிகவும் பிரியமாக இருந்தன. மகான்களுடன் பழகும் எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விட்டதில்லை.

**திருகச்சி நம்பியுடன் கூட்டுறவு**

காஞ்சிபுரவாசிகள் அனைவரும் இவரைப் பூவிருந்த வல்லி என்ற சிற்றுரிலிருந்து காஞ்சிமாநகருக்கு வந்து சேர்ந்த வைசிய குலத்தினர் என்பதை அறிந்திருந்தனர் பார்ப்பனர்களும் பிறரும் இவரைக்கௌரவித்தார்கள், வணங்கினார்கள் இவருடன் உரையாடி ஆறுதல் பெற்றார்கள்.

இப்பெரியாரை ஒருநாள் மாலைப் பொழுதிலே இராமாநுஜர் தம் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஒருவர், வீட்டிலிருந்து திரும்பி வரும் வழியில் சந்தித்தார். இது முதலாவது சந்திப்பு சிறுவரின் தேசு பொலிந்த திருமுகம்


**Isbn Number: 978-93-91115-48-7**

திருக்கச்சி நம்பியின் கருணை ஊற்றுகளான கண்களைக் கவர்ந்தன. இவரும் அவரால் பெரிதும் வசீகரிக்கப் பெற்றார். இனம் இனத்தோடே! என்பது போன்ற ஒருவகை உணர்ச்சி எப்படியோ இச்சிறுவன் உள்ளத்திலும் அப்பெரியவர் உள்ளத்திலும் ஒரே சமயத்தில் ஏற்பட்டுவிட்டது.

பகவானுக்குப் பணிசெய்துவரும் இந்த பாகவதருக்கு நாம் பணி செய்ய வேணும் வாய்த்திடும் நாள் என்றோ? என்ற எண்ணம் சிறுவரின் மேதையுள்ளத்தில் பளிச்சென்று தோன்றியது. பாடசாலைகளில் கற்றுக் கொண்டதைவிட அதிக அளவில் திருக்கச்சி நம்பியின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ராமாநுஜர் சில பாடங்களைக் கற்றுக் கொண்டார் எனக் கருதலாம்.

யார் இந்த திருக்கச்சி நம்பி என்பவர்? இவர் பூவிருந்தவல்லியில் அவதரித்தவர். சிறுவயது முதலே தமக்கு அன்பனும் மகனும், எல்லாமுமாகிய பேரருளானனின் தொண்டில் ஈடுபட்டவர். அவருடைய முக்கியமான வேலை வரதராஜனுக்கு எப்பொழுதும் பணிவிடைசெய்வதே கோடை காலத்தில் அவர் குளிர்ந்த நீர் தெளிந்த வெட்டிவேர் ஆலவட்டத்தை (விசிறியை) எம்பெருமானுக்கு மென்மையான தண்ணிய தென்றல் வருமாறு மெதுவாக வீசுவார். மலர்ந்த நறுமணமுள்ள


Isbn Number: 978-93-91115-48-7

பூக்களும், பழுத்த சுவையுள்ள கனிகளும் எங்கே உள்ளன என்பது அவருக்குத் தெரியும். அவற்றை விலை கொடுத்தோ அல்லது இரந்தோ கொணர்ந்து தமது உள்ளம் கவர்ந்த பெருமானுக்கு அர்ப்பணிப்பார். அவர் வைகுந்தத்திலிருந்து பேரருளானுக்கு என்றும் பணியாற்றவே வந்தவர் என்று பலரும் நம்பினர். காஞ்சியில் வாழ்ந்த மக்கள் அவரிடம் பெரிதும் மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனர். பணிவுடனும் குழந்தை போலவும் அவர் எப்போதும் நகைமுகத்துடன் இருப்பார். பிராமணர்களிடம் மிக்க மரியாதை கொண்டிருந்தார். பிராமணர்கள் பலரும் அவரிடம் பெரிதும் மதிப்பு வைத்து அவரைப் பரிவுடன் நடத்தினர். ஆனால் தம்மைச் சாஸ்திரங்களில் கரைக் கண்டவர்களாக எண்ணி அறநெறி போதித்த சிலர் மட்டுமே அவரைப் பைத்தியம் என்றும், வேடதாரி என்றும் உறுதியாகக் கருதி வந்தனர். இத்தகையவர்களில் யாதவப் பிரகாசரும் ஒருவர்.

**யாதவப் பிரகாசர்**

இராமாநுஜருக்கு பதினாறு வயது ஆனபொழுது அவர் தந்தை ஆசூரி கேசவாசாரியர் அவருக்குத் திருமணம் செய்விக்க விரும்பினார் விரைவிலேயே பெற்றோரும் உறவினரும் அயலாரும் களிக்க இராமாநுஜர் ஓர் அழகிய பெண்ணை மணந்தார். திருமண விழா ஒரு வாரம் நிகழ்ந்தது. விருந்துகளில் பசியாற


Isbn Number: 978-93-91115-48-7

உண்டு ஏழைகள் மகிழ்ந்தனர். காந்திமதியும் அவள் கணவரும் புதுமணப் பெண்ணின் எழில் தோற்றம் கண்டு களித்தனர். இப்படி ஒரு மாதம் மகிழ்வின் கழிந்தபின், குடும்பத்தில் துயரம் தோன்றலாயிற்று. கொடிய நோய்வாய்ப்பட்டுக் கேசவாசாரியர் பரமபதம் எய்தினார். அந்திமக் கிரியைகள் உரிய காலத்தில், நடந்தபின்பு இராமநுஜருக்கும் அவரது அன்னைக்கும் மன அமைதி குறைந்தமையால், அவர்கள் காஞ்சிபுரத்துக்கு இடம் பெயர நிச்சயித்தனர். எனவே இராமாநுஜர் காஞ்சியில் ஒரு வீடு கட்டிக் கொண்டு தமது குடும்பத்துடன் அங்கே வாழ வந்தனர்.

புண்ணிய நகரமான காஞ்சியில் அந்த காலத்தில், அத்வைத நெறியைச் சார்ந்த மக்கள் புகழ்பெற்ற பண்டிதராக யாதவப் பிரகாசர் என்பவர் திகழ்ந்தார். அவருடைய புலமையினால் கவரப் பெற்றுப் பல மாணவர்கள் அவரிடம் பயில வந்தனர். சாஸ்திர அறிவைப் பெறுவதற்கு மிக்க ஆர்வம் கொண்ட இராமநுஜரும் அவருக்கு மாணவரானார்.

இராமாநுஜரின் முகப்பொலிவிலும் குண நலத்திலும் மதிநலத்திலும் யாதவப்பிரகாசர் முதல் ஈடுபடலானார். இவரைத் தம் முக்கிய சீடராக மதிப்பதும் உண்டு. எனினும் இந்தக் குரு சிஷ்ய அன்பு நீடித்திருக்கவில்லை. யாதவப் பிரகாசரின் வேதாந்தக்


Isbn Number: 978-93-91115-48-7

கொள்கையில் இராமாநுஜரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்த பக்தி நெறிக்கு இடம் இல்லை. ஆண்டவனுக்கும் அடியவர்களுக்கும் பணி புரிவதிலேயே பேரின்பநிலை எய்தப்பெறும் என்ற கொள்கைக்கோ அருள் நெறிக்கோ இடமில்லை. யாதவப் பிரகாசரின் வேதாந்த விளக்கங்களை மறுத்து ராமாநுஜர் வேறுவிதமாகப் பொருள் கூற துணிந்தார்.

யாதவர் கூறும் அத்வைதப் பொருள்களை எல்லாம் அமைதியாக உள்ளத்தில்பதிய வைத்துக் கொண்டு ஆற அமர அலசி ஆராய்ந்து. நம் பக்திநெறிக் கொள்கைக்கு இணங்குமோ? என்று பார்த்தார். குருவின் காதிலும் விழும்படி உரக்கச் சிந்தித்தார். தர்க்கம் செய்து குருவையும் தம் வழியில் சிந்திக்குமாறு தூண்ட முடியுமா என்றும் முயன்று பார்த்தார் யாதவரோ இவர் வார்த்தைகளைப் புறக்கணித்துப் பராமுகமாயிருந்து விடுவார். எனினும், இராமாநுஜர் தாம் குருவுக்குச் செய்ய வேண்டிய பணிகளையும் மரியாதைகளையும் செய்யத் தவறவில்லை. அதனால், யாதவப் பிரகாசர்க்கு இவர்மீதுள்ள அபிமானம் முற்றும் குறைந்துவிடவில்லை. மற்ற மாணாக்கர்களைப் போல் இவரையும் ஏவிக் கூவிப் பணிக்கொள்வார்.

சீடர்கள் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போதும் அவர்களுக்குக்குரு கற்பிப்பார். இப்படியிருக்க ஒரு நாள்


**Isbn Number: 978-93-91115-48-7**





இராமாநுஜர் யாதவப் பிரகாசருக்கு எண்ணெய் தேய்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது மாணாக்கர் ஒருவர் வேதவாக்கியம் ஒன்றுக்குப் பொருள் கேட்டார். அதற்கு யாதவப்பிரகாசர் சொன்ன பதில் இராமாநுஜருக்கு மிக்க அதிருப்தியையும் மனவருத்தத்தையும் உண்டாக்கி விட்டது. சாந்தோக்ய உபநிஷத்தில் வரும் வாக்கியம் அது. முதல் அத்தியாயத்தின் ஆறாவது பிரிவில் ஏழாவது மந்திரத்தின் முற்பகுதியில் 'கப்யாஸம்" என்று வரும் வார்த்தைக்குச் சங்கராசாரியர் கூறியிருந்த பொருளை யாதவப் பிரகாசர் எடுத்துக் காட்டியதும் இராமாநுஜர் அது உசிதமானதன்று என்றார்.

**மந்திரம்**

*தஸ்ய யதா கப்யாசம் புண்டரீகம் ஏவம் அசஷினே*

(வைணத்திலகம் கவிதை நாடகம். டாக்டர் ஆ.கணேசன். ப.4) யாதவப் பிரகாசர் விளக்கம் கபி எனும் சொல்லுக்கு குரங்கெனும் பொருளாம் அசம் அதனுடைய பின்புறம் தொடுத்துச் சொன்னால் இறைவன் கண்கள் குரங்கின் பின்புறம் போன்றதாகுமே இந்த விளக்கத்தைக் கேட்ட இராமாநுஜர் கண்ணீர் வர அழுகிறார். அழுவது ஏனடா? அர்த்தம் உனக்கு வேறாய்ப் படுவது கூறு என்கிறார்.

**கபியின் பொருளே கதிரவன் ஆகும்**
**அசம் என்றால் மலர்தல் ஆகும் .**

**(வைணத்திலகம் கவிதை நாடகம் - ப.5)**


Isbn Number: 978-93-91115-48-7

கதிரவன் ஒளியால் மலர்ந்திடும் தாமரை மலரினைப் போன்றதே மாதவன் கண்கள் என்னும் பொருளாய் என்னுள் தோன்றும் என்கிறார். புதுப்புதுப் பொருளாய் தோன்றினால் சீடனாய் இனி இங்கு இருந்திட வேண்டாம் என கூற இராமாநுஜர் எழுந்து குருவை வணங்கி விட்டுச் செல்கிறார்.

யாதவப் பிரகாசர் மனதுள் இப்படி இவனை வளர விட்டால் எப்படி என் பிழைப்பிங்கே நடக்கும் என் கருத்திற்கு எதிர் கருத்துரைப்பதை ஏற்றிட மாட்டேன் அத்வைதம் இவனால் மாசுறும் என்றால் சத்தியமாய் நான் சகிக்கமாட்டேன். கவனமாய் இவனைப் பார்த்திட வேண்டும் இதுவரை இவன்போல் என்னை எதிர்த்து எதுவும் எவரும் சொன்னதில்லை. அப்போது சீடன் ஒருவன் இவனை எப்படி ஒழிப்பது குருவே? என கேட்க காசியாத்திரை என்ற சொல்லி அழைத்துச் சென்று அங்கே அவனை அழித்திட வேண்டும் என்கிறார்.

**காசி யாத்திரை**

யாதவப் பிரகாசர் சீடர்களைக் காசி யாத்திரைக்கு அழைத்து சென்றார் காசிக்கு அழைத்து செல்லும் வழியில் ஓர் இரவில் கோவிந்தன் இராமாநுஜரிடம் குருவின் சதித்திட்டத்தைப் பற்றிக் கூறுகிறான்.

**ஒரு நாள் இராமாநுஜரும் கோவிந்தரும் தனியே அருகில் இருந்த குளத்துக்குக் கைகால் கழுவுச்**


Isbn Number: 978-93-91115-48-7

**சென்றபொழுது கோவிந்தர் ஆசிரியர் கொண்டிருந்த தீய எண்ணத்தை அண்ணனிடம் வெளியிட்டார். 'அண்ணா! இந்தத் தீயவர்கள் யாருமில்லாத காட்டில் உங்களைக் கொன்று போடுவார்கள்.**

என்று கூறி இராமாநுஜரை விட்டு அகன்று மற்றச் சீடர்களுடன் சேர்ந்து கொண்டார்.

**சுற்றுப்புறத்தைப் பார்த்தபடி**
**இந்த இருளில் எப்படி போவேன்**
**துணைக்கு ஒருவரும் இல்லா நிலையில்**
**தனியே எப்படி தடம் நான் காண்பேன்**
**அடர்ந்த இருளில் அடர்ந்த காட்டில்**
**நடந்து செல்லல் எப்படி இயலும்**
**வரதராசனே வருவாய் வருவாய்**
**கரங்கொடுத்து என்னைக் காப்பாய் நீயே**
**அஞ்சுவது அஞ்சாமை பேதமை யன்றோ**
**அஞ்சுதல் தவிர்க்க அரங்கா வருக!**

**(வைணத்திலகம் கவிதை நாடகம் - ப.9)**

அப்போது அங்கே வேடுவத் தம்பதியர் வருகின்றனர். இராமநுஜரின் வருத்தமான மொழியைக் கேட்டு வேடுவன் இராமநுஜரிடம் கூறுகிறார்.

**வருந்திட வேண்டாம் வழியில் உனக்குத்**
**துணையாய் வந்துன் துன்பம் களைவோம்**
**காஞ்சியில் உன்னைக் கொண்டு சேர்ப்போம்**
**கவலை வேண்டாம் கலங்கிட வேண்டாம்**
**இரவு இங்கே தங்கிச் செல்வோம்**


Isbn Number: 978-93-91115-48-7

**காலையில் காஞ்சியில் கொண்டு சேர்ப்போம்.**

**(வைணத்திலகம் கவிதை நாடகம் - ப.10)**

காலையில் விழித்ததும் வேடுவத் தம்பதியரைக் காணாமல் அஞ்சிய நிலையில் இரவில் துணையாய் வந்த வேடுவர் எங்கே சென்றார்? எப்படி மறைந்தார் என்ற நிலையில் பெருமாளை தன்நிலை கண்டு கருணை காட்டி வழித்துணையாக வந்தார் என்பதை உணர்ந்து காஞ்சிபுரம் வந்ததை உணர்ந்து அகமகிழ்ந்தார்.

காசி யாத்திரை முடிந்து யாதவப்பிரகாசர் மற்றும் சீடர்கள் காஞ்சிக்குத் திரும்பினர். யாதவப்பிரகாசர் இராமாநுஜருக்குத் தாம் இழைக்க நினைத்தக் கொடுமையையும் வழியில் இராமாநுஜரைக் காணாமல் அவருக்கு என்ன ஆனதோ என்று பயந்தவாறு உள்ளார். காஞ்சியை அடைந்த இராமாநுஜர் தம் குருவான யாதவப்பிரகாசரைக் காணுகிறார் வழியில் நிகழ்ந்த நிகழ்வுகளை எடுத்துக் கூறுகிறார் அப்போது பெருமாளே இராமானுஜருக்கு வழிதுணையாக இருந்துள்ளார் என்பதை உணருகிறார்.

**ஆளவந்தார்**

யமுனைத்துறைவர் என்ற பெயர் பெற்ற ஆளவந்தார் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். இவருடைய பாட்டனார் நாதமுனிகள் துறவியானார். எனவே, இவரை மிகவும் சிரமப்பட்டு இவருடைய


Isbn Number: 978-93-91115-48-7

பாட்டியும் தாயுமே வளர்த்தனர். தமது தீவிரமான அறிவின் வலிமை கொண்டு, இவர் பன்னிரண்டாவது வயதில், பாண்டிய பேரரசில் பாதிப் பங்கைப் பெற்றார். இவரது நன்னெஞ்சில் திருமால் மட்டுமே குடி கொண்டிருந்ததனால், வைணவர்கள் இவரைப் பரமனது சிம்மாசனமென்று போற்றுகின்றனர். சாஸ்திரங்களிலும் தம்முடன் படித்த மாணவர்களை மிஞ்சி நின்றார்.

அனைத்து நூல்களிலும் இவரது வல்லமையைக் கண்ட இவரது ஆசிரியரான மகாபாஷ்ய பட்டர் இவரிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். இவரது இனிய எளிய சுபாவத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த சக மாணவர்கள் பாடம் கற்க மிக்கக் களிப்புடன் விரும்பி வந்தனர். திருவரங்கத்தின் திருப்பணியில் ஈடுபட்டி கொண்டு இருந்தபோது வயோதிகத்தின் காரணத்தால் இறைவன் அடிகளில் இணையும் நேரம் நெருங்குவது என்பதை உணர்ந்து இராமாநுஜரை அழைத்து வர சீடர்களிடம் முன் மொழிகிறார். இதுவரை இறைவன் அருளால் என்னால் ஆற்றிய பணியில் அகம் நிறைவடைந்தது எனினும் மூன்று ஆசைகள் முடியா நிலையில் இருப்பதை நினைவில் வைத்து வருந்துகிறார்.

**சாதிகள் அற்ற சமூகம் அமைய**

**ஆசைப் பட்டேன் இதுமுதல் ஆசை**

**(ஒரு விரலை மடக்குகிறார்)**

 Isbn Number: 978-93-91115-48-7

**குறுகிய நிலையில் இருக்கும் வைணவம்**
**குவலயம் எங்கும் பங்கிப் பெருகி**
**விரிந்திட வேண்டும் இரண்டாம் ஆசை**
**பிரம்ம சூத்திரம் தன்னை ஆய்ந்து**
**புதிய விளக்கம் கண்டு அதற்கு**
**வைணவ நெறியில் விரிவுரை தந்திட**
**வேண்டும் என்பதும் மூன்றாம் ஆசை**
**(இன்னொருவிரலை மடக்குகிறார்)**
**மூன்றும் முடியா நிலையில் என் உயிர்**
**போவது நினைத்தால் பெருகிடும் ஏக்கம்.**

**(வைணத்திலகம் கவிதை நாடகம் - பக்.29-30)**

அனைவரும் வருத்தத்துடன் உள்ளனர். அப்போது அங்கே இராமானுஜர் வருகிறார். ஆளவந்தாரின் சீடர்கள் இராமானுஜரைக் கண்டு மகிழ்கிறார்கள். இராமானுஜர் ஆளவந்தாரின் உடலைப் பார்த்து வணங்குகிறார் ஆளவந்தாரின் கைவிரல்களில் மூன்று விரல்கள் மடங்கி இருப்பதைப் பார்த்து சீடர்களிடம் காரணம் கேட்கிறார். சீடர்கள் ஆளவந்தாரின் ஆசைகளை விவரிக்க இராமானுஜர் அகிலம் எங்கும் வைணவம் தழைக்க அடியேன் என்னால் இயன்றதைச் செய்து இறைவன் அடிகளில் இரண்டறக் கலப்பேன் எனக் கூறுகிறார்.

## திருக்கோட்டியூர் நம்பி

ஸ்ரீ ரங்கத்துக்கு வந்தபின்பு, இராமானுஜர் பெரியநம்பியையே தம் ஆசாரியராக ஏற்று


Isbn Number: 978-93-91115-48-7

ஆளவந்தாரின் பிரிவினால் ஏற்பட்ட வருத்தத்தை மெதுவாக மறந்தார். இராமாநுஜர் தமது நன்டைத்தையினால். சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடி லட்சியச் சீடன் ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார்.

> **யார் தனது உடல், செல்வம், அறிவு, இருப்பிடம், செயல், பண்புகள், உயிர் ஆகியவற்றையும் ஆசாரியருக்காவே வைத்திருக்கிறானோ அவரே உண்மையான சீடன்.**

**(ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு - ப.197)**

இத்தகைய லட்சியச் சீடரான இராமாநுஜர் பெரிய நம்பியிடமிருந்து நியாசதத்துவம், கீதார்த்தசங்க்ரஹம், சித்தித்ரயம், வியாசசூத்திரங்கள், பாஞ்சராதிர ஆகமம் ஆகியவற்றைப் பயின்றார்.

சீடரின் ஒப்பற்ற அறிவாற்றலைக் கண்ட பெரியநம்பி புதல்வர் புண்டரீகாட்சரை இராமாநுஜரிடம் சீடராக ஒப்படைத்தார். அவர் இராமாநுஜரிடம் கூறினார், திருக்கோட்டியூர் என்ற வளமான நகரம் உள்ளது. அங்கே மிகவும் தூய அறிஞரான திருக்கோட்டியூர் நம்பி வாழ்கிறார். நீ திரு எட்டெழுத்து மந்திரத்தைப் பொருளுடன் கற்க விரும்பினால், அவரைத் தவிர வேறு எவரும் உனக்கு அதைக் கற்பிக்க முடியாது நீ தாமதமின்றி அவரிடம் சென்று திருமந்திரத்தைப்

 Isbn Number: 978-93-91115-48-7





பொருளுடன் கற்று வா என்றார். இந்த உபதேசப்படியே இராமாநுஜர் உடனே திருக்கோட்டியூருக்குச் சென்று திருக்கோட்டியூர் நம்பியைத் தரிசித்தார். அவர் திருவடிகளில் வணங்கித் தாம் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார் அதற்குத் திருக்கோட்டியூர் நம்பி இன்னொரு நாள் வா பார்க்கலாம் என்றார். இதைக் கேட்டு இராமாநுஜர் வருத்தத்துடன் தமது இருப்பிடத்திற்குத் திரும்பினார். இரண்டொரு நாள் கழித்துத் திருக்கோட்டியூர் நம்பியே அரங்கப்பெருமானை சேவிக்க சேவிக்க விழா நாளில் ஸ்ரீரங்கத்துக்கு வந்தார். அப்பொழுது அரங்கனின் கட்டளைப்படி அர்ச்சகர்கள் அவரிடம் திருமந்திரத்தைப் பொருள் விரிவுரையுடன் இராமாநுஜருக்குக் கற்பிப்பாயாக. அதை ஏற்றுக் கொள்வதற்கு உரிய சிறந்த தகுதி அவருக்கே உள்ளது என்று கூறியதாக வரலாறு தெரிவிக்கிறது.

இராமாநுஜர் மறுபடியும் திருக்கோட்டியூர் நம்பியின் திருவடிகளில் பணிந்தார். ஆனால் வெற்றியுறவில்லை. இப்படிப் பதினெட்டுத்தடவை அவர் திருக்கோட்டியூருக்கு நடந்தார். அத்தனை தடவையும் நம்பி அவருக்கு உபதேசிக்க மறுத்துவிட்டார். எனவே, தமக்கு ஏதோ தூய்மையற்ற தன்மை இருப்பதாகவும் அதனால்தான் அந்தப் பரம ஆசாரியர் தமக்கு அருள் புரியவில்லை என்று எண்ணி இராமாநுஜர் மிக்க

 Isbn Number: 978-93-91115-48-7

ஏக்கத்துடன் வருந்திக் கண்ணீர் பொழியாலானார். இந்தச் செய்தியைச் சிலர் திருக்கோட்டியூர் நம்பியிடம் தெரிவிக்கையில் அவர் நெஞ்சம் கனிந்தது. பிறகு திருஎட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார்.

> **பரமனான திருமலைத் தவிர இந்த மந்திரத்தின் பெருமை யாருக்கும் தெரியாது. நீ இதை ஏற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்தவன் என்பதனால் உனக்கு உபதேசித்தேன். இந்தக் கலியுகத்தில் உன்னைத் தவிர இதற்குத் தகுதியுள்ளவன் யாருமில்லை. இந்த மந்திரத்தைக் கேட்கும் யாரும் இறந்தபின்பு முக்தியடைந்து வைகுந்தம் செல்வான். எனவே இதை வேறு யாருக்கும் கூறாதே.**
>
> **(ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு – ப.199)**

ஆசாரியரிடமிருந்து இந்த வார்த்தையைக் கேட்டு இராமாநுஜர் மிகவும் மகிழ்ந்தார். அவர் ஆசாரியரிடம் விடைபெற்று ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டார். போகும் வழியில் திருக்கோட்டியூர்க் கோவிலின் கோபுர வாசலை அணுகியதுமே. அவர் வழியில் போகிறவர்கள் அனைவரையும் கூப்பிட்டு நான் உங்களுக்கு விலைமதிப்பற்ற ரத்தினமொன்று கொடுக்கிறேன் என்றார்.

> **சகோதரர்களே, சகோதரிகளே! நீங்கள் எனக்கு என் உயிரினும் பிரியமானவர்கள். நீங்கள் இந்த உலகத்துத் துயரங்களிலிருந்தும் வேதனைகளில் இருந்தும்**

 **Isbn Number: 978-93-91115-48-7**

**நிரந்தரமாக விடுபட்டு முக்தியைப் பெற விரும்பினால், நான் சிரமப்பட்டு உங்களுக்காகக் கொண்டு வந்திருக்கும் இரத்தினமான மந்திரத்தை என்னுடன் மூன்று முறை உச்சரியுங்கள் இதைச் செய்து பேறு பெற்றவர்கள் ஆவீர்கள்.**

**(ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு - ப.200)**

இராமானுஜர், கம்பிரமான குரலில், தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து "ஓம் நமோ நாராயணாய" என்ற திருஎட்டெழுத்து மந்திரத்தை உரக்க கூவினார். ஆண், பெண், குழந்தைகள் எல்லாருடைய முகத்திலும் சொல்லவொண்ணாத களிப்பு நிறைந்திருந்தது. இதற்குள், இராமானுஜர் என்ன செய்திருக்கிறார் என்பதை அறிந்திருந்த திருக்கோட்டியூர் நம்பி, மிக்க கோபத்தில் அவரை அணுகிறார்.

**அறவே தகுதியற்ற உனக்கு உயர்ந்த இரத்தினத்தைக் கொடுத்த பெரும்பாவத்தை நான் இழைத்திருக்கிறேன். மறுபடி உன் முகத்தில் விழிக்கும் பெரும்பாவத்தில் என்னை ஆழ்ந்த இங்கு ஏன் வந்தாய்? உன்னைப் போன்ற கொடிய பேய்க்கு பயங்கரமான நரகத்தில் இடம் கிடைப்பது கஷ்டம்.**

**(ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு - ப.201)**

இதைக் கேட்டுச் சிறிதும் அஞ்சாமல், மிக்க பணிவுடன் இராமானுஜர் மறுமொழி பகிர்ந்தார் இராமானுஜர் தக்கக் காரணங்களுடன் இனிமையாக


Isbn Number: 978-93-91115-48-7

மறுமொழி புகன்றதுமே நம்பியின் முகத்தில் சினத்தின் அடையாளமே இல்லாததைக் கண்டு மன அமைதி உற்றார். இராமாநுஜரின் இனிய பண்பையும் பணிவையும் கண்டு பெரிதும் களிப்புற்ற திருக்கோட்டியூர் நம்பி தம் மகனான தெற்காழ்வானை இராமாநுஜரிடம் சீடராக ஒப்படைத்தார் நம்பியிடம் விடைபெற்று இராமாநுஜர் தம் சீடர்களுடன் ஸ்ரீ ரங்கத்துக்குப் புறப்பட்டார். இந்த நிகழ்வுக்குப் பிறகு அனைவருமே அவரை இளையபெருமானான லட்சுமணனின் அவதாரம் என்று உறுதியாகக் கருதலாயினர்.

**சமயப்புரட்சி**

மாறனேர் நம்பி ஒரு புறம் இருக்கிறார் அங்கு பெரிய நம்பி கையில் கோயில் பிரசாதத்தைக் கொண்டு வருகிறார். மாறனேர் நம்பியைத் தொட்டு எழுப்புகிறார். தாழ்ந்தவன் என்னைத் தொட்டிட வேண்டாம் என மறுகிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் படைப்பில் இல்லை உலகில் உள்ளவர்கள் தாங்கள் செய்யும் தொழிலால் பிரிவை அமைத்தனர் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

**மானிட சாதி என்பது அன்றி**
**மற்றோர் சாதி மண்ணில் இல்லை**
**வேதம் செய்த வியாசர் பெருமான்**
**செம்பட வர்தான் சீர்மிகு இராம**


Isbn Number: 978-93-91115-48-7

**காதை தன்னை தந்தவர் யாரோ?**
**வேடர் அன்றோ வான்மீகி முனிவர்**

**(வைணத்திலகம் கவிதை நாடகம் - ப.46)**

இச்சமயம் இராமநுஜர் பெரிய நம்பி கூறியது எல்லாம் உண்மையான வார்த்தைகள் தாங்கள் தங்களைத் தாழ்த்தி நினைக்க வேண்டாம் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை எதுவும் இல்லை. அரங்கன் கருணை அனைவருக்கும் உரியது வைணவ நெறியில் வேற்றுமை இல்லை வைணவ நெறி வையம் தழுவினால் வேற்றுமை என்பது வேரொடு விழும் சாதி இல்லா சமூகம் அமையப் பணிபுரிந்திருப்பதே பரமன் பணி என்ற கருத்தை முன்மொழிகிறார்.

பிற மக்களிடம் பகைமை உணர்ச்சி தவிர்க்கப்பட வேண்டும் என்பதனை,

**கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும் கருத்துள்ளே**
**திருத்தினேன் மனத்தைப்**
**பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை**
**பெருநிலத்தாருயிர் கெல்லாம்**
**செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்**
**செல்கதிக்குய் யுமாறெண்ணி**
**நற்றுணையாகப் பற்றினேன் அடியேன் நாராயணா**
**என்னும் நாமம்.**

**(ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - பா.955,231)**


Isbn Number: 978-93-91115-48-7





எனத் திருமங்கை ஆழ்வாரும் பாடுவார். கற்றவர்களுக்கெல்லாம் கதியாவது வைஷ்ணவம் என்ற நாற்பாற் குலத்திற்கும் கீழ்ப்பட்டவர்கள் என்று கருதப்பட்டிருந்தவர்களைத் திருக்குலத்தாராக்கித் திருத்த முயன்றது இராமாநுஜரின் திருவுள்ளம் ஆகும். அக்காலத்துச் சோழ சக்கரவர்த்தியையும் பயமுறுத்திவிட்டது.இராமாநுஜரின் செல்வாக்கு. எனவே, அவன் எத்தகைய அடக்குமுறையை மேற்கொள்ளாம் என்று ஆலோசிக்கத் தொடங்கினானாம் என்று ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரைத் கதையில் எல்லாம் ஒரு முகமாகக் குறிப்பிடுகின்றன.

> **இராமாநுஜர் நாற்பத்தைந்து பேருடன் திருவரங்கத்திலிருந்து மேல்நாட்டிற்கு இன்றைய மைசூர்ச்சீமைக்கு புறப்பட்டதாக ஆறாயிரப் படி குரும்பரைநூல் தெரிவிக்கிறது. (ஸ்ரீ ராமாநுஜர் - ப.241)**

இராமாநுஜர் மைசூர்ச் சீமையைச் சார்ந்த தொண்டனூர்க்கு தம் குழுவினருடன் வந்தார் அங்கு விட்டல தேவராயன் என்ற சைன அரசன் அதிபதியாக இருந்தான். அவனுடைய மகளுக்கு பேய்பிடித்திருந்தது என்று நாடெங்கும் பேச்சாயிருந்தது. அரசனது புதல்வியை இவரது ஸ்ரீ பாத தீர்த்தத்தினாலேயே தொண்டனூர் நம்பி முதலானவர்கள் சித்தப்பிரமை தெளிவித்துக் குணப்படுத்திவிட்டதாகக் குருபரம்பரை


Isbn Number: 978-93-91115-48-7

ஐதிகங்கள் தெரிவிக்கின்றன. பிறகு அரசனும் குடும்பத்தினரும் சீடராயினர் பிறகு ஆயிரக்கணக்கான ஜைனர்கள் இராமாநுஜரிடம் தர்க்கவாதம் செய்யவந்து தோற்றுப் போனார்கள் என்று அவர்களில் சிலர் ஸ்ரீ வைஷ்ணவர்களாகி விட்டார்களென்றும் குருபரம்பரை நூல்கள் கூறுகின்றன.

ஒரு சமயம் துளசிக்காட்டில் போய்க் கொண்டிருந்தபோது இராமாநுஜர் ஒரு புற்றக்குள்ளே விக்கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்தார். அது பெருமாள் விக்கிரகம் முஸ்லீம்களின் ஒரு படையெடுப்பு நிகழ்ந்த போது பக்தர்கள் இந்த விக்கிரகத்தை இங்கே மறைத்து வைத்துவிட்டுப் போனதாக இவ்வூரிலுள்ள முதியவர்கள் தெரிவித்தனர். இராமாநுஜர் பெருமாளுக்கு தாமே மூன்று நாள் ஆராதனை செய்தார். இப்பெருமாளுக்கு விழாக்கள் நடத்தவேண்டும் என்று தீர்மானித்தார் இராமாநுஜர் ஆனால் உத்ஸவ விக்கிரகம் காணப்படவில்லை. 'ராமப்ரியர்' என்ற அந்த உத்ஸவ விக்கிரகம் டில்லியில் 'துருஷ்க ராஜகிருஹத்திலே' இருப்பதாக தெரிய வந்தது. இராமாநுஜர் டில்லிக்குச் சென்றதாகவும். அங்கே அந்த அரசனிடம் எங்கள் குலதெய்வமான ராமப்ரியர் இங்கே எழுந்தருளியிருக்கிறார். அவரைத் தரவேணும் என்று வேண்டிக் கொண்டதாகவும். அதற்கு டில்லி அரசன். “கொள்ளைகொண்டு சிறை வைத்த எம்பெருமான்கள்


Isbn Number: 978-93-91115-48-7

சிறைச்சாலையைச் சோதித்துக் கொள்ளீர்! என்று பதில் சொன்னதாகவும் ஆறாயிரப்படி குரு பரம்பரை அறிவிக்கிறது. பிறகு ராமாநுஜர் தாம் தேடிவந்த விக்கிரகம் டில்லி அரசனின் மகள் வசமாகியிருப்பதாகத் தெரிந்துக்கொண்டார். இதை இவர் அரசனுக்கு அறிவித்ததும் கடைசியாக ராமப்பிரியரைக் கொண்டு போவதற்கும் டில்லி அரசன் சம்மதித்துவிட்டான்.

இராமாநுஜர் டில்லியிலிருந்து 'செல்வ பிள்ளையுடன் திரும்பிவரும் வழியில் ஓரிடத்தில் திருடர்கள் இவரையும் இவருடைய சீடர் குருவையும் எதிர்த்து ராமப்ரிய விக்கிரகம் உள்ளிட்ட எல்லாவற்றையும் கொள்ளையடித்துக் கொண்டு போக முயன்றனராம். அப்போது அருகில் வசித்து வந்த ஹரிஜன வகுப்பினர் உதவிக்கு ஓடிவந்து திருடர்களைத் துரத்திவிட்டு, இராமாநுஜரையும் சீடர்களையும் ராம்ப்ரிய விக்கிரகத்தையும் ஆபத்திலிருந்து காப்பாற்றித் திருநாராயணபுரத்தில் கொண்டுவந்து சேர்ந்தார்களாம்.

கைம்மாறு கருதாது இவர்கள் செய்த அந்த உபகாரத்திற்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்ற திருநாராயண புரத்தில் நடக்கும் பிரமோத்ஸவ காலத்தில் இவர்களுக்குச் சில வரையறைகளுடன் ஆலயப்பிரவேச அனுமதி கொடுத்தாராம். அந்த வழக்கம்


Isbn Number: 978-93-91115-48-7





திருநாராயணபுரம் முதலான சேஷத்திரங்களில் இன்னும் நடைமுறையில் இருக்கிறது.

**சீடர்கள் குழாம்**

இராமாநுஜரின் மடாலயத்துக்குரிய தனிப் பெருஞ்செல்வம் கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப் பெருமாள், எம்பெருமானார், கிடாம்பியாச்சான், அனந்தாழ்வான், அகளங்கன், எம்பார் வடுகநம்பி முதலான சீடர்களின் தொகுதியாகும். இத்தொகுதியில் பொன்னாச்சியார் என்ற பெண்மணிக்கும் இடம் உண்டு.

இராமாநுஜரின் சீடர்களில் கூரேசன் என்ற கூரத்தாழ்வானுக்கு ஒரு தனிச்சிறப்பு. 'ஊரும் நாடும் உலகமும் நம்மைப்போல ஆகச்செய்ய வேண்டும் என்ற நோக்குடன் வாழ்ந்த இராமாநுஜருக்கு பவித்திரமாக அமைத்து ஸ்ரீ பாஷ்யத்தை இயற்றும்போது உசாத்துணையாகவும் அமர்ந்திருந்த கூரத்தாழ்வான், இராமாநுஜரது வாழ்க்கையின் ஜீவநாதத்தை மற்றவர்களைக் காட்டிலும் தம் உட்செவியில் தெளிவாகக்கேட்டு, உள்ளத்தில் நன்றாகப் பதிவு செய்து கொண்டிருந்தார் என்பது திண்ணம்.

**விசிஷ்டாத்வைதம்**

விசிஷ்டஸ்ய அத்வைதம் என்று விரிகிறது விசிஷ்டாத்வைதம் என்பது உயிர்ப் பொருளையும் உயிர்


Isbn Number: 978-93-91115-48-7

அல்லாத பொருளையும் சரீரமாக உடைய வஸ்துவின் அத்வைதம் என்பது விசிஷ்டாத்வைதம் என்ற பதத்தின் பொருள் சித்து என்ற உயிர் பொருளையும் அசித்து என்ற உயிரல்லாத பொருளையும் சரீரமாக உடைய வஸ்து அல்லது பரம்பொருள் இரண்டில்லை, ஒன்றே ஆகும் என்பதுதான் விசிஷ்டாத்வைதம் என்பதில் வரும் அத்வைதத்திற்கு உரிய பொருளாகும்.

> **இறைவன் வேறு, உயிர் வேறு அல்ல இரண்டும் ஒன்றுதான் என்பது பெறப்படுகின்றது. இதுவே இராமானுஜர் பேசும் அத்வைதம், சங்கரம், இரண்டில்லை, உள்ளது ஒன்றுதான் எண்ணும்போது உயிர்கள் கிடையாது உலகு கிடையாது பிரம்மம் ஒன்றே உள்ளது என்பது கருத்து. ஆனால் இராமானுஜர் பேசும் அத்வைதத்தில் உலகும் உண்டு உயிர்களும் உண்டு. ஆனால், அவை பிரம்மத்துக்கு விசேஷணங்கள் பிரம்மம் அவ்விசேஷணங்களை உடைய விசேஷயம் இந்த விசேஷணம், விசேஷியம் ஆகிய இரண்டும் சேர்ந்த விசிஷ்டமே இராமாநுஜர் பேசும் பரம்பொருள் இதனாலேயே அவரது அத்வைதக் கொள்கைக்கு 'விசிஷ்டாத்வைதம்' என்ற பெயர் ஏற்படலாயிற்று. (இந்திய தத்துவ ஞானம் - ப. 345 )**

சிந்து, அசிந்து, ஈச்வரன் என்ற மூன்று பொருள்களும் என்றும் உள்ள பொருள்கள் என்றும், இந்த முப்பொருளின் கூட்டமே உலகம் என்றும். ஈச்வரன்


Isbn Number: 978-93-91115-48-7

எண்ணிறந்த அழகிய மங்கள குணங்களை உடையவன் என்றும் ஸ்ரீ பாஷ்யம் வெளியிடும் விசிஷ்டாத்வைதம் தெரிவிக்கிறது.

**இராமாநுஜர் அருளிய நூல்கள்**

நவ நிதிகள் போலவும், நவ ரத்தினங்கள் போலவும் இராமாநுஜர் அருளிய நூல்கள் மொத்தம் ஒன்பது அவையாவன:

1. வேதார்த்த ஸங்கீரஹம் – வேதங்களில் ஒன்றுக்கு ஒன்று பொருள் மாறுபடும் மந்திரங்களை ஒருங்குபடுத்தி, விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை உறுதியாக நிறுவுகிற நூல்.
2. ஸ்ரீ பாஷ்யம் – பாதராயணரின் பிரம்ம சூத்திரங்களுக்கு விரிவான விளக்கவுரை.
3. கீதா பாஷ்யம் – பகவத் கீதைக்கு விரிவான தெளிவான பேருரை.
4. வேதாந்த தீபம் – பிரம்ம சூத்திரங்களுக்குச் சுருக்கமான பேருரை.
5. வேதாந்தசாரம் – பிரம்ம சூத்திரங்களுக்கு அமைந்த ஆரம்ப மாணவர்களுக்கு உரிய பேருரை.
6. சரணாகதி கத்யம் – இறைவனைப் புகலாகப் பற்றுவதாகிய சரணாகதி பற்றி விவரித்து உரைக்கும் நூல்.
7. ஸ்ரீ ரங்க கத்யம் – அரங்கநாதனை வர்ணித்து


Isbn Number: 978-93-91115-48-7

அவனிடம் சரணாகதி இயற்றுவதை கூறும் நூல்.

8. ஸ்ரீ வைகுண்ட கத்யம் – வைகுண்ட லோகத்தை பக்தி மணத்துடன் வர்ணித்து, முக்திநிலை பற்றிக் கூறுகிற நூல்.

9. நித்யக்ரந்தம் - அடியார்கள் தினந்தோறும் பரமனை வழிபடுவதற்கு உரிய முறைகளையும் விதிகளையும் சுருக்கமாகக் கூறுகின்றன.

**இராமாநுஜரின் இறுதி காலம்**

இராமாநுஜர் திருவரங்கத்தில் வீற்றிருந்து தம் சீடர்களுக்கு ரகசியார்த்தங்களை விளக்கிக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் மௌனமாகி அந்தர்முகமானார். அவருடைய திருமேனி அசையாமல் ஜடம் போல இருந்தது. சிறிது பொறுத்துச் சுயநினைவு பெற்ற அவரை. வியப்புற்ற சீடர்கள் வினவியபொழுது கூறினார். இன்றைக்கு ஸ்ரீபெரும்புத்தூரில் வாழும் மக்கள் தம் அன்பினால் என்னைக் கட்டியிருக்கிறார்கள். கல் விக்கிரகத்தில் பிராண பிரதிஷ்டை செய்து இப்பொழுது அவர்கள் விக்கிரகத்தின் கண்ணைத் திறக்கும் சடங்கை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்றார். இதைக் கேட்ட சீடர்கள் அன்புக்கு உரிய ஆசாரியர் தங்களுடன் நேரில் இருக்கப் பெற்றிருப்பதை அறிந்து மகிழ்ந்தார்கள்.

சந்தேகமின்றி ஸ்ரீ ரங்கத்தில் வாழ்ந்த பக்தர்கள் பாக்கியசாலிகளே ஏனென்றால் தமது வாழ்வில் கடந்த


Isbn Number: 978-93-91115-48-7

அறுபதி ஆண்டுகளாக இராமாநுஜர் ஒரு தடவைகூட அரங்கனின் பொன்னடிகளை விட்டு நீங்கியதில்லை. இப்படி உலகில் பலரின் நலனுக்காகவும் பலரின் பேரின்பத்துக்காகவும் இரட்டை அறுபது ஆண்டுகள் வாழ்ந்து, இந்த உலகை வைகுண்டம் போலவே இன்பநிலமாக்கி தாம் தேர்ந்தெடுத்த சில சீடர்களுக்குத் தம்மைப் போலவே குணாதிசயங்களைப் பெறும் தகுதியை அளித்த பின்பு, பரமபதத்தை அடைவதற்கு ஆயத்தம் செய்யலானார்.

நல்ல திறமையுள்ள சிற்பிகளை வருவித்து என்னைப் போலவே சிலை வடிவம் அமைக்கச் சொல்லுங்கள் என்றார். முன்றே நாட்களில் இராமாநுஜரின் சிலைவடிவம் சித்தமாகியது. பிறகு அந்தச் சிலைவடிவைக் காவிரியில் முறைப்படி ஸ்நானம் செய்வித்து அதைப் பீடத்தில் ஏற்றியபின்பு, இராமாநுஜர் பிரம்ம மந்திரத்தின் வாயிலாக மூச்சைப் பிடித்துக் கொண்டு, தமது சக்திகளை அந்தச் சிலைவடிவில் நிலைநிறுத்தினார். பிறகு சீடர்களிடம் இது என் இரண்டாவது ஆத்மா எனக்கும் இந்த வடிவத்துக்குமிடையே வேறுபாடு எதுவுமில்லை. இந்த நலிந்த திருமேனியை எறிந்து, இந்தப் புதிய திருமேனியில் நான் குடிகொள்ளப் போகிறேன் என்று சொன்னப்பிறகு இராமாநுஜர் எம்பாரின் மடியில் திருமுடியையும்


Isbn Number: 978-93-91115-48-7

வடுகநம்பியின் மடியில் தன் இரண்டு திருவடிகளையும் வைத்துக்கொண்டு, எதிரே வீற்றிருந்த தம் பரமாசாரியான ஆளவந்தாரின் இரண்டு பாதுகைகளையும் தியானித்துக் கொண்டு பரமபதத்துக்கு எழுந்தருளினார்.

**முடிவுரை**

இராமாநுஜருக்குப் பின் ஆச்சாரியராக வந்தவர் கூரத்தாழ்வாரின் மகனாகிய பராசரபட்டர். இராமாநுஜர் தன்னுடைய வடமொழிப் புலமையையும் வேதாந்தக் கடலில் தான் கடைதெடுத்த முத்துக்களையும் ஆழ்வார்களின் பக்திவெள்ளப் பெருக்குடன் இணைந்து விசிஷ்டாத்வைதத்தை அமைத்தார். ஆனால் அடுத்த இருநூற்றாண்டுகளில் வடமொழி நூல்கள் ஆழ்வார்களின் தமிழ் பிரபந்தங்கள் இவையிரண்டில் எது முக்கியத்துவம் வாய்ந்தது என்ற கொள்கையில் வேறுபாடுகள் ஏற்பட்டு வடகலை, தென்கலை என்ற இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. தத்துவத்திலும் சில வேறுபாடுகள் தலைப்பட்டன. ஆனால் இருசாராரும் இராமாநுஜர் என்ற பெயருக்கும் அவருடைய நூல்களுக்கும் உயர்ந்த மதிப்பு தருவதில் ஒருவரையொருவர் மிஞ்சுவர்.

ஒவ்வொரு வைணவக் கோயிலிலும் இராமாநுஜர் கைக்கூப்பிய சிலை ஆண்டவன் சன்னிதியில் இருப்பதை இன்றும் காணலாம். வைணவத்தின் உட்பிரிவுகள் மட்டுமல்ல இந்து சமய உலகத்தின் எந்தப்பிரிவிலும்

 Isbn Number: 978-93-91115-48-7

ஆண்டவனைத் தொழும்போது கடவுள் அனந்த கல்யாண குணங்களைப் பெற்றவன் அடியேன் ஒரு சின்னஞ்சிறு துளியிலும் துளி என்ற அடிப்படை மனப்பான்மை இருத்தல் வேண்டும் என்ற கோட்பாடு இராமாநுஜர் இட்டுச்சென்ற அழியாத முத்திரையே.

**துணைநூற்பட்டியல்**


[1] அருணாசலம்.ப டாக்டர். *வைணவ சமயம்.* முல்லை நிலையம், சென்னை – 600017.

2. கணேசன். ஆ டாக்டர். *வைணவத்திலகம்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிமிட்), சென்னை.

[3] லட்சுமணன்.கி. *இந்திய தத்துவ ஞானம்.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 600014.

[4] ரவிராமநாதன். *ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.* பிரேமா பிரசுரம், சென்னை – 600024.

[5] ஸ்ரீ.பி. ஸ்ரீ ராமாநுஜர். பாரி நிலையம், சென்னை.

[6] சுவாமி ராமகிருஷ்ணானந்தர். *ஸ்ரீ ராமானுஜர் வாழ்க்கை வரலாறு.* ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-04.


 **Isbn Number: 978-93-91115-48-7**

# Historical Records of Vaishnavism and Methods of Worship

**Mrs S. Prema,** Assistant Professor, Department of Tamil,
PSGR Krishnammal College for Women, Coimbatore-641004,
Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3550-2380**
**DOI: 10.5281/zenodo.5712098**

## Abstract

*We consider Lords with great reverence because they have omnipotent powers beyond man. Not only in devotional literature but also in Tamil grammar, Sangam literature and contemporary cults consider the spiritual side of man is important and has many modes of worship and many historical records. It has been focused on in this research chapter. In the system of seeing the Lord in the light of the eye, one can get rid of the different thoughts in the human soul and engage in deep devotion in the record of fire worship and their types, temple worship and their benefits. From time immemorial, in the worship of the Lord, the methods of worship become known in the form of rituals and other forms related to it. It is based on the devotion of the devotees, the glory of Lord Vishnu and the benefits that could be derived from the surrender to him. The basic concepts on the subject and the historical records and*

*rituals of Vaishnavism are explored in the chapter in a multifaceted manner.*

**Keywords:** Tholkappiya Pathivugal, pathitruppahthu pathivugal, Vainava ilakkiyam, Worship.

## References

[1] Dr Kamalakkannan. *Naalaayira Thivya Pirabantham*. Varthamaanan Publication, Chennai - 17, 2001.

[2] Ettaaavathu Ulagaththamizh Maanaadu. *Ariviyal Malar*. Thanjai, 1995.

[3] Ilampooranar Urai. *Tholkaappiyam - Porulathikaarm*. Saaratha Pathippagam, Chennai-14, 2005.

[4] Kookkalai Jeraajan. *Thiruppallaandum Periyaazhvaar Thirumozhiyum.* Magaaraani Veliyeedu, Chennai, 2002.

[5] K. Baalasupramaniyam. *Nalam Tharum Tamizhnaattuth thirukkoovilkal*. Tenninthiya Saiva Sidthaantha Noolpathippuk kazhagam, Chennai -18, 1998.

[6] K.Kailaasanaathar Gurukkal. *Saivaththirukkoovil Kiriyai*. Ngyaapakaarntha Sabai, Yaazhppaanam, 2009.

[7] Prof Dr N. Subburettiyaar. *Vainavamum*

*Tamizhum.* Tenninthiya Saiva Sidthaantha Noolpathippuk kazhagam, Chennai - 18, 1998.

[8] Prof S. Vaiyaaburippillai. *Sanga Ilakkiyam*. Paari Nilaiyam, Chennai - 01, 1940.

[9] R. Araavamuthan. *Sri Raama paktha Anumaan*. Vaanathi Publication, Chennai - 17, 2001,

[10] Thiruvaaimzhiyin Urai. *Sadakoopa Raamaanujathaasan.* Aaraavamuthu Pirasura Nilaiyam, Sri Perumputhur, 1990.

[11] Sathkrantha Prakaasana Sabha. *Nammaazhvaar Thirumozhi.* Prema Publication, Chennai -18, 1949.

[12] Silambu. N. Sevaraasu. *Koovil Panbaadu*, Anichcham Ilakkiya Vattam Veliyeedu, Sabaanaayagam Publication, Puthuchcheri - 605005, 1999.

[13] Tamizhnaattu Paadanool Niruvanam. Tamilnadu Arasu. *Varalaaru - India Nagareegam, Part -2,* Chennai, 1978.

[14] T.R. Kuppusamy. *Srimath Raamaayanam*. RNR Printers, Chennai – 05, 2009.

[15] V. Suntharam. *Vainavaththin Thotramum Valarchiyu.*, Semmalar Publication, Chennai - 15, 2011.

[16] Vidvaan M. Naaraayana Veluppillai. *Srimath Bagavathapuraanam*. Vetri Atchagam, Chennai – 05, 1982.


Isbn Number: 978-93-91115-48-7

# வைணவம் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் வழிபாட்டு முறைகளும்

**திருமதி. சே.பிரேமா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் -641004,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3550-2380**
**DOI: 10.5281/zenodo.5712098**

## ஆய்வுச்சுருக்கம்

மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியினைக் கடவுளாக பார்க்கிறோம். பக்தி இலக்கியம் மட்டுமின்றி இலக்கணம், சங்க இலக்கியம் மற்றும் சமகால வழிபாட்டு முறைகளும் இப்பகுதியில் கருதப்படுகின்றன. இறைவனைக் கண்ணார தரிசிக்கும் நோக்கில், மனித உள்ளத்தில் உள்ள பல்வேறு எண்ணங்களை அகற்றி, தீப வழிபாடு மற்றும் அவற்றின் வகைகள், நேர வழிபாடு மற்றும் அவற்றின் பலன்களைப் பதிவு செய்வதில் ஆழ்ந்த பக்தியில் ஈடுபடலாம். கண்ணில் தென்படும் ஒளியில் இறைவனைக் காணும் அமைப்பில் தீப ஆராதனைகளும் அவற்றின் வகைகளும், கால பூசைகளும் அவற்றின்

 Isbn Number: 978-93-91115-48-7

பலன்களும் எனும் பதிவில் மானுட உள்ளத்து வேறுபட்ட சிந்தனைகள் நீங்கப்பெற்று ஆழ்ந்த பக்தியின் ஈடுபாட்டினைப் பெறமுடியும்.

காலங்காலமாக இறைவனை வழிபடுவதில் பெரியோர்களின் பக்தி, திருத்தலங்களின் மகிமை, அவற்றால் அடையக்கூடிய பலன்கள் பற்றிய செய்திகள் வர்ணனையாகவும், உளவியல் பாங்கிலும் இவ்வாய்வில் பதிவு செய்யப்படுள்ளன. வைணவம் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் வழிபாட்டு முறைகளும் எனும் தலைப்பில் அமைந்த கருத்துக்கள் இப்பகுதியில் மேற்கண்ட பாகுபாடுகளில் ஆராயப்படுகின்றன.

**கலைச்சொற்கள்:** தொல்காப்பியப் பதிவுகள், பதிற்றுப்பத்தின் பதிவுகள், வைணவ இலக்கியம், வைணவ வழிபாட்டுமுறை.

**முன்னுரை**

தென்னிந்திய மக்களால் அதிகம் போற்றப்படுகின்ற இறை சார்ந்த சமயங்களில் சைவமும், வைணவமும் இரு கண்களாக எண்ணப்படுகின்றன. இவ்விரு சமயக்கடவுள் பற்றி சிந்திப்போமேயானால்

எண்ணற்ற செய்திகள் மனப்பதிவில் ஏற்க வேண்டியிருக்கும். வைணவக் கடவுளான திருமால் குறித்து இந்நூலில் கருத்துகள் பல பாடுபொருள்களில் பதிவு செய்யப்பட உள்ளன. வழிபடும் காலநேரங்கள், வழிபாட்டு பொருட்கள், வழிபாட்டு முறைகள் மற்றும் அவற்றிற்கான காரணங்கள், பாடப்படும் பாசுரங்கள், தொல்காப்பிய மற்றும் பதிற்றுப்பத்தின் பதிவுகள், கோவிலின் அமைப்பும் தத்துவங்களும், ஆறுகால பூசை மற்றும் அவற்றின் பயன்களும், தீபாராதனை, தீபங்களின் வகைகளும் அவற்றின் சிறப்புகளும் குறித்து தனித்தனியான பாகுபாடுகளில் இந்நூலின் இப்பகுதியில் ஆராயப்படவுள்ளன.

## இறை

அன்பின் ஐந்திணையில் ஒன்றாகிய காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்து மக்களால் வணங்கக்கூடிய தெய்வம் திருமால். பழந்தமிழரின் முக்கிய நூல்களான வேதம், பகவத்கீதை, மகாபாரதம், இராமாயணம், பாகவதம் போன்ற புராணங்கள் அமையப்பெற்றுள்ளன. அவற்றுள் பிரபந்த நூல்களும் சேர்த்து பார்ப்போமேயானால் மனிதனின் வாழ்வுநெறி

 Isbn Number: 978-93-91115-48-7

குறித்த பதிவுகள் அறிய முடிகின்றன. மனிதனுக்கும் அப்பாற்பட்ட சக்தி இருப்பதென்றால் அவற்றையே இறைவனாகக் காண்கிறோம்.

**நாராயணனே முதற்பொருள்**

**நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்**
**தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான் - யான்**
**அந்தாதி மேலிட் டறிவித்தேன் ஆழ்பொருளை**
**சிந்தாமல் கொண்மின்நீர் தேர்ந்து**

**(திருமழிசையாழ்வார் - 3484)**

எனும் வரிகளில் திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் நாராயணனே முதற்பொருள் என்பதனை முதன்மையிட்டுக் காட்டியுள்ளார்.

**திருமந்திரம்**

'ஓம் நமோ நாராயணாய' என்பது திருமந்திரம். இதிலுள்ள மூன்று பதங்களும் முறையே மூன்று சொற்களை உரைக்கின்றன. அவை சேஷத்துவம், பாரதந்திரியம், கைங்கரியம் என்பனவாகும். அதாவது ஓம் எனும் பிரணவம் சேஷத்துவத்தையும் (பிறருக்கு அடிமையாய் இருத்தல்), நமோ என்பது பாரதந்திரியத்தையும், நாராயணாய என்பது சேதநன் (அடியவர்) இறைவனுக்குச் செய்யவேண்டிய


Isbn Number: 978-93-91115-48-7

கைங்கரியத்தையும் தெரிவிக்கின்றன. (8வது உலகத்தமிழ் மாநாடு நூல் – ப.193)

**தொல்காப்பியத்தின் பதிவுகள்**

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே வைணவ தெய்வமான திருமாலை அனைத்து மக்களாலும் போற்றி வணங்கக்கூடிய தெய்வமாக தொல்காப்பியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். தெய்வக் குழவியாகிய கண்ணனிடம் ஆயமகளிர் வைத்திருந்த காதல் குறித்துத் தொல்காப்பியர் நூற்பாக்களில் எடுத்துரைக்கிறார்.

**காமப் பகுதி கடவுளும் வரையார்**
**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்**
**… குழவி மருங்கினும் கிழவ தாகும்**

**(தொல். பொருள். புறத்திணை - 23, 24)**

தொல்காப்பியத்தில் இவ்வரிகள் அமைந்திருப்பதனை ஆராய்ந்து பார்ப்போமேயானால் கி.மு முதலாகவே வைணவ வழிபாடு மக்களிடத்தில் மேலோங்கி இருப்பதை அறிய முடிகின்றது. அன்பின் ஐந்திணையில் ஒன்றான முல்லை நிலத்து ஆயர்கள் பெருமானை வணங்கினர். காலம் செல்ல செல்ல அனைத்து நிலத்தவர்களும், இனத்தவர்களும் பெருமானைத் தன் பெருதெய்வமாக

 Isbn Number: 978-93-91115-48-7

ஏற்று வணங்கினர் என்றுரைக்கிறார் இந்திரபவாஜி (சங்க இலக்கியங்கள் நூல்களில் கிருட்டிண வழிபாடு, பக். 1–5 )

**நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்**
**மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே**
**தேவு மற்றறியேன் குருகூர் நம்பி**
**பாவின் இன்னிசை பாடித் திரிவனே!**

**(நம்மாழ்வார் - திவ்ய பிரபந்தம்-பாசுரம் – 938)**

இறைவன் மீது கொண்டபக்தி பேரின்பத்தை வழங்கக்கூடியது என்பதை நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்கள் விளக்குகின்றன.

**பதிற்றுபத்தின் பதிவுகள்**

திருமாலின் கோவிலுக்குத் திரளாகச் சென்ற மக்கள் உண்ணா நோன்பு இருந்து துளசிமாலை அணிந்த பெருமானை வழிபட்டும், மணி ஒலித்தும், வணங்கி மனநிறைவுடன் உறங்கச் சென்றனர் எனும் செய்தி,

**குன்று தலைமணந்து குழூஉ கடல் உடுத்த**
**மண் கெழு ஞாலத்து மாந்தர் ஓராங்கு**
**கை சுமந்து அலறும் பூசல் மாதிரத்து**
**நால் வேறு நனம் தலை ஒருங்கு எழுந்து ஒலிப்ப**
**தெள் உயர் வடி மணி ஏறியுநர் கல்லென**
**உண்ணா பைஞ்ஞிலம் பனி துறை மண்ணி**


Isbn Number: 978-93-91115-48-7

**வண்டு ஊது பொலி தார் திரு ஞெமர் அகலத்து**

**கண் பொரு திகிரி கமழ் குரல் துழாஅய்**

**அலங்கல் செல்வன் சேவடி பரவிநெஞ்சு மலி**

**உவகையர் (பதிற்றுப்பத்து- நான்காம் பத்து பாடல் - 1)**

பதிற்றுப்பத்து நான்காம் பத்தின்முதல்பாடலான இவ்வரிகளில் காணமுடிகின்றது.

**புராணங்களும் அவற்றின் சிறப்பும்**

புராணங்களுக்குப் பத்து லட்சணங்கள் சொல்லப்படுகிறன. அவை, சர்க்கம் (நூலின் உட்பிரிவு, படைப்பு, சிருட்டி), விசர்க்கம் (தீமையை அழித்தல்), ஸ்திதி (நிலை, அடித்தபடி), ரட்சணம், மனுவந்தரங்கள், வமிசம், வமிசரித்திரம், சமுஸ்தை, ஏதி(ஆயுதம்), ஆசிரியம் என்பனவாகும். இப்பத்து லட்சணங்களையுடைய புராணங்கள் மகாபுராணங்கள் எனப்படுகின்றன. இப்பத்து லட்சணங்களையுடைய புராணங்கள் பதினெட்டு எனவும் குறிப்பிடப்படுகின்றன.

**பிரமம், பத்மம், வைணவம், சைவம், லிங்கம், கருடம், நாரதீயம், பாகவதம், ஆக்கினேயம், ஸ்கந்தம், லவுஷ்யம், பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், வாமனம், வராகம், மத்சயம், கூர்மம், பிரமாண்டம்**

**(ஸ்ரீமத் பாகவத புராணம் – ப – 182,183)**


Isbn Number: 978-93-91115-48-7

என்று பதினெட்டு புராணங்கள் உள்ளன. ஸ்ரீமத் பாகவத புராணம் இவற்றுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏகாதசி அல்லது துவாதசியில் இந்த புராணத்தைக் கேட்பவர்கள் சிறந்த புண்ணியத்தை அடைவார்கள் மற்றும் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுவார்கள் எனவும் நூலில் கூறப்பட்டுள்ளது.

**ஒளி வடிவத்தில் இறைவன்**

எத்தெய்வமாயினும் ஒளி ரூபமாகக் காண இயலும் எனும் செய்தி நூல்களின் வழி அனைவரும் அறிந்ததே. அவரவர் உள்ளத்திற்கும், குடும்ப வழக்கமுறைக்கும் ஏற்ப மனிதனால் மட்டுமே தெய்வங்கள் மாறுபடுத்தப் படுகின்றன. அவ்வாறாக கண்ணில் முழுமையாகத் தென்படும் இறையான கதிரவனை வணங்கி வழிபடுவோர் பலருண்டு.மூல சக்தியாகவும், பரம்பொருளாகவும் வணங்கிப் போற்றுதலும் உண்டு. அதற்கேற்ப அனைத்து மதங்களிலும், சமயங்களிலும் உதய நேரத்தில் வழிபடுவது இன்றளவிலும் வழக்கிலிருந்து வரும் முறையாகும்.

**சூரிய ஒளியும் பொழுதுகளும்**

பக்தி இலக்கியத்தில் சூரிய உதயத்திலிருந்து


Isbn Number: 978-93-91115-48-7

மறைகின்ற வரையிலும் ஒவ்வொரு நிலையிலும் தனித்தனிக் கடவுளாக எண்ணினர். வைகறைப் பொழுதில் சூரியனை ‘உஷா’ எனப்படும் ஓர் எழிலார்ந்த பெண் கடவுளாக பாவித்து வணங்கினர்.

சூரிய உதயத்திலிருந்து இளஞாயிறாக மாறி, உச்சிப் பொழுதாக உயர்ந்து, மாலைப்பொழுதாக மாறும் வரை, பல பெயர்களால் அழைக்கப்பெற்றான். உலகை உய்விப்பவன் ’பூஷன்’ என்றும், பகல் பொழுதில் வீர நடை போட்டுக் காக்கும் கடவுள் ‘விஷ்ணு’ என்றும், மாலை மகிழ்ச்சியை ஊட்டும் போது ‘சாவித்ரி’ எனவும், அந்திப்பொழுதில் உழைப்பின் களைப்பைப் போக்கும் அருமருந்தாக, காயங்களை ஆற்றும் ஔடதமாக ‘அஸ்வின்’ என்றும் பல பெயர்களால் சூரியன் வணங்கப்பெற்றான். (வரலாறு இந்திய நாகரீகம், லலிதா பப்ளிகேஷன், தொகுதி -2, ப – 119, சென்னை - 34)

**வணங்கும் பொழுதுகள்**

திருமாலை காலைப்பொழுதில் வணங்கினால் வாழ்வின் துன்பமானது நீங்கப்பெறும் எனவும், உச்சிவேளையில் வணங்கினால் தேகத்தின் பிணி நீங்கி வாழ்வு மேலோங்கும் எனவும், மாலையில் வணங்கினால்


Isbn Number: 978-93-91115-48-7

மனிதனது ஏழு பிறவிகள் சார்ந்த தலைமுறைகளுக்கும் தீமைகள் நீங்கி இன்பம் கிட்டும் எனவும் நம்பப்படுகிறது.

**மந்திர ஒலி**

இறை வழிபாட்டில் மந்திரம் சிறப்பிடம் பெறுகிறது. அனைத்து இறைகளும் மந்திர ஒலிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். மனனம் செய்பவனைக் காப்பது எதுவோ அதுவே “மந்திரம்” எனப்படும். பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பதன் வழியும், எண்ணிறைந்த பொருட்களாகவும், உந்து சக்தியாகவும், உயர்ந்த மானுட எண்ணங்களாகவும் தோன்றுகின்ற அனைத்திலும் உன்னத ஒலிகள் நிறைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வண்டின் ரீங்காரத்திலும், மணியின் ஓசையிலும் எனப் பல வழிகளில் உணர இயலும். பக்தி மார்க்கத்தின் புரிதல் திறன் ஒன்றே மூலதனமாக அமைந்திருந்தால் அனைத்தும் அறிய இயலும். (கணபதி, இரா.அம்மா-சென்னை, கலைமகள் காரியாலயம், மு.ப -1975- ப-151)

**முதன்மையான திருத்தலம்**

வைணவத் திருத்தலங்களில் முதன்மையான பெருமைக்குரியது ஸ்ரீரங்கம். கம்பனின் இராமாயணம்

 Isbn Number: 978-93-91115-48-7

அரங்கேற்றம் செய்யப்பட்ட இடம் ஸ்ரீரங்கம் ஆகும். தாயார் சன்னதிக்கு நேர் எதிரில் உள்ள மணிமண்டபத்தில் இராமாயணம் அரங்கேற்றம் செய்யப்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

**கண்ணன் கழலிணை**
**நண்ணும் மனமுடையீர்**
**எண்ணும் திருநாமம்**
**திண்ணம் நாரணமே (நம்மாழ்வார் திருவாய்மொழி,**
**3711, ஸ்ரீமத் பாகவத புராணம், ப. 183)**

இறைவனிடம் பக்தி கொள்வதே மனிதர்களுக்குச் சிறந்த தர்மமாகும். இறையினுடைய நாமத்தையும், அவதார நோக்கங்களையும் பக்தியோடு பாடுவதே கலியுகத்தில் சிறந்த ஆராதனங்களாகக் கூறப்பட்டுள்ளது. தம்முடைய கதையைக் கேட்பவர்களுடைய உள்ளங்கையில் திருமால் இருந்து கொண்டு அவர்கள் மனத்திலுள்ள காமம், கோபம், பேராசை முதலான அழுக்குகளை அகற்றி விடுகிறார்.

**திருக்கோயில் அமைப்பின் தத்துவங்கள்**

கோவிலின் உறுப்புகள் ஆறு. அவை அதிஷ்டானம், சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என்பனவாகும். இவைமுறையே மனித உடலின் அடி,


**Isbn Number: 978-93-91115-48-7**

உடல், தோள், கழுத்து, தலை, முடி என்னும் உறுப்புகளோடு ஒப்பிடப்படுகின்றன.

கோயிலின் கோபுரத்தில் அமைக்கப்படும் விமானம் ஆறு உறுப்புகளைக் கொண்டது. அவை அதிஸ்டானம், பாதம், மஞ்சம், கண்டம், பண்டிகை, ஸ்தூபி எனவும் பெயர் பெறுவனவாகும். கோவிலின் நேர் கீழாக எழுந்தருளியிருக்கும் இறைவனின் அமைப்பு சரீரப் பிரஸ்தாரம் என்றும், இருதயப் பிரஸ்தாரம் என்றும் இருவகைப்படும்.

கோயிலில் அநேக இடங்கள் மண்டபங்கள் எனக் குறிக்கப்படுகின்றன. அவை அர்த்தமண்டபம், தம்ப மண்டபம், கர்ப்பக்கிரகம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், நிருத்த மண்டபம் என்ற ஆறும் மனித உடலின் உறுப்பை ஒத்திருக்கும். அவை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை எனும் ஆறு ஆதாரங்களைக் குறிப்பிடுகின்றன. (சிலம்பு நா. செல்வராசு-கோயில் பண்பாடு, ப – 61)

**ஆறுகாலபூசை**

ஆறுகால நித்திய பூசை என்பது சைவ மற்றும் வைணவ திருத்தலங்களில் ஆகம முறைப்படி


Isbn Number: 978-93-91115-48-7

நடைபெறுகின்றன. அதன் வகையில் வைணவத் திருத்தலங்களில் நடைபெற்று வரும் பூசை வகைகளும் அதன் தனிச்சிறப்புகளும் எடுத்து ஆராயப்படுகின்றன. நித்திய பூசை என்பது நாள்தோறும் திருஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானின் திருவடிகளைப் போற்றிப் பாடுவதற்குண்டான வழிபாட்டு முறையாகும். அவற்றுள் இன்னின்ன காலப்பொழுதுகளில் இந்த வகையான கால பூசைகள் நடைபெறும் என்று வரையறுக்கப்பட்ட வகையில் ஆராதனைகள் பிரிவு படுத்தப்படுகின்றன.

அவ்வாறாக பிரசித்தி பெற்ற ஆலயங்களில் தினமும் ஆறு காலத்தின் அடிப்படையிலும் இதர ஆலயங்களில் நான்கு, மூன்று, இரண்டு என்று கால அடிப்படையிலும் பூசைகள் பின்பற்றப்படுகின்றன. முக்கிய நாட்களில் மட்டும் இதர கோவில்களில் ஆறு கால பூசைகள் நடத்தப்படுகின்றன. அதாவது புரட்டாசி, மார்கழி மாதங்களில் சிறப்பாகவும் மற்ற மாதங்களில் கால பூசைகள் மாற்றத்துடனும் நிகழ்த்தப்படுகின்றன. இம்முறையானது இந்து சமயத்தின் அறநிலையத்


Isbn Number: 978-93-91115-48-7

துறையின் சார்பில் நித்ய ஆராதனை கட்டளையின் வழி கடைபிடிக்கப்படுகிறது.

**பெரியாழ்வார் திருப்பல்லாண்டு**

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன்**
**சேவடி செவ்வித் திருக்காப்பு!**

**(திருப்பல்லாண்டு – காப்பு, பா. 1)**

கால எல்லையைக் கடந்து அகண்ட பிரம்மமாக நின்றிருக்கும் பெருமானுக்குத் திருக்காப்பு இடுதல், போற்றி! போற்றி! போற்றி! எனும் திரு நாமம் இன்றும் என்றும் நிகழ்ந்து கொண்டே இருப்பது எனும் அடிப்படையில் உன் சேவடி செவ்வித் திருக்காப்பு எனும் சொற்களை எடுத்துப்பாடியுள்ளார் பெரியாழ்வார்.

நித்தியமான பெருமானுக்கு நித்யகால பூசையானது சிவந்த பாத கமலங்களுக்குச் சமர்ப்பணம் செய்வதே ஆகும். பல ஆண்டுகள், பல ஆயிரம் ஆண்டுகள், பல கோடி நூறாயிரம் ஆண்டுகள் தொடர்வதாக அமையப்பெறும் கூற்றானது கால எல்லை கடந்தும் இறைவனின் திருநாமம் ஓதப்பெறும் என்பதன் சுருக்கமாகும். உலகில் தீமைகளின் சக்தி ஓங்கும் போது


Isbn Number: 978-93-91115-48-7

அவற்றினை அழித்து உலகினைக் காக்கும் பொருட்டு பெருமாள் விஷ்ணு அவதாரம் எடுத்துக் காப்பார் என்பது வைணவ இலக்கியத்தின் முழுமையான நம்பிக்கை.

ஒவ்வொரு அவதாரங்களும் பல கோடி ஆண்டுகள் நடைபெறுவதாக புராண நூல்கள் எடுத்தியம்புகின்றன. எடுத்த அவதாரங்கள் முறையே, மச்சம் (மீன்), கூர்மம் (பன்றி), வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி எனும் அடிப்படையில் பத்து அவதாரங்கள் என்பது அனைவரும் அறிந்ததே. இன்றைய அளவில் பத்தாவதான கல்கி அவதாரம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக வைணவம் சார்ந்த நூல்களும் உபநிடதங்களும் எடுத்துரைக்கின்றன. **மாயோன் மேய காடு உறை உலகம்** (தொல். பொருள் – 5) என்ற வரிகளில் இவ்வுலகத்தின் இயங்கும் தெய்வமாக விளங்கும் திருமாலைப் பற்றி தொல்காப்பியர் தன் நூற்பாக்களில் எடுத்துரைக்கின்றார்.

**பாசுரங்களின் அமைவுகள்**

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருத்தலங்கள் நூற்றெட்டில் பெருமாளின் நீலமேனி, கைகளில் ஏந்திய சங்கு சக்கரம், கருட வாகனம், துளவ

 Isbn Number: 978-93-91115-48-7

மாலை அணிந்த திருஉருவம், திருமகளின் அமைவிடம், வரம் தரும் வல்லமை, திரு அவதாரச் சிறப்பு எனப் பலவாறான நோக்கில் பாசுரங்கள் அமையப் பெற்றுள்ளன. திருத்தலங்களில் பாடிய பன்னிரு ஆழ்வார்களில் திருமங்கை ஆழ்வார் அநேக கோவில்களில் மங்களாசாசனம் செய்த பெருமைக்குரியவர்.

**பாடப்பட்ட இடங்கள்**

பன்னிரு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட நூற்றெட்டு திருத்தலங்களில் தமிழகத்தில் மட்டும் என்பத்து நான்கு ஆலயங்களும், கேரளத்தில் பதினொன்றும், ஆந்திராவில் இரண்டும், உத்தரபிரதேசத்தில் நான்கும், உத்திர காண்டத்தில் மூன்றும், குஜராத்தில் ஒன்றும், நேபாளத்தில் ஒன்றும் என இவை மட்டுமல்லாது மண்ணுலகம் கடந்து வானுலகிலும் இரண்டு திருத்தலங்கள் (திருப்பாற்கடல், பரமபதம்) அமைந்திருப்பதாக வைணவ இலக்கிய நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆழ்வார்கள் தம் வாழ்நாளில் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு என நீண்ட பரப்பினைக்

 Isbn Number: 978-93-91115-48-7

கடந்து இத்தகைய திருத்தலங்களுக்குச் சென்று பாசுரங்கள் இயற்றியுள்ளமை போற்றுதற்குரியதாகும்.

**கோசலையின் மங்களாசாசனம்**

வைணவத்துக்கு மட்டுமே சிறப்பான மற்றும் வேறுபட்டதான ஒரு வழிபாட்டுமுறை மங்களாசாசனம் என்பதாம். அனைத்து மங்கள குணமுடைய இறைவன் யாவரையும் காப்பவன். அவனிடமிருந்து மங்களம் பெறுவதே மனிதப்பிறவியின் நோக்கமாகும்.

பெருமாளை வேண்டி ஆழ்வார்கள் மங்களாசாசனம் பாடியிருப்பது போலவே, வேள்வியின் பயனால் கிடைத்த குழந்தை, பெருமாளின் அவதாரம் என்பதறியாத கோசலையும் தன் மகன் இராமனைக் காக்கும் பொருட்டு பெருமாளிடத்து மங்களாசாசனம் பாடி இராமனை ஆசிர்வதிக்கிறாள். **சகார மாதா ராமஸ்ய மங்களாநி மனஸ்விநி** (ஸ்ரீமத் ராமாயணம் – ப – 204,205) எத்தகு தர்மத்தை உறுதியுடனும், நிச்சயமாகவும் நீ காத்து வருகிறாயோ அத்தகு தர்மம் உன்னைக் காப்பாற்றட்டும். அம்ருத கலசத்தைக் கொண்டுவந்து கொடுத்த கருடனுக்கு வினதாதேவி எந்த மங்களங்களை அளித்தாளோ, அந்த மங்களங்கள் உனக்காகட்டும். மூன்றடியில் உலகளந்த


Isbn Number: 978-93-91115-48-7

பராக்ரம சாலியான விஷ்ணுவிற்கு வழங்கிய மங்களங்கள் உனக்காகுக என்று பெருமாளைப்பாடி ஆசிர்வதிக்கிறாள் கோசலை.

**வழிபாடு**

வைணவ அடியவர்களின் திவ்யப்பிரபந்த சேவையின்றி திருமால் திருக்கோவில்களில் வழிபாடு இல்லை. ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழி மாத மதி நிறைந்த பௌர்ணமி நன்னாளில் ஏகாதசிக்கு முன்பும் பின்பும் வைணவ கோவில்களில் **அத்யயன உற்சவம்** எனும் விழா நடைபெறுகிறது. இத்தகு உற்சவமானது பிரபந்த பாசுரங்களை வைணவ அடியவர்கள் அபிநயம் பிடித்துக்கொண்டும், தாளமிசைத்தும் நாடகமாக நடித்துக்காட்டி விழாவினை நடத்துவர். ஆழ்வார்களின் சார்பாளர்களாக விளங்கும் அரையர்கள் தம் நெஞ்சமுருக இந்நிகழ்வினை நடத்துவர்.

இன்றளவில் திருவரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார்திருநகரி எனும் பிரசித்தி பெற்ற திருக்கோவில்களில் இத்திருவிழா சிறப்புடன் நடைபெறுகிறது. இத்திருநாளானது பொதுவாக மார்கழி மாதம் வளர்பிறையின் முதல் நாளான பிரதமையில்


Isbn Number: 978-93-91115-48-7

தொடங்கும். ஆயினும் திருவரங்கத்தில் பிரதமையின் முந்தைய நாளான அமாவாசையின் இரவில் நெடுந்தாண்டகச் சேவையுடன் ஆரம்பமாகிறது.

**வைணவப் பெருவிழா**

திருமொழித் திருநாள் (ஏகாதசிக்கு முன்பு பத்து நாட்கள் வழிபடுவது) திருவாய்மொழி திருநாள் (ஏகாதசிக்கு பின்பு பத்து நாட்கள் வழிபடுவது) என்று இரு விழாவாக வகைப்படுத்தி, அவை முறையே பகல்பத்து, இராப்பத்து எனவும் வழங்குவர். ஆழ்வார்கள் பாடிய நாலாயிரம் பாசுரங்களில் முதல் ஈராயிரம் பாசுரங்கள் பகல் பொழுதிலும், திருவாய்மொழி ஆயிரத்தை இரவுப் பொழுதிலும் பாடுவர். இப்பகுதிகளை பகல்பத்து, இராப்பத்து எனவும் வழங்குவர். மீதமுள்ள ஆயிரம் இயற்பாவான ஆயிரம் பாசுரங்களை இருபத்தோறாம் நாள் பாடி முடிப்பர்.

**பெண் சக்தி**

ஏகாதசிக்கு முன்பு பத்து நாட்கள், பின்பு பத்து நாட்கள் எடுக்கக்கூடிய விழாவானது ஆண்டுதோறும் நிகழ்த்தப்படுவதற்குக் காரணமும் அவை சார்ந்த கருத்துகளும் பின்வருமாறு, ஒரு வருடத்தில் இருபத்து


Isbn Number: 978-93-91115-48-7

நான்கு முதல் இருபத்து ஐந்து எனும் எண்ணிக்கையில் ஏகாதசிகள் ஏற்படுகின்றன. இவற்றுள் ஒன்றான மார்கழி மாதத்தில் வரக்கூடிய ஏகாதசிக்கு மட்டும் பெருமை அதிகம். வைகுந்த பதவி கிட்டும் ஏகாதசியாகவும் குறிக்கப்படுகிறது.

முரன் என்ற அசுரன் செய்து வந்த அநீதிகளை மாய்க்க, பெருமாளின் உடலிலிருந்து மார்கழி மாத வளர்பிறையில் உருவெடுத்த பெண் சக்தியே ஏகாதசி என்று வழங்கப்பட்டவள். அத்தகு பெண் சக்தியாகியத் தம்மை வணங்குபவருக்கு சொர்க்கவாசல் திறக்கப்பட வேண்டும் என்று திருமாலிடத்து வேண்டிக் கொண்டவள்.

மறுபிறவியிலாது இறைவனடி சேர்க்கும் இவ்விழா இக்காரணத்தினாலேயே சிறப்புடன் நிகழ்த்தப்படுகிறது என்பதை இச்செய்தியின்வழி அறியமுடிகிறது.

**பிரபந்தத்தில் ஆழ்வார்களும் பாசுர எண்ணிக்கைகளும்**

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் பன்னிரு ஆழ்வார்கள் முறையே, 1.பொய்கையாழ்வார் நூறு பாசுரங்கள், 2. பூதத்தாழ்வார் நூறு பாசுரங்கள், 3.பேயாழ்வார் நூறு பாசுரங்கள், 4. திருமழிசையாழ்வார்


Isbn Number: 978-93-91115-48-7

இருநூற்று பதினாறு பாசுரங்கள், 5.மதுரகவி ஆழ்வார் பதினொரு பாசுரங்கள், 6.நம்மாழ்வார் ஆயிரத்து இரு நூற்று தொண்ணூற்றாறு பாசுரங்கள், 7.குலசேகர ஆழ்வார் நூற்றைந்து, 8.பெரியாழ்வார் நானூற்று எழுபத்து மூன்று பாசுரங்கள், 9.ஆண்டாள் நூற்றெழுபத்து மூன்று பாசுரங்கள், 10.தொண்டரடிப்பொடி ஆழ்வார் ஐம்பத்தைந்து பாசுரங்கள், 11.திருப்பாணாழ்வார் பத்து பாசுரங்கள்,12.திருமங்கையாழ்வார் ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்று என நான்காயிரம் பாசுரங்கள் பிரபந்தங்களில் வகை படுத்தப் பட்டுள்ளன. (100+100+100+216+11+1296+105+473+173+55+10+1361 = 4000)

**திருமொழித்திருநாள்**

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூராயிரம் (திருப்பல்லாண்டு பாசுரம்-1, ப. 6)**

எனத் துவங்கும் திருக்காப்புதனைப்பாடி பகல் பத்தின் முதலாவது நாள் திருமொழியில் துவங்குவர். உலகத்தைக் காக்கும் எம்பிரானைப் போற்றிப் பாடும் பேறு பெற்றவர்களில் பெரியாழ்வார் சிறப்புமிக்கவர். இறைவனுக்கே கண்ணேறு கழித்த புண்ணியம் பெற்றவர். அச்சிறந்தோரின் பாசுரங்கள் முதலாகத் தொடங்கி


Isbn Number: 978-93-91115-48-7

இரண்டாம் பத்து ஒன்பதாம் திருமொழியின் முதல் பாசுரமான,

**வெண்ணெய் விழுங்கி வெறுங்ககலத்தை**

**வேற்பிடை யிட்டு அதனோசை கேட்கும்**

**கண்ணபிரான் கற்றகல்விதன்னைக் காக்கில்லோ**

**முன்மகனைக் காவாய்**

**புண்ணிற் புளிப்பெய்தா லொக்குந்தீமை**

**புரைபுரை யாலிவை செய்யவல்ல**

**அண்ணற் கண்ணனோர் மகனைப் பெற்ற**

**அசோதை நங்காயுன் மகனைக் கூவாய்**

**(ஒன்பதாம் திருமொழி பாசுரம் 1- ப. 332)**

எனும் திருமொழிகள் வரை கண்ணனின் சிறப்புகளான, வெண்ணையை அள்ளி விழுங்கிவிட்டு ஒன்றுமில்லாத பாத்திரத்தைக் கல்லின் மேல் போட்டு உடைத்து அப்பாத்திரம் உடையும் ஓசை கேட்டு மகிழும் குறும்பு உள்ளம் கொண்டவன், அவன் கற்ற கல்வியே இதுவானால் அதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க இயலாது ஆதலால், உன்மகனை அழைத்துக்கொள் என்று உள்ளார்ந்த அன்பும் காதலும் ததும்ப ஆயர் பெண்கள் யசோதையிடம் முறையிடும் காட்சிகளைக்


**Isbn Number: 978-93-91115-48-7**

கொண்டு முதல்நாள் திருமொழியினை இரு நூற்று பன்னிரண்டு பாசுரங்கள் வரை பாடி நிறைவு செய்வர்.

இதேபோன்று, ஒவ்வொரு நாட்களும் ஆழ்வாரின் பாசுரங்கள் பண்ணொடும், அபிநயத்தொடும் வியாக்கியானம் செய்து முடிப்பர். இறுதியாக திருமங்கையாழ்வார் அருளிச்செய்த, **'மின்னுமா மழை தவழும் மேக வண்ணா'** எனும் பாசுரத்தில் பெருமாளின் திருவிளையாடல், புராணச்செய்திகள், ஆழ்வார்களின் பக்தி மார்க்கம், எம்பெருமானை அடையும் வழி ஆகியனவற்றை எடுத்துரைக்கும் முதற்பகுதியான திருமொழித்திருவிழா நிறைவுபெறும்.

**திருவாய்மொழித்திருநாள்**

பெருமாள் ஏகாதசி நாளில் அதிகாலையில் கருவறையிலிந்து பரமபத வாசல் வழியாக திருமாமணி மண்டபத்தை நோக்கி அருள் வழங்குவார். ஆழ்வார்களின் சார்பில் கிழக்குமுக கோபுரவாசலின் எதிரில் உள்ள மண்டபத்தில் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், இராமாநுசர் ஆகிய மூவரும் அமர்ந்திருப்பதான படங்கள் இடுவர். அவ்வமயம் திருவாய்மொழிப் பாசுரமான,

**உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்**


Isbn Number: 978-93-91115-48-7

**மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்**

**அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்**

**துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே**

**(நம்மாழ்வார் – திருவாய்மொழி பாசுரம், 2635,**

**இரண்டாம் பத்து, பா. 1)**

எனத் தொடங்கி, இறையோன் நல்லவன், நல்லறிவைப் புகட்டுபவன், அமரர்க்கும் தலைவன், துயரை அறுக்கும் சுடர், அத்தகையோனை உள்ளத்தால் வழிபடுகிறேன் எனப் பெருமானைச் சரணமடையும் தத்துவத்தை வெளிப்படுத்தும் நம்மாழ்வாரின் பாசுரம் பாடப்படும். இதேபோன்று தொடர்ந்து பத்து நாட்களும் அரையர்கள் ஆழ்வார்களின் பாசுரத்தை இசைத்தபடி, பத்தாம்பத்தில் முதல் எட்டு பாசுரங்களையும் இசைத்து அரையர்கள் ஆழ்வாரைத் தம்கைதலத்தில் ஏந்தி 'சூல் விசும்பு பனிமுகில்' எனும் திருமங்கையாழ்வாரின் பாசுரம் இசைத்தவாறே பெருமாளிடம் கொண்டு சேர்ப்பர்.

இவ்வாறாக, பெரியாழ்வார் பாசுரம் தொடங்கித் திருமங்கையாழ்வார் பாசுரம் வரை மொத்தம் இருபது நாட்களிலும் பன்னிரு ஆழ்வார்களின் நாமங்கள் திருவாலயத்தில் பாடப்பட்டுக் கொண்டேயிருக்கும். பிறகு இறுதிநாளில் பெருமானை பிரம்மரதம் ஏற்றிக்கொண்டு


Isbn Number: 978-93-91115-48-7

இறைவனின் திருமாளிகைக்குச் சேர்ப்பர். மீண்டும் கருவறைக்குச் சென்று எழுந்தருளுமாறுச் செய்வர்.

அன்றிரவில் கோவில் மண்டபத்தில் திவ்ய பிரபந்தத்தின் இறுதி ஆயிரம் பாசுரங்களான இயற் பாவையும், ராமானுஜர் நூற்றந்தாதியும் இயல், இசை, நாடக அமைப்பில் எடுத்துக்காட்டி இவ்விலக்கிய பெருவிழாவினை இனிதே நிறைவேற்றுவர்.

**காலபூசை நேரங்கள்**

திருமாலை வணங்கும் முறைகளில் காலபூசை நேரங்கள் வகுக்கப்பட்டு வழிபடப்படுகின்றன. அவைகள் முறையே,

- **விஸ்வரூப தரிசனம் அல்லது உஷக்கால பூசை**
- **திதிய கால பூசை அல்லது காலசந்தி பூசை**
- **உச்சிகால பூசை**
- **சாயங்கால பூசை அல்லது சாயரட்சை பூசை**
- **இரண்டாங்கால பூசை**
- **அர்த்தசாம பூசை அல்லது பள்ளியறை பூசை**

என்பனவாகும்.

**கால பூசைகளும் அவற்றின் பலன்களும்**

ஆறுகால பூசைகள் நடைபெறும் நேரங்களை

 Isbn Number: 978-93-91115-48-7

ஷட்கால ஆராதனம் என்பார்கள். பக்தர்கள் இக்கால பூசைகளில் வழிபடும் நேரம் அறிந்தும் அவற்றின் பலன் அறிந்தும் அதற்கான ஆயத்த வழிபாடுகளில் ஈடுபடுவர்.

**விஸ்வரூப தரிசனம்**

முதலாம் கால பூசையான விஸ்வரூப தரிசனம் அல்லது உஷக்கால பூசையின் நேரமானது மூன்றே முக்கால் மணி முதல் ஆறு மணி அளவிற்குள் திரு ஆலயங்களில் ஆராதிக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கத்தில் விஸ்வரூப தரிசனத்தின் போது யானை, வெள்ளை நிற குதிரை, பசு முதலானவற்றை ஆலயத்தினுள் அழைத்து வந்து சேவிக்கத் தொடங்குவதுடன், யானையின் மீது கொண்டு வரப்பட்ட நீரானது பெருமாளுக்கு வார்க்கப்பட்டு வணங்கப் படுகிறது. தாள வாத்தியங்களுடன் நாதஸ்வர இசையும் சேர்த்து ஆராதனை நிகழ்த்தப்படுகிறது. உடல் நோய் தீரவும், வீடு வாங்கவும், புதிய தொழில் தொடங்குவதற்கும் இப்பூசை நேரமானது தனித்துவ நன்மையினை வழங்கக்கூடியதாகக் கருதப்படுகிறது.

**காலசந்தி பூசை**

இரண்டாம் கால பூசையான த்விதிய, திதிய

 Isbn Number: 978-93-91115-48-7

அல்லது காலசந்தி பூசையானது, காலை ஆறு மணி முதல் சூரிய உதயத்திற்குப் பின் பத்து மணியளவிற்குள் ஆராதிக்கப்படுகிறது. சூரிய, சந்திர, நட்சத்திர கூட்டங்களின் சக்தி ஓங்கியிருக்கும் இந்நேரங்களில், பெருமாளுக்கு அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை, வேத பாராயணங்கள், பிரபந்தங்கள் முழங்க மகாதீபம் ஏற்றி ஆராதிக்கப்படும். உள்ளத்து வருத்தங்கள் நீங்குவதற்கு வணங்க வேண்டிய கால பூசை எனவும் கூறப்படுகிறது.

**உச்சிகால பூசை**

மூன்றாம் கால பூசையான உச்சிகால பூசையானது நண்பகல் பன்னிரண்டு மணியளவில் நிகழ்த்தப்படும் பூசையாகும். சூரியனின் கதிர்கள் ஓங்கி இருக்கும் இவ்வேளையில் பெருமானின் அதீத சக்தி அத்திருத்தலங்களில் மேலோங்கியிருக்கும் என்று கூறப்படுகிறது. செய்ய வேண்டிய காரியங்களின் தடை நீங்கவும், வறுமை நீங்கி வளம் பெறவும் இக்கால பூசையானது சிறந்தது எனவும் கருதப்படுகிறது. துளசி மாலை அணிவித்து ஒரு முகம் முதல் பஞ்சமுகம் வரையிலான தீப ஆராதனைகளும், நைவேத்திய

 Isbn Number: 978-93-91115-48-7





ஆராதனைகளும் செய்விக்கப்படும். பின்னர் திரு ஆலயத்தின் கதவானது சாற்றப்படுகிறது.

**சாயங்கால பூசை**

நான்காம் கால பூசையான சாயங்கால மற்றும் சாயரட்சை பூசை என வழங்கப்பெறும் பூசையானது சூரியமறைவு நேரமான நான்கு முப்பது மணி முதல் ஐந்து மணி முப்பது நிமிடத்திற்குள் நிகழ்த்தப்படுவதாகும். பெருமாளுக்குப் பலவகை திரவியங்களால் அபிடேகம் நிகழ்த்தியும், ஆபரணங்களில் அபிடேகம் நிகழ்த்தியும், பக்தர்கள் கொண்டு வந்த அர்ச்சனை மலர்களுடன் தூபங்கள் கொண்டு ஆராதித்தும் வழிபடுவர். குழந்தை வரம் பெறுவதற்கான கால பூசையாக வழங்கப்படுகிறது.

**இரண்டாங்கால பூசை**

சூரிய மறைவிற்குப்பின் நிகழ்த்தப்படும் ஐந்தாம் கால பூசையானது இரவின் துவக்கத்திலிருந்து இரவு எட்டு மணிக்கு நிகழ்த்தப்படுவது. பூமாலைகளுடன் ஐந்து விதங்களில் ஆபரணங்கள் அணிவித்து அலங்காரப் படுத்துவர். பின்னர் மகாலட்சுமி, ஆண்டாள் சன்னதிக்கு தூப, தீபங்கள் காட்டப்படும். மக்களின் வாழ்க்கையில்


**Isbn Number: 978-93-91115-48-7**

செல்வச்செழிப்பும், வியாபார அனுகூலமும் அடைவதற்கு இக்கால பூசை சிறப்பானது என கூறப்படுகிறது.

**அர்த்த ஜாம பூசை**

ஆறாம் கால பூசை எனும் அர்த்தசாம பூசை அல்லது பள்ளியறை பூசையானது இரவு ஒன்பது மணியளவில் நிகழ்த்தப்படுகிறது. வாசனைத் திரவியங்கள் கொண்டு அபிடேகம் செய்வர். பள்ளியறையில் எழுந்தருளும் இறைவனை ஊஞ்சலில் வைத்து, தீபங்கள் காட்டி, நிவேதனம் படைத்து, மிக்க அலங்காரம் கொண்ட பள்ளியறையில் தேவியர்களை எழுந்தருளச் செய்து, வெற்றிலை, பாக்கு, ஏலம், இலவங்கம், பழங்களுடன் தட்டினைத் தயார்செய்து வைத்து, திரையிட்டுப் பின்னர் திருக்கதவினைத் தாழிடுவர். இக்கால பூசையின் ஆராத்தியினைப் பக்தர்களுக்கு சேவிக்க அனுமதி வழங்கப்படுவதில்லை. இக்கால பூசையானது குடும்ப ஒற்றுமையினை மேம்படுத்தும் காலபூசையாகக் கூறப்படுகிறது.

**தீபாராதனை**

இறையைப் போற்றும் வகைமையில் தீப ஆராதனை என்பது முக்கிய இடம் பெறுகிறது. தீபம்


Isbn Number: 978-93-91115-48-7

ஏற்றுதல் என்பது வழிபாட்டின் துவக்கத்தினை உணர்த்துவதாகும். தீப ஒளியில் இறை அமர்வது வழக்கம் என்பது காலங்காலமாக பக்தி இலக்கியத்தில் கூறப்பட்டவையே.

**அலங்கார தீபத்தின் வகைகள்**

**ஒரு முக தீபம் (அ) ஒற்றைத் தீபம் (அ) ஏக தீபம், அடுக்கு தீபம், பஞ்சமுக தீபம், பஞ்சராத்ரிகை தீபம், கும்ப தீபம்** என அதிகப்படியான கோவில்களில் இத்தீபங்கள் ஏற்றப்படுகின்றன. இவை மட்டுமல்லது **பதினாறு** வகைகளிலும் தீபங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அவை முறையே,

| | |
|---|---|
| தூபம் | ஓல தீபம் |
| மஹாதீபம் | கமடதி(அ)கமபதி தீபம் |
| அலங்காரம் | கனு (அ) கஜ தீபம் |
| நாக தீபம் | வியாண்யர(அ)வியாக்ர தீபம் |
| விருட்சப (அ) விருஷ தீபம் | இம்ம (அ) சிம்ஹ தீபம் |
| புருஷா மிருக தீபம் | துவஜ தீபம் |


Isbn Number: 978-93-91115-48-7

| | |
|---|---|
| மயூர தீபம் | நட்சத்திர தீபம் |
| ஐந்தட்டு (அ)<br>பூரண தீபம் | மேரு தீபம் |

என்று பலவாறான தீபங்கள் ஆராதனைகளில் பயன்படுத்தப்படுகின்றன. தீபத்திற்கு உண்டான விளக்குகள் பித்தளை அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்டதாகக் கொண்டு பயன்படுத்தப்படுகின்றன.

**தீபங்கள்**

பொதுவாக தீபங்களுக்கென முகங்களும், திசைகளும் கிடையாது. ஏற்றப்பட்ட இடத்தில் மேல்நோக்கி எறியக்கூடியது. ஏற்றப்படக்கூடிய விளக்கின் அமைப்பைக் கொண்டே எண்ணிக்கையும், திசைகளும் கணக்கிடப்படுகின்றன.

**ஒரு முக தீபம்**

ஒரு முக தீபம் என்பது அனைத்து ஆலயங்களிலும் பொதுவாக காண்பிக்கக்கூடிய தீப காட்சியாகும். ஒருமுக தீப ஒளியில் சரசுவதியும், சுவாகா தேவியும் இருப்பதாகக் கருதப்படுகிறது. எண்ணித்தொழும் அடியவர்களுக்கு மத்திமப்பலனை அருளக்கூடியதாகவும் கூறப்படுகிறது.


**Isbn Number: 978-93-91115-48-7**

## அடுக்கு தீபம்

கோவில்களில் உற்சவ காலங்களில் இந்த விசேட விளக்கு ஏற்றப்படுவது உண்டு. இவ்விளக்கானாது மூன்று, ஐந்து, ஏழு என்கிற ஒற்றைப் படை எண்ணிக்கையில் சுற்றிலும் தீப முறையில் அமையப்பெற்று மேல்பகுதியில் ஒற்றை விளக்குடன் அமையப்பெற்றிருக்கும். அடியவர்களின் வாழ்வானது படிப்படியாக நன்மை, தீமை அறிந்து முன்னேற்றத்தை வழங்கக்கூடியதாக போற்றப்படுகிறது.

## பஞ்சமுக தீபம்

ஒரு முக விளக்கில் நினைத்த செயல் கை கூடியும், இரண்டு முக தீபத்தில் குடும்ப ஒற்றுமை மற்றும் தனம் சேர்தலும், மூன்று முகத்தில் காரிய சித்தியும், தைரியமும், புத்திரதோஷம் நீங்கியும், நான்கு முகத்தில் நிலம், வீடு, வாகனம், கால்நடை போன்றனவற்றை வாங்குவதற்கும், வியாபாரத்தில் செல்வ சௌபாக்கியம் சேர்வதற்கும், ஐந்து முகத்தில் அஷ்ட ஐஸ்வரியங்களையும், சர்வ சக்தியும், குறைவில்லாத பெருவாழ்வும், சகல நன்மையும் உண்டாகும் எனத் தனித்தனியான பாங்கில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. பஞ்சமுகத்தில் இவை அனைத்தும்


Isbn Number: 978-93-91115-48-7

சேர்ந்த்ததான பலன்கள் கிடைக்கப் பெறுவதாக உணர்த்தப்பட்டுள்ளன.

**பஞ்சராத்ரிகை தீபம்**

பிரம்மன் நடத்திய யாகத்தை அசுரன் அழித்து உலகை இருளாக்கினான். அவ்வமயம் திருமால் அகண்ட தீப ஒளியாக உருவெடுத்து அசுரனை மாய்த்து உலக இருளை நீக்கியதாகக் கூறப்படுகிறது. உலக இருள் (தீமை, பிணி) நீங்கும் பொருட்டு கார்த்திகைத் திங்களில் ஏற்றப்படும் தீபம் பஞ்சராத்திர தீபம் என அழைக்கப்படுகிறது.

**கும்ப தீபம்**

அனைத்து தெய்வங்களின் சக்தியும் ஒன்றிணைந்த காட்சியாக கும்ப தீபம் சுட்டப்பெருகிறது. தீப ஆராதனையில் இத்தீபத்தின் காட்சியே இறுதியானதாகக் காட்டப்படுகிறது. பிரளய காலத்தில் உலகம் அனைத்தும் இறைவனுக்குள்ளே அடங்கும் என்பதனை விளக்கும் வடிவமாக இத்தீபம் ஏற்றப்படுகிறது.

**பதினாறு வகை ஆராதனம்**

பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஆறு கால பூசைகள் தவறாமல் நிகழ்த்தபடுகின்றன.


Isbn Number: 978-93-91115-48-7

'ஷோடசோபசாரம்' எனப்படும் பதினாறு வகை உபசாரங்களால் பெருமாள் வழிபடப்படுகிறார். தியானம், ஆவாகனம், பாத்யம், அரக்யம், ஆசமன்யம், மதுபக்தம், ஸ்நபனம், வஸ்திரம், கந்தம், அக்ஷதம், புஷ்பம், புஷ்பந்யாஸ பீடார்ச்சனம், தூப தீபம், நீராஞ்சனம், நைவேத்தியம், முகவாஸம் என்பவைகளாகும்.

**தீப ஆராதனம் காண்பிக்கப்படும் முறை**

மேற்கண்ட ஆராதனங்களில் பெருமாள் உள்ளம் குளிர்ந்து, சாந்த குணமுடையவராகவும், வேண்டிய வரத்தை அருள்பவராகவும் விளங்குகிறார். உலக நலனை முன்னிட்டு தீபத்தை ஏற்றி இலட்சுமியை ஆவர்த்தனம் செய்து, முதலாவதாக பெருமாளின் பாதகமலத்திலிருந்து திருமுடிவரை கொண்டு சென்று பின்பு மீண்டும் பாதத்தில் கொண்டுவந்து முடிப்பர். பெருமாள் எழுந்தருளியிருக்கும் சுற்றுப்புற இடத்தின் நலனுக்காக இரண்டாவது முறை பாதகமலத்திலிருந்து நெற்றி வரை கொண்டு சென்று மீண்டும் பாதத்தில் கொண்டு முடிக்கப்படுவது. தெய்வங்களுக்குச் செய்யப்படும் தீபாரதனையில் முக்கிய தத்துவங்கள் அடங்கி உள்ளன.


Isbn Number: 978-93-91115-48-7

## முடிவுரை

‘ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி’ என்னும் ஆண்டாள் நாச்சியாரின் பாடல்வரிகளுக்கு ஏற்ப, திருமாலின் நாமங்களும், சிறப்புகளும் உரைப்போமேயானால் இறைவனின் திருவுருவத்திற்கேற்ப அகண்டு கொண்டேயிருக்கும்.

சமயங்கள், இறை சக்தியின் ஆக்கத்தன்மை, திருமந்திரத்தின் சிறப்புகள் வாயிலான தத்துவங்கள், புராண நூல்களில் இறைவனைப் போற்றிய பாங்குடன் தத்துவங்களையும் அறிய முடியும். திருமாலின் சிறப்புகளாக தொல்காப்பியரும், பதிற்றுப்பத்து நூலின் வரிகளில் காப்பியாற்று காப்பியனாரின் கருத்துரைகளும், சங்க இலக்கியங்களில் ‘மாயோன்’ எனக் குறித்த பாடல்வரிகளும் அறியப்பெற்றன. பக்தி இலக்கியம் மட்டுமல்லாது இலக்கணம், சங்க இலக்கியம், இக்கால வழிபாட்டுமுறை எனப் பல்வேறு வகைமையில் ஒப்பீட்டு முறையிலும் இப்பகுதியில் கருத்துகள் அமையப்பெற்றுள்ளன.

இறைவனை வணங்கும் முறையில் காலத்தால் மூத்தோர்களான ஆழ்வார்களின் பாசுரங்கள் வாயிலாக


Isbn Number: 978-93-91115-48-7

பக்திச்சுவையினையும், திருத்தலங்களின் பெருமையும், அவற்றால் பெறக்கூடிய பலன்களும் எனும் நோக்கில் விளக்கவுரை வடிவிலும் உளவியல் நோக்கிலும் செய்திகள் அறியப்பட்டன. வைணவம் குறித்த வரலாற்றுப் பதிவுகளும் வழிபாட்டு முறைகளும் என்ற தலைப்பில் அமைந்த கருத்துகள் இப்பகுதியில் பன்முக பாகுபாடுகளில் ஆராயப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

[1] ஆர். ஆராவமுதன். *ஸ்ரீ இராம பக்த அனுமான்.* வானதி பதிப்பகம், சென்னை -17, 2001.

[2] இளம்பூரணனார் உரை. *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை-14, 2005.

[3] எட்டாவது உலகத்தமிழ் மாநாடு, *அறிவியல் மலர்.* தஞ்சை, 1995.

[4] கா. கைலாச நாதகுருக்கள். *சைவத் திருக்கோவிற் கிரியை.* ஞாபகார்த்த சபை, யாழ்ப்பாணம், 2009.

[5] கே. பாலசுப்ரமணியம். *நலம் தரும் தமிழ்நாட்டுத்*


Isbn Number: 978-93-91115-48-7

*திருக்கோவில்கள்,* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை-18, 1998.

[6] கோக்கலை ஜேராஜன். *திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும் (அகல உரை).* மகாராணி வெளியீடு, சென்னை-01, 2002.

[7] சடகோப ராமாநுஜதாஸன். *திருவாய்மொழியின் உரை.* ஆராவமுது பிரசுர நிலையம், ஸ்ரீ பெரும்புதூர், 1990.

[8] சிலம்பு நா.செல்வராசு. கோயில் பண்பாடு. அனிச்சம் இலக்கிய வட்டம் வெளியீடு, சபாநாயகம் அச்சகம், புதுச்சேரி-605005, 1999.

[9] தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். *தமிழ்நாடு அரசு, வரலாறு - இந்திய நாகரிகம், தொகுதி-2,* சென்னை, 1978.

[10] பேராசிரியர் டாகடர் ந. சுப்புரெட்டியார். *வைணவமும் தமிழும்.* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை-18, 1998.

[11] பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. *சங்க இலக்கியம்.* பாரி நிலையம், சென்னை-01, 1940,

[12]முனைவர் கமலக்கண்ணன். *நாலாயிர திவ்ய*

 **Isbn Number: 978-93-91115-48-7**

*பிரபாந்தம்*, வர்தமானன் பதிப்பகம், சென்னை-17.

[13] வித்துவான். M, நாராயணவேலுப்பிள்ளை. *ஸ்ரீமத்பாகவத புராணம்.* வெற்றிஅச்சகம், சென்னை– 5, 1982.

[14] வெ.சுந்தரம். *வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.* செம்மலர் பதிப்பகம், சென்னை-15.

[15] T.R. குப்புஸ்வாமி. *ஸ்ரீமத் ராமாயணம்.* RNR பிரிண்டர்ஸ், சென்னை- 5, 2009.

[16] ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா. *நம்மாழ்வார் திருமொழி* . பிரேமா பதிப்பகம், சென்னை – 18, 1949.

 **Isbn Number: 978-93-91115-48-7**

# Devotional Personality of Madurakavi Alwar

**Dr S. Srijayanthi,** Assistant Professor, Department of Tamil,
PSGR Krishnammal College for Women, Coimbatore-641004,
Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-1798-7134**
**DOI: 10.5281/zenodo.5712104**

## Abstract

*Religion is the one that enriches and sanctifies the human soul. Devotion helps to get rid of the miseries of life in the world and helps to attain salvation. The Alvars taught the philosophy of surrender and called them Alvars' Prabhati. They evinced wisdom, translated the essence of the Vedic scriptures into the Tamil language and spread the devotional norms everywhere. The 12 Alvars composed these songs during the Vaishnava period from the 6th century to the 9th century AD. Later, the sages Nathamunis compiled the relationship of the Alvars with Ramanujar Nooranthadi who first turned on the Thiruvarangam and bestowed the "Nalayira Dhivya Prabandham" (Four Thousand Divya Prabhandam). The Alvars have registered their experiences with rhymes and made the hymns enjoy the pleasures they received by divine realization. It is noteworthy that the Alvars recorded rich divine experiences they had in their minds in their hymns.*

**Keywords:** The Divine Experience, The superiority of devotion to Madurakavi Alwar, Devotional norm, He philosophy of surrender.

## References

[1] Munaivar kamalakkannan R. V. *Nalayira tivviya pirapantam*, varttamanan patippakam, Chennai- 600017, 1999.

[2] *Nammalvar Ayvukkovai*, arulmiku araṅkanatacuvami tirukkoyil veliyitu, sriaraṅkam, Tiruccirappalli - 620006, 2011-12.

[3] Taktar.Varataranar.Mu. *tirukkural telivurai*. varttamanan patippakam, Cennai - 600017, 1978.

[4] Vaipavam srivalliputtur vitvann kannan. Cu cuvami, ravi pirintarsa, Cennai 600 011, 1987.

# மதுரகவி ஆழ்வாரின் பக்தி ஆளுமை

**முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் -641004,
தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-1798-7134**
**DOI: 10.5281/zenodo.5712104**

**ஆய்வுச்சுருக்கம்**

மதம் என்பது மனித ஆன்மாவை செழுமைப்படுத்தி புனிதப்படுத்தும் மதம். உலக வாழ்வின் துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தி அடைய பக்தி உதவுகிறது. ஆழ்வார்கள் பிராப்தி என்று சரணாகதி தத்துவத்தை போதித்தார்கள். ஞானத்தை உச்சரித்து வேதத்தின் சாரத்தை தமிழில் மொழிபெயர்த்து பக்தி நெறியை எங்கும் பரப்பினார்கள். கி.பி.6ம் நூற்றாண்டு முதல் 9 ம் நூற்றாண்டு வரையிலான வைணவ காலத்தில் 12 ஆழ்வார்களால் இப்பாடல்கள் இயற்றப்பட்டன. பின்னர் மணவாள முனிவர்களான நாதமுனிகள், ஆழ்வார்களுக்கும், ராமானுஜர் நூற்றந்தாதிக்கும் உள்ள தொடர்பைத் தொகுத்து, முதலில் திருவரங்கத்தை ஏற்றி, நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்றழைக்கப் பட்டார். ஆழ்வார்கள் தங்கள் அனுபவங்களை பாசுரங்களினால் அருளிச் செய்து தாங்கள் பெற்ற இன்பங்களை

ஸ்தாபனத்தை அனுபவிக்கச் செய்தார்கள். ஆழ்வார்கள் தங்கள் மனதில் ஏற்பட்ட தெய்வீக அனுபவத்தை தங்கள் பாசுரங்களில் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**கலைச்சொற்கள்**

தெய்வீக அனுபவம், மதுரகவி ஆழ்வார் பக்தியின் மேன்மை, பக்தி நெறி, அவர் சரணாகதி தத்துவம்

**முன்னுரை**

பக்தி என்பது மனித உள்ளத்தைப் பண்படுத்தும், புனிதப்படுத்தும் ஒரு மார்க்கமாகும் பக்தி, என்ற சொல்லுக்கு கடவுள், குரு முதலியோர் இடத்து வைக்கும் அன்பு என்று பொருள். இதனை வழிபாடு என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் இதனை Devotion (or) Worship என்பர் உலகில் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பத்தில் இருந்து விடுதலை பெறவும், முக்தி அடையும் பக்தியானது உறுதுணை புரிகிறது. இந்த பக்தியானது மனிதனை சீரமைத்து மேம்படுத்துகிற ஒரு இலக்காக இருந்த காலம் பக்திக் காலம் எனச் சிறப்பிக்கப்படுகிறது. இத்தகைய பக்திக் காலத்தில் தோன்றியவர்கள் தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும். ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் கண்ணனைப் பாடி போற்றுவர், பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் எனப்படும். இது

அழியாத அரும் பெரும் சமயக் களஞ்சியமாகத் திகழ்கிறது. திவ்விய பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் திருமாலின் அருள் கிடைக்கப்பெற பக்தி ஒன்றே சிறந்த வழி என்பதை கண்டறிந்தனர். மதச்சடங்குகளைக் காட்டிலும், அறிவைக் காட்டிலும் முக்கியமானது பக்தி என்பது ஆழ்வார்களின் கொள்கை. இங்ஙனம் பக்தியில் திளைத்த ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவி ஆழ்வாரின் பக்தி மேன்மையை விளக்குவதே இப்பகுதியின் சிறப்பாகும்.

**ஆழ்வார்கள்**

தெளிவான ஞானத்தையும், உண்மையான இறை நிலையினையும் நமக்கு உணர்த்துவதற்காக இந்த உலகு படைத்த இறைவனால், அனுப்பப்பட்டவர்கள், பக்தி நெறியை உருவாக்கி ஆன்மாக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் வகுத்துக் கொடுத்தவர்கள் ஆழ்வார்கள். பிரபத்தி என்னும் சரணாகதி தத்துவத்தை இவர்கள் போதித்தனர். இவர்கள் ஞானத்தைக் கலையாக்கி வேதத்தின் சாரப் பொருளைத் தமிழில் மொழிந்தார்கள். பக்தி நெறியைப் பாரெங்கும் பரப்பினார்கள். ஆழ்வார்கள் திருமால் ஒருவனை பரம்பொருள் என்று அவனிடமிருந்ததே சகல தெய்வங்களும், தேவதைகளும் தோன்றினார்கள் என்றும் மூவரில் முதல்வன் அவனே என்றும் கூறுகிறார்கள்.

**நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்**


Isbn Number: 978-93-91115-48-7

**தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்**
**யான்முகமாய்**
**அந்தாதி மேலிட்டு அறிவித்தே னாழ் பொருளை**
**சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து (திருவந்தாதி-7.2)**

என்கிறார் திருமழிசையாழ்வார்.

**யாவரும் யாவையும் எல்லாப் பொருளும்**
**கவபர்வின்றி தன்னுள் ஒருங்கேநின்று**
**பவர்கொள் ஞான வெள்ளச் சுடர் மூர்த்தி**
**(திருவாய்மொழி - 5.7.2)**

இவ்விதம் மகாவிஷ்ணுவான திருமாலே முழுமுதற்கடவுள் என்று நிர்ணயம் செய்தவர்கள் ஆழ்வார்கள்.

**ஆழ்வார்கள் பெயர் காரணம்**

ஆழ்வார்கள் பன்னிருவர் எம்பெருமானின் குணங்களில் ஆல்பம் கால்பட்டு தன்னை மறந்த நிலையில் இருந்தமையால் ஆழ்வார்கள் என்ற திருப்பெயரைப் பெற்றுத் திகழ்ந்தனர். இதனைக் கவிஞர் நாச்சியப்பன்,

**அண்ணாமலை மேல வண்ணன்**
**ஆகிய பெருமாள் தன்னை**
**எண்ணி நாளும் நாளும் நெஞ்சில்**
**நன்மையே நின்ற தாலி**
**நல்லறமும் ஆழ்வார் என்று**
**திண்ணமாய் போற்றப் பெற்றார்**
**செல்வர் பன்னிருவர் தாமே**


Isbn Number: 978-93-91115-48-7

(ஆழ்வார்களின் ஆரமுதன் கழகம், சிறப்புப்பாயிரம் மாலை - 18) ஆழ்வார் - என்ற சொல்லுக்கு மூழ்கியவர் என்று பொருள். அதாவது, இறையருளில் மூழ்கியவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் அருளாளர்களாகக் கருதப்பட்டமைக்குக் காரணம் அவர்கள் வரலாற்றில் காணப்பட்ட சிறப்புகளே ஆழ்வார்களை திருமாலின் அணி மற்றும் ஆயுதங்களாக கருதும் வழக்கம் குருபரம்பரை உண்டு. இதில் வைணவத்தின் உயிர் நாடுகளில் ஒன்றான அவதாரக் கொள்கையின் திட்டமே. பொதுவாக வீர வைணவத்தின் மீது ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள் படைக்கலங்கள் அம்சமாகவும் பக்தி பிரசாகர்கள் அணிகலன்களின் அம்சமாகவும் கருதப்பட்டனர்.

**உதாரணமாக**

பேயாழ்வார் – வாள், திருமங்கை ஆழ்வார் – வில், பூதத்தாழ்வார் – கதாயுதம், பொய்கையாழ்வார் – சங்கு, தொண்டரடிப்பொடி ஆழ்வார் – வனமால, மதுரகவி - தாமரை, ஆண்டாள் - பூதேவி, நம்மாழ்வார் – சேனை முதலியவாக குறிப்பிடலாம். அப்படிப்பட்ட ஆழ்வார்களில் மதுரகவியாழ்வார்

**மதுரகவி ஆழ்வார் பிறப்பும் குழந்தைப் பருவம்**

பாண்டிய நாட்டு திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக் அருகில் உள்ள திருக்கோவலூரில் ஈச்வர

 Isbn Number: 978-93-91115-48-7

வருஷம் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். நம்மாழ்வார் பிறந்த கி.பி 798 சற்று முன் பிறந்தவர். நம்மாழ்வார்க்கு பிறகும் வாழ்ந்தவர். இவர் வேத சாஸ்திரங்களை நன்கு பயின்றவர். ஒரு காலகட்டத்தில் உலக விஷயங்களில் பற்று நீங்கி அயோத்தி, மதுரா முதலிய வடநாட்டு திவ்ய தேசங்களை சேவிக்க சென்றார்.

சிறுவயதிலிருந்தே செவிக்கு இனிய செந்தமிழில் கவிதைகளைப் பாடியதன் காரணமாக இவருக்கு 'மதுரகவி' என்ற சிறப்புப் பெயர்.

மதுரகவி ஆழ்வார், தம்மை விட வயதில் இளையவரான நம்மாழ்வாரிடம் தன்மை சீடராக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். நம்மாழ்வாரும் மதுரகவி ஆழ்வாரை தம்முடைய சீடராக ஏற்றுக்கொண்டார். நம்மாழ்வாரின் பாசுரங்களை சுவடியில் எழுதும் பேற்றினையும் பெற்றார் மதுரகவியாழ்வார். பன்னிரண்டு ஆழ்வார்களின் பெருமாளைப் பாடாத ஆழ்வார் மதுரகவி ஆழ்வார் மட்டுமே. தமக்கு இறைவனாகவும், எல்லாமாகவும் இருப்பவர் குருவான நம்மாழ்வாரே என்பதில் உறுதியாக இருந்தார் மதுரகவி ஆழ்வார். நம்மாழ்வாரின் பாசுரங்களை சுவடியில் எழுதிய மதுரகவி ஆழ்வார் பெருமாளைப் பாடவில்லை என்றாலும் தம்முடைய


Isbn Number: 978-93-91115-48-7

குருவாகிய நம்மாழ்வாரைப் போற்றி பாசுரங்களை இயற்றியிருக்கிறார். அந்த பாசுரங்கள் கண்ணி நுண் சிறுதாம்பு என்று அழைக்கப்படுகிறது. அவற்றில் ஒரு பாடல்,

**நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்**
**மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே**
**தேவு மற்றறி யேன்குரு கூர் நம்பி**
**பாவினின்னிசை பாடித் திரிவனே.**

**(கண்ணிநுண் சிறுதாம்பு-8:1-4)**

திருக்குருகூர் நம்பி தவிர தெய்வமே அறியேன் என்றும் நம்மாழ்வாரை போற்றிப்பாடுகிறார் மதுரகவி ஆழ்வார்.

**கண்ணிநுண் சிறுதாம்பு**

மதுரகவி ஆழ்வாரின் பாசுரங்கள் கண்ணி நுண் சிறுதாம்பு. நம்மாழ்வாரைப் போற்றி மதுரகவி ஆழ்வார் இயற்றிய நூலாகும். இந்நூல் பதினோரு தனியன்களைக் கொண்டது. மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரை வணங்கி பாடப்பட்ட இந்நூல் நாலாயிர திவ்யபிரபந்த தொகுப்பில் முதலாம் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

**இறைவானேஆதாரம்**

பிறந்த குழந்தைக்குத் தாய் முலையே ஆதாரம் போல் நமக்கு எல்லாம் இறை திருத்தாள்களே தஞ்சம் என்பது வைணவர் கொள்கை. ஆழ்வாரை தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்ட மதுரகவியாழ்வார் அவரைப்

 Isbn Number: 978-93-91115-48-7

பின்பற்றியே அவருடைய பாசுரங்களில் அமைந்த சிறப்புகள் பற்றி அழகாக எடுத்துரைக்கிறார். பெருமானின் திருவடிகளைக் கொண்டாடுகின்ற பக்தர்கள் மகிழும்படி அந்த அருமையான வேதத்தின் உட்பொருள்களை அருளிச் செய்தவராயும் மிகுந்த கருணையாலே தமிழ் மொழியில் அமைந்த திருவாய்மொழி ஆயிரத்தைப் பாடியவருமான ஆழ்வாருடைய அருள் ஒன்று மட்டுமே இந்த உலகில் மிக்குள்ளது.

**ஓது மாண்டன்று இருநூற்று நாற்ப திருந்திவ்**
**உலகனைத்தும்**
**பூத நாதன் அடியவராய்ப் பொருந்தும் வண்ணம்**
**திருத்திவித்து**
**வேதம் நாலும் தமிழ்செய்த விமலன் அருளால்**
**உடலோடு**
**சீதவிரசைப் புனலாடித் திருமா மணிமண் டபம்**
**தெறிந்தான். (மதுரகவியாழ்வார் பிரபந்தம், 1094)**

இருநூற்று நாற்பது ஆண்டுகள் இருந்த இவ்வுலகை எல்லாம் திருமாலின் தொண்டராய் ஆச்சிரிக்கும்படி பண்ணுவித்து, நான்கு வேதங்களையும் தமிழில் செய்த ஆழ்வார் திருவருளாலே இந்த சரீரத்தோடே குளிர்ந்த விரஜா நதி நீரிலே நீராடி திருமாமணி மண்டபம் சேர்ந்தார்.


Isbn Number: 978-93-91115-48-7

## பாசுரங்களில் இயைபுக் கற்பனை

ஆழ்வார்கள் தங்கள் அனுபவங்களைப் பாசுரங்ளாக அருளிச் செய்து, தாம் பெற்ற இன்பத்தை வையகம் பெறுமாறு செய்தனர். அனுபவங்கள் தான் அவர்களது பாசுரங்களுகான வித்து அனுபவத்தால் விளையும் கவிதை படிப்பவர் மனதில் எளிதில் இடம் பிடித்துவிடும். ஆழ்வார்களின் அனுபவங்கள் எளிதில் வரையறுக்க தக்கதன்று. ஏனெனில் அந்த அனுபவத்தை அவர்கள் மனம் இறைவனை மனத்தில் கொண்டதும் உண்டு. இறைநிலையில் அவர்கள் மனம் கொடுத்தும் உண்டு கொண்டதும் கொடுத்ததுமாகிய இரண்டும் பல்வேறு வகையில் பாசுரங்களாக வெளிப்பட்டன.

## அனுபவங்களும் கற்பனையும்

அனுபவங்கள் ஐம்புலன்களை அடிப்படையாகக் கொண்டவை. அவ்வனுபவங்கள் வாயிலாக வரும் அறிவினைப் புலனுணர்வு அல்லது புலன் காட்சி என்பர். புலன்காட்சி கவிஞரின் உள்ளத்தில் எண்ணற்ற கருத்தியல் வடிவங்களைப் படைத்துத் தொகுத்து வைத்திருக்கிறது. அதனால் பின்னர் புலன்கள் வாயிலாக அன்றிக் கருத்தளவில் ஒரு பொருளை எண்ணி அனுபவிக்கக் கூடிய ஆற்றல் மனிதனுக்கு உண்டாகிறது. அந்த ஆற்றலின் வளர்ந்த நிலையை கற்பனைத் திறனாகிறது. இக்கற்பனைக் கூறுதான் இலக்கியம்?


Isbn Number: 978-93-91115-48-7

என்ற தனிச்சிறப்பு பெற உயிர்நாடியாக விளங்குகிறது. கற்பனையை மிகச்சிறந்த உணர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. உணர்ச்சி பொங்கும் கவிதையில் கற்பனையைப் புனைந்து படைப்பது கவிஞரின் இயல்பு. வடிவத்தையும் பொருளையும் பிரிக்க முடியாது போல உணர்ச்சியும் கற்பனையும் ஒரு வடிவமாக பிறந்தது ஒரு வடிவமாக வாழ்கின்றன. இங்கு ஆழ்வார்களின் உணர்வுகளின் கற்பனை உருவில் பாசுரங்களாக வடிவம் கொள்கின்றன.

கற்பனையாவது கவிஞன் தான் உணர்ந்த உணர்ச்சியையோ பெற்ற அழகின் அனுபவத்தையோ அல்லது கண்ட காட்சியையோ நாமும் முழுமையாகவும், தெளிவாகவும், உணர்ந்தோ அனுபவித்தோ கண்டோ இன்புறுமாறு ஓர் இயைபும் ஒழுக்கமுறை அமைத்துக்காட்டும் அரிய கலைத்திறன் எனலாம். ஆழ்வார்களின் கற்பனை, நேரடியாக ஒரு பொருளைப் புலன்களின் வழி நினைவுக்குக் கொண்டுவந்து அப்பொருளிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்கவல்ல ஒருவகை ஆற்றலாக அமைகிறது. இவர்கள் உள்ளத்தை உள்ளவாறு காணவில்லை, உள்ளம் விழையும்மாறு காண்கின்றனர். இவ்வகையில் மதுரகவி ஆழ்வார் பாசுரங்களிலும் காணும் இயல்பையும், கற்பனையும் நோக்கலாம்.


Isbn Number: 978-93-91115-48-7

**மனதின் செயல்**

இறைவனால் படைக்கப்பட்ட உலக உயிர்கள் அனைத்தும் கடைசியில் இறைவனை அடைவதற்கு உரிய வழியினை உணர, அவ்உயிர்களுக்கும் பல பொருட்களை வழங்கியுள்ளான். அப்பொருட்களுள் சில கண்ணுக்குப் புலப்படுவன, சில புலப்படாதன. கண்ணுக்குப் புலப்படாத ஞானேந்திரியங்களுள் மனமும் ஒன்றாகும். இம்மனத்தை அந்தக்கரணம் என்பர். இம்மனமும் மனித உடலும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்தவை. ஒன்று துயருற்றால் மற்றது துயருறும். மனித உடலை ஆட்சி செய்தது மனமே. மனம் உயர மனிதனும் உயர்வான். இறைவனின் திருவடியை அடையப் பெறல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட இறை அடியார்கள் இறைவனின் பக்தி அனுபவத்தில் லயிப்பதற்கு அவர்களின் மனமே அடிப்படையாக விளங்குகிறது.

**மனத்தூய்மை**

மனம் புலன் வழிப்பட்டது. புலன்கள் நல்வழியில் செயல்பட்டால் மனமும் நல்வழிப்படும். இதனை,

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறி நின்றார் நீடு வாழ்வார் (குறள் - 45)**

வள்ளுவர் என்கிறார். நம்மாழ்வாரும் இறைவனை

 Isbn Number: 978-93-91115-48-7

அடைய கருதும் ஊனம் கொண்ட மனத்தினை எச்சரிக்கையில்,

................................ **நெஞ்சே**

**பேயார் முலைகொடுத்தார் பேயர் ஆய் நீ யார்?**
**(நாலாயிர திவ்ய பிரபந்தம் - 2598)**

என்கிறார். மேலும் ‘தூய்மையான மனமே இறைவன் தங்குமிடம் ஆகும். இறைவன் தங்கியதும் அதுவரை இடம் கொண்ட தீயவினைகள் தங்க இடமின்றி நொந்து ஓடும். சிவந்த கண்களை உடைய என் திருமாலின் குணங்கள் என் நெஞ்சில் நிரம்பின. ஆகவே இனி கொடுவினைகள் என் நெஞ்சில் தங்காமல் வெளியேரி விடும். இவ்வாறாக மதுரகவி ஆழ்வார் தன்னுடைய ஆசானை இறைவனாகப் பார்த்து தன்னுடைய இறைவன் நம்மாழ்வாரின் பாசுரங்கள் கேட்டு இன்புற்று இருப்பதாக கூறுகிறார்.

**இனிய குணங்கள்**

திருமாலை மனதில் எண்ணும் பொழுதே அவர் தம்மிடத்தில் மாற்றங்களை உருவாக்கியவராக நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். திருமால் தன் அடியவர்களை நேசிக்கின்ற விதம் அவர்களை காக்கின்ற தன்மை அவர்களுக்கு அருளுகின்ற தன்மை, துன்பங்களை நீக்குகின்ற தன்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டு திருமாலின் இத்தகு குணங்களை நம்மாழ்வார் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். திருமாலின் இந்த


Isbn Number: 978-93-91115-48-7

குணங்கள் நம்மாழ்வாருக்கு மிகுந்த இனிமை பயப்பதாகக் குறிப்பிடுகின்றார். பாலின் தீஞ்சுவையின் இனிமையை திருமாலின் குணங்களோடு ஒப்பிட்டு அச்சுவையைக் காட்டிலும் இனிய சுவையானது திருமாலின் மேற்கண்ட குணங்களே ஆகும் என்கிறார் நம்மாழ்வார்.

**மாலே! படிசோதி மற்றறேல் இனி - உனது**
**பாலே போல் சீரில் பழுத் தொழிந்தேன்…**
**(நாலாயிர திவ்ய பிரபந்தம் -2642)**

என்ற பாடலின் வழியாக திருமாலின் போற்றத்தக்க குணங்களை மிகவும் இனிமையாகக் குறிப்பிடுகிறார். ஒன்றினைப் பற்றித் தெரிந்து கொண்டால் தான் அதனின் தன்மையை நம்மால் பிறருக்கு விளக்கிக் கூற இயலும், அவ்வகையில் திருமாலின் சிறந்த குணங்களைக் கண்டு உணர்ந்து அனுபவித்ததன் உறுதியாலே திருமாலின் குணங்கள் பாலிலும் இனிமை தருவதாக நம்மாழ்வார் இங்கு உறுதிபடக் கூறுகிறார். எனவே நம்மாழ்வாரின் இறையனுபவம் இங்கு வெளிப்படுகிறது. இப்பாசுரத்தில் இருந்து நம்மாழ்வார் இறைவன் மேல் கொண்டுள்ள அனுபவத்தின் காரணமாக நம்மாழ்வாரின் தன்னுடைய இறைவனாக பாவித்தார் மதுரகவி ஆழ்வார்.

**மிக்க வேதியர் வேதத்தின் னுட்பொருள்**
**நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்**
**தக்க சீர்ச்சட கோபன் என் நம்பிக்கு ஆள்**
**புக்க காதல் அடிமை பயனன்றே?”**

 **Isbn Number: 978-93-91115-48-7**

**(மதுரகவி ஆழ்வார் பிரபந்தம் - 945)**

சிறந்த வைத்தியர்களால் ஓதப்படுகிற வேதத்தினுடைய உள்ளுறைப் பொருளானது நிலை நிற்கும்படி திருவாய்மொழியைப் பாடி என்னுடைய இதயத்திலே அந்த வேதாந்தங்களை அல்லது திருவாய் மொழியை ஆழ்வார் நிலைநிறுத்தினார். தகுதியான குணங்களை உடையவரான அந்த ஆழ்வார் விஷயத்திலேயே அடிமை செய்வதற்கு உறுப்பான ஆசையானது அந்த நேரத்திலே ஆழ்வார் திருவடிகளில் கைங்கர்யம் செய்வதையே பயனாக உடையது.

**உள்ளத்தின் பூரிப்பு**

அகவாழ்வில் தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் எப்பொழுதும் எண்ணிக் கொண்டே இருப்பது. அந்நிலையில் காணும் காட்சிகள் யாவற்றிலும் தான் நேசிப்பதற்குரியவராகவே காட்சியளிக்கும். இந்நிலை ஒரே சிந்தனை வயத்தால் நிரம்பியுள்ள தன்மையைக் காட்டுகிறது.

**பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற**
**காவிமலர் என்று காண்தோறும் –பாவியேன்**
**மெல் ஆவி, மெய் மிகவே பூரிக்கும் –அவ்வவை**
**எல்லாம் பிரான் உருவே என்று**

**(நாலாயிர திவ்ய பிரபந்தம் -2657)**

என்ற பாடலின் பூவைக் காணும் போதெல்லாம் நம்மாழ்வார் இறைவனாகிய திருமாலாகவே காணுகிறார்.

 Isbn Number: 978-93-91115-48-7

இக்காட்சி தனது உயிருக்கும், உடலுக்கும் பூரிப்பினை அளிப்பதாகவும் குறிப்பிடுகிறார். எனவே நம்மாழ்வார் திருமால் குறித்த சிந்தனையால் தாம் உணர்ந்து அனுபவத்த அனுபவங்களையே இவை காட்டுகின்றன எனத் தெளியலாம்.

**இறைநிலை**

நம்மாழ்வார் இறைவனை அநுபவிப்பதற்கு விரோதியான பிறவித் தொடர்ச்சியே அறுத்துதர வேண்டுகிறார். திருவாசியத்தில் பிறவியிலிருந்து மீண்டவர்க்கு போக்யமான வடிவழகை இறைவன் காட்டிக்கொடுக்கக் கண்டார். பெரிய திருவந்தாதியில் இப்படி இறைவனை அநுபவித்தால் ஆசைபிறந்து கண்ணன் குணங்களைப் பேசியும் நினைத்தும் தரிசிக்கிறார். இறுதியாக ஆழ்வாருடைய பக்திக்கு ஏற்ப இறைவன் தான் திருமகள் கேள்வனாய், எல்லாக் கல்யாணகுணங்கள் நிரம்பப் பெற்றவனாய், தனக்குத் தகுதியான திருமேனி உடையவனாய், திவ்விய ஆபரணங்களையும் திவ்விய ஆயுதங்களையும் உடையவனாய், பரமபதத்தில் ஆனந்தமயமான திவ்விய சிம்மாசனத்தில் பெரிய பிராட்டியாரும் தானுமாய் வீற்றிருந்து ஏழுலகமும் தனிக்கோல் செல்ல, அயர்வறும் அமரர்கள் எப்போதும் அடிமை செய்ய, தன் அவதாரங்கள், அர்ச்சனையில் இருப்பு ஆகியவற்றை


Isbn Number: 978-93-91115-48-7

திருவாய்மொழியாகிய பிரபந்தத்தின் வாயிலாக ஆழ்வாருக்குக் காட்டி அநுபவிக்க செய்தான். இதுவே ஆழ்வார் கண்ட இறைநிலை இவ்வாறாக நம்மாழ்வார் கண்ட இறைநிலையை மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வார் இடம் கண்டார்.

**இறைவனை சரண் புகுதல்**

இறைவன் முகம் காட்டாமையாலே தன் கையில் ஒன்றுமில்லாமையை நினைத்து விபீஷணன் தன்தாழ்த்தி இராமனைச் சரணம் அடைந்தாற்போலே, ஆழ்வாரும் வானமாமலையில் திருவநந்தாழ்வான் மேலே பிராட்டியோடு எழுந்தருளியிருந்த தெய்வநாயகன் திருவடியில் **கை தொழ இருந்தாய் அது நானும் கண்டேன் (நாலாயிர திவ்யபிரபந்தம் - 5.7.5)** என்னும்படி வேரற்ற மரம்போலே விழுந்த சரணம் புகுகிறார். இவ்வாறு வானமாமலையின் சரணம் புகுந்தும் இறைவன் முகம் காட்டாமையால் கடலில் அழுந்துவார் அங்கே ஒரு தெப்பம் பெற்றுத் தரிக்குமாபோலே திருக்குடந்தை என்னும் திவ்யதேசத்தளவும் செல்ல நேர்ந்தது. இங்கு ஆழ்வாரை பரதனோடு ஒப்பிடுவர். பரதன் இராமனை மீட்டுக்கொண்டு வந்து பட்டாபிஷேகம் செய்ய நினைத்துக் காட்டுக்குச் செல்கிறான்.இராமன் பதினான்கு வருடம் கழித்தல்லது மீளமாட்டோம் என்று சொன்னான். ஆகவே நமக்கு நாலு நாள் தாழ்ந்தாலும் நம் காரியம்


Isbn Number: 978-93-91115-48-7

செய்யலில்லை என்று பார்த்து திருக்குடந்தை புகுந்தார் ஆழ்வார். பரதன் திரும்பி வந்தாற்போலே ஆழ்வார் பெரிய துக்கத்தோடே

**ஆறாவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே**
**நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே**
**சீரார்செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை**
**ஏரார்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன் எம்மானே.**

**(நாலாயிர திவ்யபிரபந்தம் - 5.8.1)**

என்று கூப்பிடுகிறார். இங்கு ‘அடியேன்’ என்றது இறைவன் ஆழ்வாருக்குக் கொடுத்த பக்தியும் அறிவும் கொண்டல்ல. இராம குணத்துக்குத் தோற்று இலக்குமணன் அடிமை செய்தாப்போலே ஆழ்வாரும் இறைவன் கிடை அழகு கண்டு சொல்லுகிறார் என்கிறார் நம்பிள்ளை. இறைவனிடம் அன்பு தான் ஒரு வடிவு கொண்டாப்போலே இருந்ததாம் உடல் அன்பாய், அன்புதான் நீராய்க்கொண்டு அலைந்ததாம். ஒரு பொருளைப்பற்றி கேட்டலோ, நினைப்பதோ, பாவிப்பதோ நேரே காண்பதற்கு ஒப்பாக வருவதல்லவே. அந்த விஷயம் அழிக்க அழிக்கிறது அவ்வளவே அல்லவா. நீரானது தன்பக்கலிலே அகப்பட்டதைக் கரைத்துத் தான் கரையாது இருக்கும். அங்கு அவ்வாறல்லவே. நீர்தானாயிற்று கரைகிறது. அன்பு நீரினால் நீர்தான் கரையக் குறையில்லையே. ஆழ்வார் தன்மை


Isbn Number: 978-93-91115-48-7

இப்படியானால் இறைவன் செய்வது என்னவென்றால் உருக்குகின்றானாம். பொற்கொல்லர் ஆபரணம் என்று பாராமல் உருக்கி அழிக்கிறான். ஆழ்வார் திருமேனியை உருக்கலாமோ என்னில், ஆழ்வார் திருமேனி இறைவனுக்கு ஆபரணம் அல்லவா. **தேசமான அணிகலனும் என் கைகூப்பி செய்கையே** (நாலாயிர திவ்யபிரபந்தம் - 4.3.2) என்கிறாரன்றோ ஆழ்வார்.

**ஆழ்வாரின் ஆற்றாமை**

இறைவனோடு கலக்கமாட்டாமை கண்டு ஆழ்வார் ஆற்றாமையா வருந்துவதை மாற்ற தன் அழகையும் இவ்வுலகில் வேறு வேறு பொருள்களாய் இருக்கும் இருப்பையும் காட்டுகிறான் ‘நல்குரவும்’(6.3) என்ற பதிகத்தில்............. அந்த அநுபவம் உள்ள திருவிண்ணகர் எம்பெருமானை உள்ளபடி கண்டு அனுபவித்தார். காணவேணும் என்ற ஆசை கொண்டால் வேறு உடலை அடைந்து வேறு தேசமான பரமபத்தில் போய்க்காணவேண்டும். அப்படி அல்லாமல் பசித்த இடத்தே அநுபவிக்கிறார் ஆழ்வார்.

இறைவன் தன் இச்சையோடு இருப்பதற்குக் காரணம் அவன் தானாகயிருக்கும் நீர்மை முதலான குணங்கள் நிறம்பெற பிராட்டியாருக்கும் ஆழ்வார் அவனை இப்போதே பெற எண்ணினார். அப்போதே பெறமுடியாமையாலே அவனை எண்ணி துக்கப்பட்டார்.


Isbn Number: 978-93-91115-48-7

அப்போதே பெறவேண்டும் படி குணம் நிறைந்தவனாய், பெறுவிப்பாரும் அருகே இருக்கப் பெறாவிட்டால் பொறுக்கமாட்டாதவர். எனவே, ஆழ்வார் ஆற்றாமைக்கு ஏற்ப தூணிலே பிரகலாதனுக்கு வந்த தேரற்றினாற் போலேயும், கஜேந்திரனுக்குக் கருடவானனாய் வந்து தோற்றினாப் போலேயும் முகம் காட்டினான். உடனே ஆழ்வாரும் இறைவனோ ஆறு சமயங்களுக்கு எதித்தட்டாயிருப்பவன். அதனால் ஆதியானவன் பிரமன் முதலானோர்க்குக் காரணமானவன். காரியங்களிலே ஒன்றுக்குத்தான் கார்யமானவன். அவதாரத்தில் பிற்பட்டார்க்கு எளியவன். இப்படிப்பட்டவனைக் காணப்பெற்றேன் என்கிறார். இதுபற்றியே,

> **உருவாகிய ஆறுசமயங்கட்கெல்லாம் பொருவாகி நின்றாவன் எல்லாப்பொருட்கும் அருவாகி ஆதியைத் தேவர்கெல்லாம் கருவாகி கண்ணனைக் கண்டு கொண்டேன் (நாலாயிர திவ்யபிரபந்தம் - 9.4.8)**

என்று பேசிகிறார். இறைவனைக் கண்டுகொண்டு தன் கண்கள் களித்து, முன்னைப் பழவினைகளைப் பற்றோடு அறுத்தான் என்கிறார். எனவே தொண்டர்கட்கு அமுதமாகிய திருவாய்மொழியை சொன்னேன் என்கிறார்.

**தத்துவ நோக்கு**

இறைவனை அடையலாகிய பேரின்ப வாழ்வினை இனிதாகக் கூறும் மெய்ப்பொருள் நூல்களும் நம்மாழ்வார்


Isbn Number: 978-93-91115-48-7

திருவாய் மலர்ந்தருளிய தமிழ்வேதமே முதன்மையானது என மெய்ப்பொருள் நூல்கள் நன்காந்துணர்ந்த ஆன்றோர்கள் கூறுவர். இவரது அவதாரத்தை அரிசமய - பராங்குசச் சுருக்கம் பின்வரும் பாடலின் வழி எடுத்தியம்பும்.

**கருணை வாரிதியெனும் பெயர்க்கரியமால் கவினார்**
**உருவாகிய சேனை நாயகனுளம் உவந்தே**
**பொருவியல் நான்மறைத் தமிழ்நவின்றுலகெலாம்**
**(திருவாய்மொழி - 1.4-6)**

ஆழ்வார் உலகம் உய்ய அவதரித்த திருமலையில் திருமகள் நாதன் பிறர் அறியாமல் எழுந்தருளி, அவருக்கு ஞானமாகிய அமுதத்தை ஊட்டியளித்துச் சென்றார். ஆதலின், தாயின் முலை உண்ணாமலும் அழாமலும், கண் திறவாமல் இருந்தார். இந்நிலையில் பதினாறு ஆண்டுகள் தொடர்ந்து, ஒருநாள் வடதேச யாத்திரை சென்றிருந்த மதுரகவியாழ்வாருக்கு திடீரென்று தென்திக்கில் சிறந்ததோரின் ஒளி அவர் திருகண்களுக்குத் தோன்றிற்று, இவ்வொளியைப் பின் தொடர்ந்து வந்த ஆழ்வாருக்கு சோலைகள் எம்மருங்கும் பொலிந்திலங்கும் நல்லார் நவில் திருக்குருகூர் வந்தடைந்தும் அவ்வொளி நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கும் இடத்தைக் காட்டி மறைந்தது. மதுரகவியாழ்வார் மெய்ஞ்ஞான நிறையவாலே பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்று


**Isbn Number: 978-93-91115-48-7**

மதியெனப் பொலியும் திருமுகத்தினராய் யோகத்தில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வாரைக் கண்டார். கண்டவுடன் இவர் கண் திறந்து நம்மைக் கடைக்கணித்து அருளுக அவரோ? ஆய்ந்து பார்ப்போம் என்றெண்ணித் தம்முடைய இரண்டு கைகளையும் ஒன்றாய் ஓசையெழும்படி தட்டினார். உடனே ஆழ்வார் மதுரகவியாரை நன்கு நோக்கி,

**செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால்**
**எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?**

என்று கேட்டார். அதற்கு ஆழ்வார், **அத்தைத் தின்று அங்கே கிடக்கும்** (கண்ணிநுண் சிறுதாம்பு- 994) என்று திருவாய் மலர்ந்தருளினார். இதன்படி ஆழ்வாரின் முதல் வார்த்தையே தத்துவநோக்கில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதாவது, செத்தத்தின் வயிற்றில் - உயிரற்றதாகிய பிரகிருதியினால் ஆகிய உடம்பில், சிறியது – அணுவடிவாயுள்ள ஆன்மா, பிறந்தால் - வந்து புகுந்தால் எத்தைத் தின்று - எதனை அனுபவித்துக்கொண்டு, எங்கே – எவ்விடத்தில், கிடக்கும் - இன்பம் உண்டென்று எண்ணியிருக்கும்.

அத்தை - அந்த உடலின் தொடர்பினால் ஆகும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் இவ்வைந்தினால் வரும் இன்ப, துன்பங்களை, தின்று - அனுபவித்துக் கொண்டு, அங்கே – அவ்விடத்திலேயே,


Isbn Number: 978-93-91115-48-7

கிடக்கும் – இன்புற்றேன் இளைத்தேன் என்று சொல்லிக் கொண்டே இருக்கும் என விடையை பெறுகின்றார். பின்பு ஆழ்வார் மதுரகவியாரை நோக்கி, ‘அன்புடையீர்’, நாம் பகவானை அனுபவித்தற்குப் போக்குவீடாகச் செல்லும் பாசுரங்களை நீர் பட்டோலையை அலங்கரிப்பீராக! என்று திருவாய் மலர்ந்து அருளுகின்றார். மதுரகவியாரும் நீர் பட்டோலையை அலங்கரித்து திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி என்னும் அரும்பொருள் நிதிகள் ஆகிய நான்கு தமிழ் மறைகளைத் திருவாய் மலர்ந்தருளினார்.

தத்துவ நோக்கில் ஆராயின் திருவாய்மொழியின் முதல் பாசுரமே ஆன்ம உபதேசத்தைக் கூறும் பாசுரமாக அமைகிறது. அதாவது என் மனமே, தேவர்கள் முதலிய மற்றையோருடைய மேன்மைகள் முழுவதும் இல்லை என்று கூறும் படியாக மேன்மேலும் உயர்ந்து கொண்டே செல்கின்றனர்.

**உலகிற்கு உபதேசம் செய்யும் ஆழ்வார்**

**ஒடுங்க அவன்கண்**
**ஒடுங்கள் எல்லாம்**
**விரும்பின்னும் ஆக்கை**
**விடும்பொழுதெண்ணே (திருவாய்மொழி - 1.2.9)**

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளான

 Isbn Number: 978-93-91115-48-7

அவ்விறைவனிடத்தில் சென்று சேரவே, உங்களிடத்தில் வந்து சேர்ந்திருக்கின்றன எல்லாம் தாமாகவே விட்டு நீங்கும். அதற்குமேல் உயிரானது உடலை விட்டு நீங்கும் காலத்தை எண்ணி இரு' என்கிறார். அதாவது, ஒருவன் சிற்றின்பங்களிலிருந்து விடுபட்டு பேரின்பப் பெருவாழ்விற்கான வழி நிலைகளை உணர்த்தும் நிலையை இப்பாசுரம் காட்டுகிறது.

**சரணடைவோன் பண்புகளும் சரணாகதித் தத்துவமும்**

வைணவ சித்தாந்தக் கருத்துக்களுள் உயர்ச்சியடையும் தத்துவம் சரணாகதி தத்துவமாகும். இது ஸ்ரீ வைணவத்திற்கேயுரிய சிறப்பான தத்துவமாகும். சரண் என்றால் திருவடிகள் ஆகும். இறைவனின் திருவடிகளன்றி வேறு கதியில்லை என்று சரண் அடைவதே சரணாகதியாகும். இது பரசமர்ப்பணம், பரநியாசம், உபயானுட்டானம் என்று பலவாறு குறிக்கப்பெறும்.

இறைவனை அடைவதற்குரிய பக்தி யோகங்கள் யாராலும் கடைப்பிடிக்கவல்லன அல்ல. எல்லோருக்கும் எளிதில் அவை கைகூடவல்லனவும் அல்ல. இந்நிலையில் கடையனுக்கும் கடைத்தேற்றம் அருளும் சிறப்புவழியே (ப்ர-பத்தி) சரணாகதியாகும். வைணவத்தில் உயிர்நாடி சரணாகதி கோட்பாடு என்றாலும் மிகையில்லை. இறைவனுக்குத் கைத்தொண்டு புரிந்து உலகியல்


Isbn Number: 978-93-91115-48-7

பற்றறுத்து, தம்பொருப்பென்று எதுமில்லை, தன்னைக் காத்துப் போற்ற வேண்டியதும் இறைவனுடையதே என்று கருதி, இறை சிந்தனையுடன் வாழ்வதே சரணாகதி ஆகும்.

இராமபிரானாக இறைவன் அவதரித்த காலத்தில் தன்னை அடைந்தோர்க்கு சரணாகதி அருள்வதை தன் வாழ்வின் கொள்கையாகக் கொண்டிருந்தான். இராமாவதாரத்தில் சயந்தன்,சுக்ரீவன், வீடணன் என பலருக்கு அடைக்கலம் நல்கினான். மேலும் கிருஷ்ணாவதாரத்தில் பகவத் கீதையில்,

**சர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ**
**அஹம் த்வா சர்வபாபேப்ய : மோஷயிஷ்யாமி**
**மாசுச (பகவத் கீதை – 210)**

என்று சரணாகதியினை மேற்கொள்ள இறைவன் அறிவுத்துகின்றான். இறைவனின் அருட்செயல்களும் அருளுரையும் சரணாகதி என்று வைணவத் தத்துவதற்கு அடிநாதமாகும்.

இறைவனையே சிந்தித்து உழன்ற நம்மாழ்வார் போன்ற அருளாளர்கள் அவன் திருவடிகளில் அடைக்கலம் புகுவதை விரும்பினர். முத்திப்பேறு பெறுவதற்கு முயல்பவரை முழுசா என்பர். அடைக்கலம் புகுந்தவர் மூலம் முத்திரையை நாடுபவர் பிரபன்னர் எனப்பெறும் சரணடைபவர் ஆவார். அவ்வாறு சரண்

 Isbn Number: 978-93-91115-48-7

புகும்போது சரணடைபவனுக்கு இருத்தலாகிய இரு பண்புகளை ஆன்றோர் குறித்துச் சென்றுள்ளனர். அதை ஆகிஞ்சன்யம் எனும் கைம் முதலில்லாமை, அநன்னி கதித்துவம் எனும் வேறு புகலில்லாமை ஆகியனவாகும். சரணடைபவனுக்குரிய இவ்விரு நிலைகள் நம்மாழ்வார் பாடல்களில் எவ்வாறு வெளிப்படுத்தி உரைக்கப் பட்டுள்ளன.

**முடிவுரை**

இறைவனை வழிபடும் நெறியில் சரணடைவது எளிமையானது. திருமால் அவதார நிலையிலுள்ள தலங்களுக்குச் சென்று சரணம் சொல்லி வணங்கினால் போதுமானது. கடினமான விரதங்கள், சடங்குகள் தேவையில்லை. அவனே எல்லாம் என்ற சிந்தனையோடு செயல்பட்டால், அவன் அருளைப் பெறலாம். அருளைப் பெற்றுவிட்டால் வாழ்வில் துன்பம் நீங்கும் பாவம் அணுகாது. பிறப்பு அருபடும் பெரும்பேறு கிட்டும். இறைவனது அடியை அடைவதே வாழ்வின் பெரும் சொத்தாகும்.

நம்மாழ்வார் தாம்பெற்ற அனுபவத்தை வைத்துக் கொண்டு மக்களுக்கு பல கருத்துக்களை வழங்கியுள்ளார். மனிதப் பிறவியில் தான் இறைவனை வழிபட முடியும் இறைவனை வழிபட்டால்தான் பிறவியென்னும் பிணி நீங்கும். முக்தி கிடைக்கும் என்பதை தொழுமின்


**Isbn Number: 978-93-91115-48-7**

அவனைத் தொழுதால் வழிநின்று வல்வினை மாள்வித்து அழிவின்றியாக்கம் தருமே என்று கூறியுள்ளார். எனவே அத்தகைய இறையனுபவத்தை நம்மாழ்வாரின் பாசுரங்களில் இருந்து மதுரகவியாழ்வார் இறை அனுபவத்தை பெற்று, அவர் தன்னுடைய பாசுரங்களில் வெளிப்படுத்தினார். நம்மாழ்வாரையே தன்னுடைய இறைவனாகப் பாவித்து பாசுரங்களையும் இயற்றினார். நாம் அனைவரும் அப்பாசுரங்களில் உள்ள இறை அனுபவத்தை அனைவரும் பெறுவோமாக!.

**துணைநூற்பட்டியல்**


[1] முனைவர் கமலக்கண்ணன் இரா. வா. *நாலாயிர திவ்வியபிரபந்தம்*, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600017, 1999.

[2] நம்மாழ்வார் ஆய்வுக்கோவை, அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் வெளியீடு, ஸ்ரீஅரங்கம், திருச்சிராப்பள்ளி - 620006, 2011-12.

[3] டாக்டர் வரதரானார்.மு, *திருக்குறள் தெளிவுரை*, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17, 1978.

[4] வைபவம் ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான் கண்ணன். சு சுவாமி, ரவி பிரிண்டர், சென்னை - 600011, 1987.


 **Isbn Number: 978-93-91115-48-7**